[illegible]

[illegible] (பாவை)

[illegible]

T.D.: 3309

RRM: 73-III-1878

DIGITIZED

[illegible]892M[illegible]
N78
116890

பிஸ்மில்லாஹிற்றகுமானிற்றகீம்.

அந்தமாநகரையாசாண்ட

அகம்மதுசாகிபுகுமாரனாகிய

# அப்பாசு நாடகம்.

இராமநாதபுரம்

இரவுண்ஷாப்புக்கடை

ப. வெ. முகம்மது இபுறுகீம்சாகிபு

அவர்களால்

நூதனமாகவியற்றியது.

இஃது,

வீரணந்தோட்டம்

கோவிந்தநாயகரால்பரிசோதிப்பித்து.

திருநெல்வேலிப்பேட்டை,

வககாளம்-முகம்மதுராவுத்தர்

குமாரர்

ம. குதணாராவுத்தரவர்களால்

திருவொற்றியூர்,

இருசப்பமுதலியார்-குமாரர்

பரசுராமமுதலியாரது

பாப்பிர்மமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

ஹிஜறத்து-௲௨௱௯௰௫ ஹு-ஜமாதிலவ்வல்மீ.

இந்தப்புத்தகம் கனம்பொருந்திய கவர்ன்மெண்டில்

ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது.

# சாற்றுக்கவிகள்.

இ-ம்-கலியாணி-ரூபகதாளம்.

பல்லவி.

அப்பாநாடகம்போலொப்பாயிப்பாரிலுண்டோ
அப்பாதெரிந்துசெப்பாய்

அநுபல்லவி.

தப்பாத்தபோதனரும்-சங்கத்தமிழ்வலோரும்
சாதுர்யமென்சொல்ல-தகுந்தகதையாம்நல்ல (அப்பா)

சரணங்கள்.

நீடும்புகழ்சேர்திருநெல்வேலிப்பேட்டையென்னு
நகரில்சீமைமுழுதும்திகழ்ந்தும்பிரபலமன்னு
பாடும்புலவோர்க்குப்பொற்பணமளந்துகொடுக்கும்
பரிவின்மிகுமுகம்-மதுரவுத்தர்பெறு
தருவைநிகர்காதலமருவுமகு
தணாவுத்தரிசை-யெனத்தண்சொந்த
தனங்கொடுத்துயிசைவித்துச்சிறந்த (அப்பா)
நாகநாட்டைப்பழிக்கும்நகராயச்சொலும்பிராம
நாதபுரத்திற்கல்வி நன்றுயுணர்ந்துக்ஷேமம்
மாகவாழ்ந்திடும்-ப-வெ-முகம்மதுபுறுகீம்
நாடகத்தமிழ் நடையிலெழுசா
நாடியெழுவிததாளமமைவுற
நவரசச்சுவை யமுதமிதுவென
புவியின்மிக்கவர்க்குதவுமதிகன (அப்பா)
வரமதுதரும்வடிவாம்பிகைவளரொற்றி
மாநகரிருசப்பமகிபன்செய்தவமுற்றி
பரமசிவமேயெனநுபஜிக்கும்படியுதித்த
பாக்யனதிக-சிலாக்கியனுயர்கன்
யோக்யன்தவறிலா-வாக்யநதிகுல
பரசிராமப்பிரபு-டீகன்றன்பரப்
பிரமமுத்திராக்ஷஅச்சிற்பதித்திட்ட (அப்பா)

---



# இந்நூலின்சரித்திரச்சுருக்கம்.

நெடியகடல்சூழ்ந்த பூலோகத்தின்கண் மஹாசிறப்புற்றோங்கிய தேசங்களிலொன்றாகிய அந்தமாநகரை அரசாட்சிசெலுத்துகின்ற இராஜமாளியாஜஹூஜிக மஹாராஜராஜஸ்ரீ அகமதுசாவென்னும் அரசராவருக்கு எல்லாப்பாக்கியமுநிறைந்து புத்திரபாக்கியமில்லாமல் மனமிழ்ச்சியானது குறைந்து வழுபிசுக்கினமுதலிய ஆதுலர்களுக்கு க்கயிர்கயிறுத்தெல்லும் முப்பத்திரண்டு தருமமுதலாகிய சத்காரதுமேந்து பள்ளிமுதலிய சாவடியுங்கட்டி குழிகளிடத்தில் ஆதிலொருகடமை வாங்கி நீளொழிசெலுத்தி நீதத்துடனெ எல்லாருடைய மனதிற்குமோர்குறைவின்றிதன்னுயிர்போல்மன்னுயிரையுங்காத்து அரசுசெலுத்தி வருகிறநாளையில் அல்லாகுசுபுகாணுதத்த ஆலாவுடைய வுதவியால் ஒருபுத்திரன் பிறக்க அதற்கு அப்பாசு என்னும் பெயர்வைத்துவளர்த்து சாயர்த்தியனு யிருக்கிறகாலையில் அகமதுசா என்பவரும் அவர்மனைவி மதியமாதும் தனது புத்திரனைப்பார்த்து தாயனைமறந்து இந்தப்பூலோகத்திலுள்ள எவர்களும் நமக்கு நிகரல்லவென்று பெருமையடைந்திருக்கையில் (பெருமையடைந்தவர் சிறுமையடைவார்களென்கிற பழமொழிபோல்) ஆதிநாயகனுடையவிதிப்பயனால் அப்பாசென்பவர் காட்டுக்குப்போய்வேட்டையாடப்போனவிடத்தில் அவருக்குத்தாகமேலிட்டுப்பிறலாபிக்கையில் காலாட்கள் சலந்தேடிப்போனவிடத்தில் ஓர்பானையிற் கள்ளிருந்தது அதைத்தெரியாமல்தண்ணீரென்றரசனுக்குக்கொடுக்க அதைக்குடித்தவுடனே வெறிமீறினதால் அச்செய்தியை அகமதுசாவுக்கு ஓர்வழித்தியரால் வெறிகொள்ளச்செய்திருக்க அந்நகரத்திலுள்ளசிலபெரியார்கள்கூடி மார்க்கப்படி ஐந்துவருஷமஅந்நகரைவிட்டுக் காட்டுக்குப்போய் வரும்படியாய்ச்சொல்ல அதுபோல அகம்மதுசாவும் அவர்மனைவிமதியமாதும் இவர்கள்புதல்வனப்பாசும் அந்நகரைவிட்டுக் காட்டிற்போகும்போது பொருள்கள்முதலானவாவற்றையுங்கள்ளர்கள் பறித்துக்கொண்டுபோகப் பின்புபாலவனங்களிற்போய் உணவுமுதலிய ஆகாரங்களுக்குவருந்தப்பட்டு நடக்கிறதற்கு முடியாமல் தந்தைதாயிருவரையும் அப்பாசு தோளிற்றூக்கிக்கொண்டு நடக்கையில் காலில்கல்லிடறிவிழுந்து மூர்ச்சையாகித்தெளிந்தெழுந்து மிகவும் வருந்திநடக்கையில் சிந்துநோதுறைகண்டிருநாள் பிச்சையெடுத்துண்டுமறுநாள்கூலிவேலைக்குப்போய் வேலையகப்படாமல் ஒருதினத்திலே அப்பாசுடனிருக்க அந்தநகரதயாருடம் அரசனுடைய பயிரிப்பவழியானது ப

ஜந்து இவர்மார்பில் வந்திருக்க அதைப்பிடித்து விற்பனைசெய்தாலுணவுக்காகுமென்று ஒருவீதியில் விலைகூறிநிற்கையில் அவ்வூராயாளுந் தாமிரராசனுடைய காவற்காரர்கள் பயிரிப்பக்ஷியையும் அப்பாசையுங்கண்டு கட்டிப்பிடித்துக்கொண்டுபோய் தாமிரராசனிடத்தில்விட அவர் இவர் வரலாற்றையெல்லாங்கேட்டு அகமதுசாவையும் அவர்மனைவியையும் அழைத்துவந்து அவர்களுக்கும் விருந்துமுதலாகியது மளித்துப்பிரியமாயிருக்கையில் அப்பாசு தாமிரராசனிடத்தில் ஆயிரம்பொன்னும் ஒரு குதிரையும்வாகனம்வாங்கிக்கொண்டு அதற்கீடாக தாயுந்தகப்பனையும்வைத்துவிட்டு அந்நகரைவிட்டு ஒருசத்திரத்திற்றங்கியிருக்கையில் இந்தத் தாமிரராசன் தன்மனைவி வெளிப்பட்டதையெண்ணி ஒருசேவகனிடத்தில் ஒருவோலையெழுதிக்கொடுத்து இதுபோலசெய் யென்றனுப்ப அவனும் அப்பாசுமன்னன் தங்கியிருக்குமிடம் போய்ச்சேர்ந்து ஒன்றுக்கொன்று விசாரித்து சோர்வுபார்த்து ஓலையின்பிரகாரமுடிக்கலாமென்றிருக்கையில் ஆகஸ்மாத்தாய் காற்றுமழையும் வந்துசேவகனையும் அவன் பரியையும் அழுத்திக்கொண்டுபோய்விட அவன்சோளிப்பையும் ஓலைச்சுருளும் அப்பாசுகையிலகப்பட அதைப்பார்த்துப் பிரலாபித்துக்கிழித்து ஓர்கிணற்றிற்போட்டுவிட்டு அதிசீக்கிரமத்தில் சீனதேசத்தில் ஓர் கிழவிவீட்டிற்றங்கி அவ்வூராயாளும் பகுவீரராஜன்மகள் மிகர்பாவென்பவள் சொல் மசலாவுக்குப்பொருட்சொல்லி அவளைத்தோற்கும்படிச்செய்து அவளையும் நிக்காவென்னுங் கலியாணமுமுடித்து தன்தாய்தகப்பனிருக்கும் பதிக்குப்போய்ச்சேர்ந்து அவர்களையுங் கூட்டிக்கொண்டு முன்காவிரடிவீழ்ந்த பாலைநிலத்தில் புதிதாயொருபட்டணமும் பள்ளியுமுண்டாக்கி அதுகளிற்குடியேற்றி நீர்வளமுண்டாகும்படிச் செய்து சந்தேசமாகிய அந்தமாநகரிற்போய் அகமதுசாய்புக்கு இரண்டாவதுபட்டமுங்கட்டி தேசதேசத்தரசர்கள் முதலான குடிபடைகளும் அவர் ஆக்கியாபித்தபடி நடந்துகொண்டு வைபவமாக மங்களகரமாய் வாழ்ந்துண்டு சுகபோகமாயிருக்கஇஸ்ஸானவை இங்ஙனம் சிற்றறிவுடைய சிறியேனாகிய இராமநாதபுரம் இரவுண்ஷாப்புக்கடை-ப-வெ-முகமமது இபுருகிம்சாகிபென்பவன் யாவர்களும் எளிதிற்படித்து ஆனந்தமெய்தச்சிபடையும்படியாய் நாடகாலங்காரமாய்ச்செய்தேன் இதில் ஏதேனும் எழுத்துக்குற்றம் சொற்குற்றம் பொருட்குற்றமிருப்பினும் அதுகளைத்திருத்தி அல்லாவுக்காகமனம் பொறுத்துக் கொள்வீர்களென [illegible].

இங்ஙனம்,
இராமநாதபுரம்
இரவுண்ஷாப்புக்கடை
ப-வெ-முகம்மதிபுருகீம்சாகிபு.

பிஸ்மில்லாகிற்றகுமானிற்றகீம். 

# அப்பாசு நாடகம்.

காப்பு.

கடவுள்துதி - விருத்தம்.

மருகமழுந்தமானை மகிழ்ச்சியோடரசுசெய்த
திருவளரகம்மதுசாகிபுவின்குமாரனை
பெருமைப்பாசுநாடகந்தனைப்பேசுதற்கு
கருவிலுட்கருவாயுள்ள கர்த்தனைக்கருதுவோமே.

இதுவுமது.

பந்தமாய்ச்சினமாளும் பகுவீரவரசன்பெற்ற
சுந்தரமிகர்பாவென்னுந் தோகைசொல்மசலாத்தன்னை
அந்தமாய்வென்றநல்லப் பாசுநாடகத்தைப்பாட
எந்தனையாளும்வல்ல விறைவனுங்காப்புத்தானே.

இதுவுமது-அறுசீரடி யாசிரியவிருத்தம்.

ஆதமுமுதலாகவைம்பதினிலப்துல்லாமகவாய்வந்த
நீதநபியிறசூலின்பொன்னடியையெந்நாளும்நெஞ்சில்வைத்து,
மாதவஞ்சேர்நால்யார்கள்மலர்ப்பதத்தைமறவாமற்றினந்துதித்து
சோதிபசறுகைன்முகிந்தீன் றுணையடியையெப்போதுந் துதிசெய்வேனே,

அவையடக்கம்.

மங்களஞ்சேரந்தமாநகராயாண்ட
மன்னனகமதுசாகிப் மகவாய்வந்த
சிங்கமெனுமப்பாசுநாடகத்தைச்
சிறப்புள்ளவுலகமதிற்சிறியேன்பாட
எங்குமுளபெரியோர்கள்கற்றுணர்ந்தோர்
யிக்கவியிலேதேனும்பிழையிருந்தால்
சங்கையின்றியதைத்திருத்திமனம்பொறுக்கச்
சாற்றினேனவர்களையான்போற்றினேனே.

ஆக்கியோன்பெருமை.

பூச்சக்ரதவளக் குடைநிழற்றங்கு பிரபலனப்பாசநாடகத்தைப்
புகலுமீச்சுவரப் பங்குனியிருபத் திரண்டினிலிசைத்திடத்துவக்கி
மாச்சிறந்தொளிரு மேதகுவெகுதா னியவிடம்முதற்றெய்தி
வளாயிதும்ராம நாதமாம்புரத்தி லிசைமிகுறவுண்ஷாபேஜெண்டு

காய்ச்சினமிலா-ப-வெ-முகமதிபுருசிம்பாடினேன்பாவைகுழ்கவய
கவிஞர்மற்றுள்ளோர் கருத்தினிலின்பக் களிகறவாய்மடுத்துண்ண
எச்சிலாதிந்த நாடகத்தமிழை யிரவிவெண்மதியமுள்ளளவும்
யாவருமெளிதி லுணர்ந்திகபரமா மினியவாழ் வடைந்துவாழ்குவரே.

தோடயம்-இ-ம்-நாட்டை.

வல்ல அந்த மாநகரை வரிசையுடனுண்டிருந்த
செல்வனப்பாசியினுடகச் செழுந்தமிழைச்சொலவே
எல்லவருந்தொழுதேத்துமிறையவனைமனத்திருத்தி
அல்லும்பகற்றொழுதிறைஞ்சி யகத்துபவையொழிப்பாம்
பாந்தமாய்ச்சீனநகர் பகுவீரராஜன்பெற்ற
ஏர்திழையாமிகர்பானே யெய்த்தகதைசொலவே
சாந்தமொடுதருமநெறி சார்ந்தபெரியோரிதய
பூந்தவிசில்வினிதிருக்கும் பொருளைநிதம்பணிவாம்
அகமதுசாபெற்றசுத னப்பாசுநாடகத்தை
மகிதலத்தில்மனமகிழ்ந்து மதாமுடன்சொலவே
சுகலத்தைச்செகத்தெவர்க்குஞ் சொரிந்தருளுமுகம்மது
விசுரின்மலர்ப்பதத்துணையை நிதமுந்துதித்திடுவோம்
திருநிறைந்தவிறகுலின் றிருவருளாலிக்கதையை
அருமையுடனம்புவியி லாசையுடன்பாட
பெருமைபெற்றபுவியிலுள்ள பெரியோர்கவிவாணரிதில்
உரியபிழையிருந்தாலு முளம்பொறுத்துக்கொள்வீர்

பொது-விருத்தம்.

ஆதிநன்னபிமாருக்கும் அரியவலிதருலுக்கும்
வேதமாமறையுணர்ந்த மிகுபெரியோர்களுக்கும்
சீதவப்பாசுநாட கஞ்சொலுஞ்சிறியோருக்கும்
மாதவர்நாவியார்க்கு மகிழ்ந்துமங்களஞ்சொல்வேனே.

மங்களம்-இ-ம்-பந்துவராளி-ஏகதாளம்.

பல்லவி.

மங்களம்-நித்ய-மங்களம்-சுப மங்களம்.

அநுபல்லவி.

இன்னிலமெற்றும்புகழு மன்னவ னப்பாசுக்கு (மங்களம்)

சரணங்கள்.

மங்களமிறையோனுக்கும் வள்ளலிறசூல்தனக்கும்
சங்கைநபிமார்களுக்குந் தாணியிலுள்ளோருக்கு (மங்களம்)
செல்வநாவியார்களுக்குந் திகழசஹாபாக்களுக்கும்
வல்லமுகியித்தீனுக்கும் வாழுங்காதிரொலிக்கு (மங்களம்)



எங்கும்புகழ்தங்கிடுநெல் பொங்கும்நெல்வேலியூர்வாழும்
வங்காளமகுதனர்க்கு மாவிலமுள்ளவருக்கு (மங்களம்)
அச்சியற்றப்பாடிவைத்து அகிலத்துள்ளோர்கட்கீந்த
முச்சகம்போற்றும்-ப-வெ- முகம்மதிபுருசிமுக்கு (மங்களம்)
செப்பருமொற்றியூரிருக்கப்பமுதலியர்தாத
ஒப்பிலாப்பாசிரா மப்பிரபுவினுக்குநல்ல (மங்களம்)
தர்மவானன்னவன்சொந்த தன்னிதியால்வைத்தபரப்
பிரம்மவிலாசமெனுமச் செந்திரந்தனக்குநித்ய (மங்களம்)

கட்டியக்காரன்வருகிற-பொது-விருத்தம்.

மாதமும்மாரிபெய்ய வாழ்ந்திடுமந்தமாநில
வேதமேதவறிடாத வேந்தகமதுசாய்பின்முன்
பாதமேபணிந்துபோற்றிப் பணிவிடையேவல்செய்யும்
நீதவான்கட்டியக்கார னிவைத்திடுகிறான்றினே.

வசனம்.

அகோதெப்படியென்றால் அந்தமாநகரை அரசாக்கிசெலுத்தும் இராஜமானிய ராஜபூஜிதரான அகமதுசா அரண்மனைவாசலுக்காகும் கட்டியக்காரன்வருகிறவிதங்காண்க.

கட்டியக்காரன்வருகிற-தரு-இராகம்-மோகனம்-அடதாளம்.

பல்லவி.

கட்டியக்காரனும்வந்தானே-ஒய்யாரமான
கட்டியக்காரனும்வந்தானே

அநுபல்லவி.

கட்டியக்காரனும்வந்தான் காலிற்சட்டைபணிந்து
மட்டிலாப்பணியணிபூண்டு மன்னகமதுசாவாசற் (கட்)

சரணங்கள்.

சரிகைதலைப்பாகைக்கட்டி-தங்கக்கடுக்கன்கள்மாட்டி
இருகையும்வீசிக்கொண்டு-எட்டிநடைநடந்து (கட்டி)
கண்டவர்நடுங்கயிரு-கண்களையுருட்டிக்கொண்டு
திண்டிமுண்டாகவேதான்-திடலென்றதட்டிக்கொண்டு (கட்)
பற்றலர்நடுங்கிடவே-பல்லைக்கடித்துக்கொண்டு
கற்றியெமிசைமுறுக்கி-துலங்குந்தடியுங்கொண்டு (கட்டி)

கட்டியக்காரன்-பறையறைபவனுக்குச்சொல்-விருத்தம்.

மூர்க்கிகட்டியக்காரன் முரசறைபவனைக்கூவி
அர்த்தமாய்க்கொலுவுக்கிப்போ அரசனார்வாராரென்று
விர்தைசேராநமாநகரில் விளங்கிடுஞ்சனங்கட்கெல்லாம்
சந்தியென்முரசமேற்றித் தாக்கியேவிருதுகூறுவாய்.

வசனம்.

அகோவாரும்பிள்ளாய் முரசறைபவனே-இந்த அரசர்களை யரசாக்கி செலுத்தும் இராஜாதிராஜனை நமது அகமதுசாவானவர் இப்போதுகொலு வுக்குவருகிறபடியால் இந்நகரத்திலுள்ளவர்களுக்கெல்லாம் வீதிகள்தோறும் அலங்கிர்தஞ்செய்யும்படியாய் ஆக்கியாபித்துவாரும்பிள்ளாய் (மு-சொ-வ-ம்) நல்லதுமகாபாக்கியங்கட்டியக்காரனே,

முரசடிப்பவன்சொல்-தரு-இ-ம்-நாதநாமக்கிரிகை-அடதாளம்.

ஆனைமீதில்வருமன்னரே எங்கள்-
அகமதுசாகொலுவில்வருகிறார்-நீங்கள்
தானதருமமெத்தச்செய்யுங்கள் ரத்நத்
தூர்ணக்கால்கள்நாட்டிவையுங்கள்
பச்சைப்பரியில்வருமன்னரே நமது
பார்த்திபர்கொலுவுக்குவருகிறார் இப்போ
பிச்சங்கிரீடமுடிவனையுங்கள் நல்ல
மேன்மையானபணிபுனையுங்கள்
மானவகமதுசாவருகிறார்-கொங்கர்
வங்கர்கலிங்கர்கொச்சிதெலுங்கரோ-உயர்
ஞானவேந்தரடிபணியுங்கள் இந்த
நகரெங்குஞ்சிங்காரஞ்செய்யுங்கள்
குங்குமச்சந்தனக்கோதையரேநக்
கொலுவுக்ககமதுசாவருகிறார்-நீங்கள்
தங்கத்தால்நிறைகுடம்வையுங்கள்-தெருவில்
சாரக்கரும்புகநாட்டிவையுங்கள்
பவளவிதழ்சிறந்தபெண்களே-எங்கள்
பார்த்திபர்கொலுவுக்குவருகிறார்-நீங்கள்
தவளவளையல்கையிற்சேருங்கள்-இந்தத்
தரணியரசர்வாரார்பாருங்கள்,

அகமதுசா-கொலுவுக்குவருகிற-பொதுவிருத்தம்.

தானதர்மவேதமுறையாதுந்தப்பா-
தழைத்தோங்கவந்தமாநகரையாளும்
மானமுள்ளவகமதுசாமன்னரோடும்
மந்திரிமார்காவலர்கள்மருங்கிற்சூழ
சேனையொடுகொடியாடமேளதாளம்
திமிதிமென்றேமுழங்கிவரக்கவரிவீச
கானமுள்ளகவிவாணர்கவிகள்கூற
கனகரத்நக்கொலுவதனிற்றான்வாராரே.



கட்டியன்சொல்-பொதுவசனம்.

அகோதெப்படியென்றால்-இராஜமானியராஜபூஜித மகாராஜராஜஸ்ரீ நம து அகமதுசா கொலுவுக்குவருகிறபடியால் இச்சபையிலுள்ள யாவர்களும் ஒன்றும்பேசாமல் ரொம்ப அதபுடனே எச்சரிக்கையாயிருக்கவேண்டியது.

அகமதுசா கொலுவுக்குவருகிற-தரு.

இ - ம் - தோடி - மீசரதாளம்.

சந்த்ரவட்டக்குடைநிழலங்க-தவளசாமரையிலங்க
சிந்தையில்நெறிதவறாச்-செல்வராஜன்கொலுவில்வந்தார்
தாளமேளம்விருதுபொங்க-சந்த்ரவுடைவாள்தைத்தங்க
அலம்புகழ்சிம்மாசனத்தில்-அகமதுசாகொலுவில்வந்தார்
மந்திரிமார்புடைசூழ-மன்னமண்டலீகர்தாழ்
அந்தமுள்ளராஜரோடு-அகமதுசாகொலுவில்வந்தார்
தாதியர்நடனமாட-தக்கபட்டுவான்கள்பாட
மாதவஞ்சேரகமதுசா-மன்னவர்கொலுவில்வந்தார்

அகமதுசா-மந்திரிக்குச்சொல்-விருத்தம்.

என்னுடன்கொலுவிருக்கும் இயல்புமந்திரியேகேளாய்
மன்னர்மன்னவர்களெல்லா மகிழ்திறைகட்டுறாரா
இன்னகர்தன்னிலுள்ளோர் எழிலுடனிருக்கின்றாரா
நன்னயமுடனெனக்கு நவிலுவாய்பிரியத்தாலே

வசனம்.

அகோகேளுமந்திரி நம்முநகரத்தைச்சேர்ந்த தேசங்களிலிருக்கு மன் னமன்னர்கள் திறைகட்டிவருகிறார்களா இந்நகரத்திலுள்ளயாவர்களும் வே தமுறைதவறாமல் நீதத்துடனிருக்கிறார்களா அதைநானறிய விபரமாய்ச்சொ ல்லுமந்திரி-மந்திரிசொல்வசனம்-அப்படியே சொல்லுகிறேன் தவுலத்தாகியசி ரோமணியே.

மந்திரி-இராசனுக்குச்சொல்- விருத்தம்.

எங்களையாதரிக்கு மியல்புளவரசேகேளீர்
சங்கையாய்மன்னரெல்லாந் தான்திறைகட்டிவாரார்,
மங்களகரமதாயிம் மாநகர்தனிலுள்ளோர்கள்
துங்கமாய்நெறிமார்க்கத்திற் சோர்விலாதிருக்கின்றாரே.

வசனம்.

அகோகேளுங்கள் இராசராசர்களுக்கெல்லாம் சிம்மமேருவே நமது தேசத்திலுள்ள இராசாதிராசர்களெல்லாம் யாதேனுங்குறைவில்லாமல் திறை கட்டிவருகிறார்கள் இந்நகரிலுள்ளபேர்களனைவரும் தங்களுடையசக்கரநெறி க்குளிருந்து வேதமுறைமைப்படி குறைவில்லாமல் நடத்திவருகிறார்கள் அரச ர்கள்தாதிருபண்ணலாகிய சிரோன்மணியே.

இராசன்-மந்திரிக்குச்சொல்-மட்டுவிருத்தம்.

நல்லதப்படியாகடனஞ்செய் நாட்டியப்பெண்கள் தம்மை
வல்லநற்சபைக்கிப்போது வரவழைத்திடச்செய்வாயே.

வசனம்.

நல்லதுமந்திரி, நம்மிடசபையில்நடனஞ்செய்யும் ஸ்திரிகளை அதிசீக்கிரத்தில் வரவழைப்பாய்மந்திரி-(ம-சொல்-வ-ம்) மகாபாக்கியம் இதோவரவழைக்கிறேன் ராசசிரோன்மணியே.

மந்திரி-கட்டியனுக்குச்சொல்-மட்டுவிருத்தம்.

கட்டியக்காராகேளாய் கடுகிநீசென்றுநாட்டியப்
பட்டபஸ்திரீகள்தம்மைப் பரிவுடனழைத்துவாடா.

வசனம்.

அகோகேளுங்கட்டியக்காரா நம்மிடகொலுவில்நடனஞ்செய்யும் நாட்டியப்பெண்களை அழைத்துவாரும்பிள்ளாய் - (கட்-சொ-வ-ம்) மகாபாக்கியம் இதோ அழைத்துவருகிறேன்மந்திரியே.

கட்டியன்-நாட்டியப்பெண்களுக்குச்சொல்-விருத்தம்.

திங்கள்சேர்முகத்தினாரே தெரிவையர்க்கரசியேகேள்
உங்களையரசனிப்போ துவப்புடனழைத்ததாலே
மங்கையரெல்லாமொன்றாய் மகிழ்வுடன்பணிகள்பூண்டு
துங்கமாங்கொலுமுன்பாகத் துரிதமாய்வருகுவீரே.

வசனம்.

அகோகேளுங்கள்பரதநாட்டியஞ்செய்யாநின்ற நடனமாதர்களேஇராசாதிராசனுன நமதுஅகமதுசா உங்கள்பேரில்மனங்களிகூர்ந்து அழைத்துவரும்படியாய்ச்சொன்னர் ஆகையால்நீங்களியாவரும் ஆடையாபரணாலங்கரித்து உடனே அதிசீக்கிரமத்தில்வாரும்பெண்களா (நடன-சொ-வ-ம்) அப்படியே வருகிறோமப்பாகட்டியக்காரா.

நடனப்பெண்கள்வருகிற-பொது-விருத்தம்.

சங்கையினிற்றலைமுழுகிமயிலைச்சீவி
காந்திபெறப்பின்னியதிற்குச்சுநாக்கி
செங்கைவளைகிலுகிலெனவாடைபூசித்
திவ்வியமார்முகமிலங்கமையுந்தீட்டி.
தங்கமணியாபரணமாலைபூண்டு
தளதளெனுஞ்சரிகையுடைதாங்கள்கட்டி
மங்கையர்களிருபுறமுஞ்சோடுசோடாய்
மன்னவர்முன்னடனஞ்செய்யவருகின்றாரே.



வசனம்.

அகோதெப்படியென்றால்-இந்தப்பிரகாரம் கட்டியன் நடனமாதருக்குச்சொல்ல அவர்கள் ஆடையாபரணமுதலாகியதும்அணிந்து அகமதுசா கொலுவுக்குவருகிறவிதங்காண்க.

நடனப்பெண்கள் கொலுவுக்குவருகிற-தரு.

இ-ம்-காம்போதி- அடதாளம்.

பல்லவி.

நாடகசாலைப்பெண்வந்தாரே-நடனஞ்செய்ய
நாடகசாலைப்பெண்வந்தாரே.

அநுபல்லவி.

நாடகசாலைப்பெண்வந்தார்-பாடகச்சிலம்புகொஞ்ச
சோடுசோடாகக்கூடி-பாடிநடனஞ்செய்ய (நாட்டி)

சரணங்கள்.

நெத்தியிற்றிலதமின்ன-வச்சிரப்பதக்கந்துன்ன
சுத்தியேயிருகைவீசி-நத்தியேநடனஞ்செய்ய (நாட்டி)
முத்துச்சரங்குலுங்க-மோகனமாலையிலங்க
நத்துமூக்குத்திதொங்க-நடனவுல்லாசமாக (நாட்டி)
அந்தமாநகரையாளும்-அகமதுசாகிபுமுன்னே
விந்தையாயுடல்குலுக்கி-மெள்ளவேநடைநடந்து (நாட்டி)

நடனமாதர்கள் நடனஞ்செய்யும்-ஓரடி-தரு.

இ-ம்-தன்னியாசி- திரிபுடைதாளம்.

பல்லவி.

பெருகுதேமருக்கினாயா-ஆசைவிரகவெள்ளம்
பெருகுதேமருக்கினாயா

அநு பல்லவி.

தரவேணுமெங்களரசேயுனது
தயவுமகிழ்ந்துதருகவாசை (பெருகுதே)

சரணம்.

கச்சிவில்தனங்கள்மீறுதே-என்துரையேயிப்போ
காமன்கணைதக்கணைகள்நேருதே
இச்சையாயயிர்தழுருதே-என்துரையேகொடி
யிடையினிற்கலைகள்சோருதே
என்செய்வேனொருவிதமாய்வருதே
இருந்திருவரும்பொருந்தவேமனம்
கொஞ்சியேயிதழமிர்தமூருதே
தொங்கைதந்தும்பில்கொஇக்குதேவெள்ளம் (பெருகுதே)

இராசன்-மந்திரிக்குச்சொல்-விருத்தம்.

என்னிடமனதுக்கேற்ற வியல்புமந்திரியேகேளாய்
நன்னயக்குன்றத்தாரான நடனமாதாகளுக்கிப்போ
சொர்ணமும்புணிகளாடை துலங்கவேமேன்மேலீந்து
மன்னிவேடிக்கைசெய்யு மல்லரையழைப்பிப்பாயே.

வசனம்.

அகோவாரும் அமீர்மந்திரி இப்போது நமக்குமுன்பாக நடனஞ்செய்தமாதர்கள் மனமகிழும்படியாய் வேண்டிய ஆபரணமுதலிய வெகுமதிகளைக் கொடுத்தனுப்பிவிட்டு வேடிக்கைமுதலிய மல்லுத்தஞ்செய்கின்ற மல்லர்களை அதிசீக்கிரமத்திலழைப்பிப்பாய்மந்திரி. (ம-வ-ம்) அப்படியே உங்களுத்திரவின்பிரகாரம் நடனமாதர்களுக்கு இதுங்கொடுத்தனுப்பிவிட்டு மல்லர்களைவரவழைக்கிறேன் அரசசிகாமணியாகிய தவுலத்தே.

மட்டு-விருத்தம்.

பரிசினைப்பெற்று-பாவையர்சென்றபின்
வரிசையாய்மல்லர்கள்-வருவதைச்சொல்வாம்.

வசனம்.

அகோதெப்படியென்றால் அமீர்மந்திரியானவர் அரசன் உத்திரவின்பிரகாரம் நடனமாதர்களுக்கு வெகுமதிகள்கொடுக்க அவர்கள்பெற்றுக்கொண்டுபோனதின்பின் மல்லர்கள் கொலுவில் வேடிக்கைசெய்ய வருகிற[illegible] காண்க.

மல்லர்கள்வருகிற-பொது-விருத்தம்.

கத்திகேடயமுஞ்சூரி கனத்ததோர்பாலாயிட்டி
சுத்தியேயிடையிறசோத்து துலங்குசல்லடமும்போட்டு
வெற்றிசேராசன்முன்னே விதவிதக்கொடிவித்தை
சுற்றியேலாகையோடு தோன்றினர்மல்லர்தாமே.

வசனம்.

அகோதெப்படியென்றால் அகமதுசாகொலுமுன்பாக பதினெட்டாயுதங்களும் இடையிற்கட்டிக்கொண்டு மல்லர்கள்ஜெட்டிகள்வருகிறவிதங்காண்க.

மல்லர்கள்வருகிற-தரு-ஆனந்தபைரவி-ஆதிதாளம்.

பல்லவி.

மல்லர்கள்வந்தாரே-கொலுமுன்னே
மல்லர்கள்வந்தாரே

அநுபல்லவி

மல்லர்கள்வந்தாரே உல்லாசமாகவே
சல்லாபவித்தைகள் எல்லாமதிந்திடும் (மல்லர்)



சரணங்கள்.

அந்தமாநகராளும் அகமதுசாப்புக்கு
விந்தையாய்சலாஞ்செய்து வேடிக்கைகாட்டவே (மல்லர்)

இந்திரஜாலங்கள் மந்திரவித்தைகள்
சுந்தரராஜன்முன்-விந்தையாய்க்காட்டிட (மல்லர்)

ஒருவர்க்கொருவர்மல்லு-உயர்வாநடத்திக்கொண்டு
கருதுமரசன்முன்னே-கத்திவித்தைகள்காட்ட (மல்லர்)

பொதுவிருத்தம்.

வந்ததோர்மல்லர்தாமும் மல்லுத்தம்பலவுஞ்செய்ய
அந்தகமதுசாதானு மகமகிழ்ந்தவர்களுக்கு
சுந்தரப்பணிகளாடைச் சொருசுடனீந்துப்பின்னால்
மந்திரிதம்மைப்பார்த்து வகைபலசொல்லலுற்றார்.

வசனம்

அகோதெப்படியென்றால் இவ்விதமாக கிரடிகள்முதலிய பலவித்தைகள்செய்த மல்லர்களுக்கு வெகுமதிகொடுத்தபின்பு அகம்மதுசாவானவர் தனது மந்திரியாகிய அமீரைப்பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க.

அகம்மதுசா-மந்திரிக்குச்சொல்-விருத்தம்.

என்னுடன்கொலுவிருக்கு மெழிலமீர்மந்திரிகேளாய்
இன்னகர்முழுதுமாள வெனக்குப்பின்னொருகுழந்தை
தன்மையாயில்லாதாலே தவிக்குமென்மனதுக்கேற்ற
நன்னயவசனந்தன்னை நவிலுவாய்ரியத்தானே.

இராகம்-அகமதுசாசொல்-தரு-இ-ம்-சாவேரி-அட்டதாளம்.

மந்திரியமீரேகேளும் வாழ்வதுநீர்மேற்குமிழி
இந்தவுலகத்திருந்து ஏற்கவேயரசுசெய்தேன்
வணங்காதமுடியாசைவந்தடிவணங்கச்செய்தோம்
இணங்காதமருவலர்முன் எழுந்துப்டைபொருதிவென்றோம்
வென்றோம்வெகுதேசமெல்லாம் விருதுசெய்துகம்பம்நாட்டி
கொன்றுதிரைகொண்டுவந்தோம் கொற்றவனென்பேரும்பெற் [றோம்
இப்படியேநாமிருக்க எமக்குப்பின்னரசையாள
எப்படியோபுத்ரனில்லை என்னசெய்வேன்மந்திரியே
பிள்ளையில்லாப்பாவியென்று பூலோகத்தோரேசுவாரோ
எள்ளவில்லாவுலகதனில் என்னபாவஞ்செய்தோமோதான்

பொது-விருத்தம்.

இப்படியரசன்றானு மேங்கியேபுலம்பும்போது
மெய்ப்புள்ளமந்திரிகேட்டு மிகுதியாய்வணங்கிச்சொல்வான்
றெப்புநாயகனுனக்கு நேயமாய்ப்புத்ரனீவான்
தப்பில்லையென்றன்வாக்கியந் தானதர்மஞ்செய்யென்றுர்

வசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாக அகம்மதுசா புத்திரனில்லாததால் ஏங்கிப்புலம்பி அமைச்சனோடுசொல்ல மந்திரி அமீரென்பவர் அரசனைப்பார்த்து தருமமுதலிய சக்காத்துச்செய்தால் அல்லாகுத்தஆலா புத்திரன்கொடுப்பானென்று சொல்ல அதையரசன்கேட்டுஇனி நடக்கிறவிதங்காண்க.

அகம்மதுசாசொல்- தரு.

இ-ம்-துசாவந்தி- திரிபுடை தாளம்.

மந்திரியமீருசொல் தந்திரமானதை
மன்னனகமது சாபெனும்
சுந்தரன்கேட்டுத்தன் னுள்ளமகிழ்ந்து
அலங்கியவாஸ்தானம் புகுந்தனரே
மனைபுகுந்தகமது வரசனுஞ்சொந்த
மனைவியை யழைத்தருகிருத்தியே
தனதுடவமைச்சன்சொல் விரதமேதர்ம
தானஞ்செய்யவேணு மென்றிட
அரசன்சொல்லியபோது மனைவியுநல்ல
தாருமப்படிச்செய் வோமென
பிரியமாய்ப்புருஷனு மனைவியும்வெகு
பிரபல்யமாய்த்தர்மஞ் செய்தனர்
அந்தமாநகர்வீதி யடங்கலும்ரத்ந
ஐம்பொன்னாற்பள்ளிகள்கட்டியே
எந்தநகரிலு முள்ளவனைவற்கு
மேகமாகத்தர்மஞ் செய்தனர்
பூஞ்சோலைநீர்ப்பந்தல் வைத்தனர்மிகு
பிரியமாய்த்தடாகஞ்செய்தபின்
மாஞ்சோலைக்கிளிமொழி யானுமோராஜ
மன்னனுந்தொழுதுகொண் டிருந்தனர்
மந்திப்பந்தியாகக் கொடுப்பதும்நல்ல
பரிவுடன்தருமங்கள் செய்வதும்
சிந்தைகலந்துமகமதுசாப்பொரு
செல்வனுக்காத்தர்மஞ் செய்தனர்



பொது-விருத்தம்.

தானதர்மங்கள்செய்து தடாகங்கள்வெட்டிப்பள்ளி
ஆனதுங்கட்டிவேதம் அன்புடனோதச்செய்ய
வானுலகெவரும்போற்றும் வல்லவன்கிருபையோங்கி
மாநிலமாளுமராஜன் மனைவியுங்கெர்ப்பமானாள்

இதுவுமது.

கர்ப்பமும்வளர்ந்து ஆதி கிருபையாலுதிர்ந்தங்கி
செப்பெனுந்தனங்கள்விம்மி தேகமும்பசித்துகண்கள்
பைப்பொடுமுடல்பெருத்து வாய்வெளுத்திடைபெருத்து
கர்ப்பெனுமயிலாட்கின்பாய்க் கர்ப்பமும்வளர்ந்ததன்றே.

இதுவுமது.

திருத்தமாய்க்கர்ப்பநோயைச் சேயிழைமாதர்கோத
உரித்துடன் தாதிமார்கள் வுளமகிழ்வருத்தந்தீர
கருக்குடன்தேறச்சொல்ல காரிகைகர்ப்பமப்போ
வருத்தமாயலைப்பதாலே மங்கையும்புலம்புவாளே.

அரசி-கர்ப்பவேதனைப்படுகிற-தரு.

இ-ய-பிலாஹரி-அட-தாளம்.

அம்மாவயிர்வலிக்குதடி யன்னமேயென்னசெய்வேன்-எந்தன்
அங்கம்நோகுது எங்குஞ்சோருது மங்கையேயென்னசெய்வேன்
என்னமோயெந்தன் கண்ணிருட்டி திரண்டுகொதுமடைக்குதே-இது
என்னபாதக மிந்தநோதகம வந்தகாதகந்தோழி
கைகள்ரெண்டுமயர்ந்துபோகுது கருத்துமவேறதாயாகுதே-இப்போ
கடுக்குது அடைநடுக்குது வேர்வை விடுக்குதென்செய்வேன்தோழி
குலுங்குதுபின் மேல்வயிற்றைச் சுருட்டியெங்கும் வலிக்குதே-இதோ
சோபமாகுது தாபமீறுது நாவரட்டுதென் செய்வேன்
குந்திருக்கவுங்கூடவில்லையே கோதையேயெனக்கோதடி- நெஞ்சில்
குத்துதேதலை சுற்றுதேவலி பற்றுதென்செய்வேன் தாதி
வயிற்றில்வந்திடும் பிள்ளையானது மலக்கவுந்தோதான்-என்னை
வாட்டுதேகுரங் காட்டுதேவிதங் காட்டுதேயென்ன செய்வேன்

பொது-விருத்தம்.

கருப்பமுமுத்திரேன்மேல் காலெடுத்துலாவநாரி
விருப்பமாய்ப்புளிப்புமாக மேவியவுந்திநோக
தரிப்பிலாவிசனத்தாலே தாதிமாரோடிச்சொல்ல
மருப்புவார்குழலிக்காக மருத்துவமாதுவந்தாள்

வசனம்.

அகோதெப்படியென்றால் இக்கப்பிரகாரம் அகம்மதுசாய்ப்புமனைவியானவர்கள் அல்லாவுதவியினாலே கர்ப்பமுண்டாகி பத்துமாதமுநிறைந்து பிரசவவருத்தப்படுகிறவேளையில் தாதிகள் மூப்பிகளோடி மருத்துவமாதுக்குச்சொல்ல அவள்வருகிறவிதங்காண்க.

மருத்துவக்கிழவி வருகிற--ஓாடி-தரு.

இ-ம்-காம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

கிழவிவந்தாள்-மருத்துவக்-கிழவிவந்தாள்

அநுபல்லவி,

கிழவிவந்தாள்-பழையவளென்று
கிலுக்குத்தடிகை-வலுக்கவேலூன்றிக் (கிழவி)

சரணம்.

நரைத்திருந்தலையும்-மெள்ளமெள்ள
நடுக்கிடுங்கொலையும்
பருத்திடுமுலையும்-அழுக்குப்
படிந்ததோர்கலையும்
குறைந்தமேனியுமே-விரைந்தபேச்சுமாய்
குளறிக்குளறியூர்மருத்துவக் (கிழவி)

பொது-விருத்தம்.

மந்தரபுயத்தோனான மன்னகமதுசாய்ப்புக்குச்
சொந்தமாமனைவியர்க்குச் சூலுளைந்தயர்வதாலே
சுந்தரத்தாதிமார்கள் துடையடிவருடிநிற்க
வந்திடுமருத்வமாது மங்கைமுன்னிருந்துகேட்பாள்.

மருத்துவக்கிழவி-அரசிக்குச்சொல்-விருத்தம்.

ஆரடியரசியேகேள் ஆத்திரப்படநீவேண்டாம்
பாரினிற்பாலராலே படுமவஸ்தைகளிப்போது
நேரினிலெந்தனோடு நினக்குள்ளகுறிகள்தன்னை
கூரடியொளிக்காதிப்போ குணமதாயெந்தனோடே.

வசனம்.

அடியம்மா அரசியேகேள் இப்போது பிள்ளைநோயால்வருத்தப்படுகிறாய் பதறுதகாரியஞ்சிதறுது இப்போது உனக்குள்ள குறிகுணங்களை யொளிக்காமல் என்னுடன்சொல்லுலாயடியரசியே.



அரசிமருத்துவச்சிக்குச்சொல்-தரு.

இ-ம்-ஆரபி-ரூபகதாளம்.

பல்லவி.

நோகுதேயெங்கும் - வகவலியா
யாகுதே யெங்கும்

அநுபல்லவி.

தோகையேவயிற்றில்-தோதகந்தானேஓகோ (நோ)

சரணங்கள்.

வலிக்குதே-முத்தங்கலிக்குதே-துவாலைசொலிக்குதேபாராய் (நோ)
அடமடி-அரவப்படமடி-பனிநீர்க்குடமடிபாராய் (நோ)
என்செய்வேன்சொல்லஅஞ்சுதே மருத்துவவஞ்சியேயிப்போ (நோ)

அரசிவசனம்.

அடியம்மாபாட்டி மருத்துவமாதே நானென்னசெய்வேனடியம்மா.

மருத்துவமாதுசொல்-வசனம்.

அடியம்மா அரசி-பதறாதடியம்மாபதறாதே - இன்னம்ஒரு நிமிஷநேரத்தில்மைந்தன்பிறப்பான் வருத்தப்படாமலிருடியம்மா அரசி.

அரசிபிரசவவேதனைப்படுகிறதரு.

இ - ம் - சங்கராபரணம் - அடதாளம்.

அம்மாகேளாய்அம்மாகேளாய்மருத்துவஅம்மாகேளாய்
ஆயிரந்தேள்கொட்டினாப்போல் -என்னங்கமெல்லாநோகுதம்மா

அரசி-வசனம்.

அடியம்மாநானென்னசெய்வேனடிமருத்துவமாதே

மருத்துவமாதுசொல்-வசனம்.

அடியம்மா-பத்தெட்டுப்பெற்றபெண்களெல்லாம்பதறிக்கொண்டிருக்கையில் நீதலைச்சன்பிள்ளைக்காரிதானே-உனக்கு வலிக்காமலும உளைக்காமலுமிருக்குமா-கொஞ்சம்மனதைப்பொறுத்திருடியம்மா அரசி.

மேற்படி-தரு.

நெற்றியிற்புருவமெல்லாம் முத்துமுத்தாய்வேர்க்குதம்மா
பத்திஎரியுதம்மா-பாங்குள்ளமருத்வமாதே

வசனம்.

அடியம்மாரொம்பவருத்தமாயிருக்கிறதே-ஒருவேளை உயிர்போய்விடுமோ தெரியவில்லையேயம்மா மருத்துவமாதே.

மருத்துவச்சி சொல்வசனம்.

அடியம்மா அரசி-நீயொன்றுக்கும்யோசிக்காதே-காகமிருந்து போனமரகிளைகளேயசைவுகொடுக்கின்றதே-அப்படியிருக்க உன் வயிற்றி லிருந்து குழந்தைவெளியேவருகிறகாலமானபடியால்-உளைக்காமலும் துளைக்காமலுமிருக்குமா-அப்படியொன்றுக்கும் பயப்படாதே-உன்னுயிர்போகமாட்டாது-சற்றேகுந்திக்கொண்டிருமம்மா அரசி.

மேற்படி-தரு.

குந்தியிருக்கயிலே-என்-குதிக்கால்கள்நோகுதம்மா
என்தாயே மருத்துவச்சி-இதற்கென்னசெய்வேனம்மா

வசனம்.

அடிபாவி நீ என்னத்தைச்சொன்னாலும் எனக்குமனஞ்சகிக்கவில்லையேயம்மா அடிமருத்துவமாதே.

மருத்துவக்கிழவி சொல்-வசனம்.

அடியம்மாமனதைப்பொறுத்திருக்கத்தான்வேணும் அது யேதினாலென்றால்-பிள்ளைபிறக்கிறசமயமாயிருக்கிறது-அதுவெளியே வந்தவுடனே உன்னுடையவருத்தமெல்லாம நீங்கிப்போகும் ஆ-ஆ-நீவங்கிறதையும்வருத்தப்படுகிறதையும்பார்த்தால் பிள்ளை சுற்கொலையிற்போய் சொருகிக்கொள்ளப்போகுது-சற்றே கயிற்றைப்பிடித்துப் பல்லைக்கடித்து மிஷ்கோமிருடியம்மா அரசி.

மேற்படி-தரு.

கயிற்றைப்பிடிக்கையிலேகைகள்கொண்டுஞ்சோருதம்மா
வயிற்றைவலிக்குதம்மா வகையொன்றுந்தெரியேன்

அடியம்மம்மா-அம்மம்மா-அம்மம்மா-அம்மா

வேறு-தரு.

அம்மாவயிர்வலிக்குதிந்த அவதிக்கென்னசெய்வேன்
இம்மாநிலந்தனிலேயம்மாயிதற்குமருந்திலையோ
அரே அம்மமா-அம்மமா-அம்மமா அம்மா
அம்மாவயிர்வலிக்குதிந்த

மேற்படிவேறு தரு

அம்மம்மாரேயென்செய்வேன்-ஆநிதாயனேயென்செய்வேன்
மருத்துவமாதேயென்செய்வேன்-அடியச்சிமாரேயென்செய்வேன்
அம்மாவயிர்வலிக்குதிந்த-அவதிக்கென்னசெய்வேன்.



பொதுவிருத்தம்.

வருத்தமாயரன்தேவி மனமதுபதறிநிற்க
கருத்துடன் தாதிமார்கள் கனயேவல்செய்துநிற்க
மருத்துவமாது நானும் வகைபலசொல்லிநிற்க
அநுகமதுசாவுக்கு அருஞ்செல்வன்பிறந்ததன்றே.

வசனம்.

அகோதெப்படியென்றால் அந்தமாநகரையாளும் அகம்மதுசாமசவியானவள் ரொம்பவருத்தத்துடனே பிரசவ வேதனைப்பட்டு தாதிமார்கள்சூழ்ந்துநிற்க மருத்துவமாது மருத்துவம்பார்க்க கோடிசூரியப்பிரகாசம்போலே புத்திரன் பிறந்தவிதங்காண்க.

பிள்ளைபிறந்த-தரு-இ-ம்-அடாணா-சாப்புதாளம்,

பல்லவி,

மைந்தன்பிறந்தானே-மருமலர்சந்திரவுதயம்போலவே
மைந்தன் பிறந்தானே

அநுபல்லவி

மைந்தன்பிறந்தானே சிந்தைகளிகூரவே
மன்னனகமதுசா-மனைவிவயிற்றினில், (மைந்தன்)

சரணங்கள்.

லட்சணமுள்ளதானதால்-அதிகப்பொன்
னாசினில்வார்த்ததுபோல்
பச்சையிளங்கிளி-மூச்சுடர்துலங்கிய
வச்சிரமார்பினில்-இச்சையுறுங்கனி (மைந்தன்)

பொன்னகர்மண்டலத்தில்-இருந்தொரு
மின்னலிரங்கினதுபோல்
பன்னுமாகியமுந்தன்னருகில்வந்துயர்
பின்னமில்லாமலே-மன்னனுளங்களிக்க (மைந்தன்)

புத்ரன் பிறந்திலங்க-அகமதுசா
எத்திக்குஞ்சக்கரைவழங்க
வெத்தியப்பாஜெனனும்-வித்தாரப்பேருமிட்டு
சித்ர அந்தமானைச் சிறப்புடன் ஆள்வதற்கு (மைந்தன்)

பொதுவிருத்தம்.

பிறந்திடும்பிள்ளைதன்னைப் பிரியமாயகம்மதுசா
சிறந்திடக்கண்டுயின்பத் திரையெனுங்கடலின்மூழ்கி
அருந்தவத்தோர்களுக்கு மந்தமாககருள்ளோர்க்கும்
குறைந்திடாக்கனகாத்நங் கொடுத்தனனனேகந்தானே,

இதுவுமது.

அனேகமாய்த்தானதர்மம் அகம்மதுசாய்புஞ்செய்து
கனமுடன்மகன்றனக்கு கருதும்வேதப்படிக்கு
மனமதுமகிழ்தப்பாசியென்னுமோர்நாமமிட்டு
தனயனைக்கொடுக்கவாங்கித் தாதிதாலாட்டுவாரோ

தாலாட்டுகிற-தரு-நீலாம்புரிராகம்.

ஆரிவரோ ஆரிவரோ ஆணாசே ஆரிவரோ
பாரிலுள்ளமன்னரெல்லாம் பக்ஷமுடன் தாம்துதிக்க
சேரிழைமார்தாலாட்டும் நிருபரேகண்வளராய் (ஆரி)

பிள்ளையில்லாவகம்மதுசா பெருந்தவத்தால்வந்துதித்த
வள்ளலெனுமப்பாசு மன்னனேகண்வளராய் (ஆரி)

ஆதியருளால் அகம்மதுசாசெய்தவத்தால்
நீதமுடன்வந்துதித்த நிருபனேகண்வளராய் (ஆரி)

சீனநகராளும் தீரன்பகுவீராசன்
மானமிகர்பானே மணமுடிக்கவந்தவரோ (ஆரி)

பொதுவிருத்தம்.

தையலர்பாலன்றன்னைத் தாலாட்டிவளர்க்கும்போது
வையகத்துள்ளோரெல்லாம் வந்துமேயெடுத்தணைத்து
பையவேமுத்தியிட்டுப் பக்ஷமாயிருக்குநாளில்
ஐயமில்லாதப்பாசுக் கைந்துமேவயதாசசன்றே.

இதுவுமது.

கர்த்தனுலருளும்வேதங் கற்பிக்கவேண்டுமென்று
வெத்திசேர்லெவையிடத்தில் விரைவினிலோதிவைக்க
முத்திலுமோதிகுசு முப்பதுமுகிந்தபின்பு
பத்தடனுலுயில்மும் பாலனப்பாஜறிந்தான்

இதுவுமது.

வேதமுமோதிக்கல்வி விளைபொருள்பதினுலில்மும்
போதரவாகத்தேர்ந்த பூபனப்பாஜென்போர்க்கு
மாதமும்வளரச்செல்வம் வயதுமேவளருநாளில்
நீதமிழ்ச்சொல்லும்வர்த்தி நிமிஷத்திலிதவந்தாரோ.

வசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாக அகம்மதுசாவுக்குப் பிறந்த குழந்தைக்கு அப்பாசென்கிற நாமகரணந்தரித்துத் தொட்டிலிலிட்டுத் தாராட்டிச் சீராட்டிப் பிறைவளர்வதுபோல்வளர்ந்து ஐந்துவய



தாகி லெப்பைகள்வோதிக்கொடுக்க வேதமுந்தலிய பதினுலில்மும் சநதிலுள்ள உக்கும்அறிந்துதெளிந்து வயது அதிகப்பட்டிருக்கிற நாளையில் முத்தமிழோதிவைக்கும்படியா யாசராக்கியாபிக்கவல்லபமுள்ள வாத்தியார்வருகிறவிதங்காண்க.

வாத்தியார்வருகிற-தரு-இ-ம-தோடி-அடதாளம்.

பல்லவி.

வாத்தியார்வந்தார் பள்ளிக்கூட-வாத்தியார்வந்தார்

அநுபல்லவி.

சாத்திரப்புத்தகம் நேத்தியாகவெடுத்து (வாத்தி)

சரணங்கள்.

பணிகள்துலங்க-மார்பில்ரத்னப்-பதக்கமிலங்க
கணிகையர்மனங்களிகொள்ளவேசங்கீத
கலையைவுணர்ந்தகனவானென்னும்சாஸ்ர (வாத்தி)

கையில்நன்னூலும் திறப்புடன்
கழறுந்தொல்காப்பியம்
மெய்யினில்வெள்ளை நிறம்விளங்கவேலைசத்திய
மேன்மையாய்வஸ்துவைதிவானிக்குமன்னிய! (வாத்)

பிரம்புங்கைக்கொண்டு அரியதோர்,
பிரண்வத்தைக்கண்டு
தரணியிலுண்டானதனையர்கூட்டநீடி,
சட்டமாயகம்மதுசாய்ப்புமகனைத்தேடி. (வாத்)

அகம்மதுசா-உபாத்திக்குச்சொல்-விருத்தம்.

வத்திரம்வாத்தியாரை வடிவகமதுசாபார்த்து
எந்தன்றன்பிள்ளைக்கிப்போதிலக்கியவிலக்கணத்தைச்
சிந்தையிலுணரச்செய்யெஃறேசொலவப்பாசுக்கு.
அந்தமாய்நூலனைத்தும் அறிவித்துச்சென்றார்தாயே

வசனம்.

அகோதெப்படியென்றால் வாத்தியாரானவர் அகம்மதுசாவைக்கண்டுகொள்ள அவர்வேண்டியவெகுமதிகளைக் கொடுத்து தன்பிள்ளைக்குத்தமிழ்ஓதிவைக்கும்படிச் சொல்ல அதுபோல் அப்பாஜியென்னும்அரசனுக்கு சகலகலைக்கியானமும் ஓதிவைத்து மேன்மே

னும் பரிசுபெற்றுத் தனதிடம் போய்ச்சேர்ந்தபின்பு நடக்கிறவிதங்காண்க.

பொது-விருத்தம்.

வேதமுந்தமிழுமோதி விவரங்களறிந்தபின்பு
சாதனையானையேற்றந் தனுப்புரவியின்றனேற்றம்
நீதியாமராசதந்திரம் நிருபருக்குளதுங்கற்று
விதமாயிருக்கும்போது விளைந்திடும்வாறுசொல்வாம்

வசனம்.

அகோதெப்படியென்றால் வேதமுதலிய ஆனையேற்றங்குதிரையேற்றம் வில்வித்தைமுதலிய ராஜதந்திரமுங் கற்றுவல்லவனென்றுபேர்பெற்றிருக்கிற நாளையில் நடக்கிற விதங்காண்க.

பொது-விருத்தம்.

இப்படியிருக்கும்போது இயல்புள்ளவசம்மதுசா
செப்பருமனைவியோடு செல்வவப்பாசுகீர்த்தி
வெப்புவிதனிலுமேலா யிருப்பதினாலெலக்கு
ஒப்பிடவெவர்களுண்டு வுனைத்திடும்பெண்ணேயென்றார்

வசனம்.

அகோதெப்படியென்றால் அசம்மதுசாவானவர் தனதுமனையாளைப்பார்த்துச் சிலபெருமையான வார்த்தைகள் பேசினார்அதென்னவென்றால் தனதுபிள்ளை அப்பாஜியினுடைய வல்லமைத்திறங்களனைத்தையுஞ்சொல்லி இனிநமக்குஇந்தபூலோகத்திலுள்ளவெவர்களும் எதிரியுண்டோவென்று சொல்லிக்கொண்டிருக்க மேல்நடக்கிறவிதங்காண்க.

இதுவுமது-விருத்தம்.

பெருமைகள்பேசுராசஜன் பெற்றவப்பாஜியப்போ
ஒருமையாய்த்தந்தைதாயோ டொருமொழிபுகலலுற்றான்
அருமையாய்வேட்டையாடி யதிசீக்ரம் வருவேனென்ன
வருக்கியியறியாத்தந்தை தாயும்போய்வாவென்றாரே

வசனம்.

இந்தப்பிரகாரம் தாயுந்தகப்பனும் பெருமைபேசிக்கொண்டிருக்கையில் அப்பாசு என்னும் பிள்ளையானவன் தன்தாய்தகப்பனைப்பார்த்து நான்வேட்டையாடி வருகிறேனென்று கேட்கஅவர்கள்வரும்விதி வழியிற்றங்காதென்ற பாவனையாகவும் பெருமைய



டைந்தவர் சிறுமையடையா ரென்றவாக்கியம் போலவும் அவர்கள் விடைகொடுத்தனுப்ப அப்பாசு வேட்டைக்குப் புறப்படுகிறவிதங்காண்க.

பொது-விருத்தம்.

இயம்பியவசம்மதுசா விடத்திலில்விடைகள்பெற்று
நயம்பெறுபடைகள்நாற்கு நடந்திடவப்பாஜோடு
செயம்பெறுமந்திரிசேர்ந்து சிங்கம்போலாக்ரமித்து
வியப்புறுங்கானகத்தில் வேட்டையாடச்சென்றாரே

வசனம்.

அகோதெப்படியென்றால் தந்தைதாயிடத்தில் விடைபெற்றுக்கொண்டு அப்பாசுவானவன் நால்வகைச்சேனையோடும் மந்திரிபிரதானிகளோடும் பிரயாணப்பட்டு வேட்டையாடக் காட்டுக்குப்போகிற விதங்காண்க.

அப்பாசுவேட்டையாடப்போகிற-தரு

இராகம்-அடாணா-ஆதிதாளம்.

பல்லவி.

ஆடுவம்வாரீர்-வலைவேட்டை-ஆடுவம்வாரீர்

அநுபல்லவி.

நாடுங்கடம்பகரிநரிகள்பரிகள்வேட்டை (ஆடு)

சரணங்கள்.

சிங்கஞ்சாடிபுலிசெந்நாய்மாமிருகம்
செழிப்புறும்வயல்களையழிக்குங்கோணுய்களும்
சங்கரித்துவருவோமென்று அப்பாசுமன்னன்
சாற்றிவேகமாய்க்கூற்றுவன்போலவே (ஆடு)

கட்டுக்காடையுடனேசிட்டுக்குருவிகளும்
காணுங்கோழிக்கிளிகளுவக்காட்டுப்பன்றிகளும்
எட்டித்திக்கிலுஞ்சென்று யினைக்காமலேநின்று
எல்லாமொருமிக்கக் கொள்வோமிக்கணமதில் (ஆடு)

திறக்கண்ணிப்பெருங்கண்ணிசிக்காணவலைகளை
நேராய்க்கட்டிசிலகள்ளக்கயர்களும்

பெருத்தவில்லுகளம்புப்பாங்கானவொத்தவண்டும்
பதனமாகவெடுத்துப்பரிவாய்வாருமிப்போதே (ஆதி)

பொது-விருத்தம்.

ஜெகதலங்கள்புகழ்வீர அப்பாஜேந்திரன்
சேனைவொடுவனவேட்டையாடிப்பின்பு
நகரமதற்கேகின்றசமயந்தன்னில்
நாவரட்சிதாகம்துமிகவேயாக
விசிதமதாயடைச்சசொர்டுமற்றோர்தாமும்
விரைந்தோடித்தண்ணீரைத்தேடும்போது
யகாமுளவொருதோப்பில்மரத்தின்கீழே
பாண்டமதில்மதுவிருக்கக்கண்ணிற்கண்டார்

இதுவுமது.

கண்டவுடன்மதுவதனைத்தண்ணீரென்று
கருத்ததனில்நினைத்ததனையெடுத்துவந்து
மண்டலத்தோர்தாப்புகழும்அப்பாஜேந்திர
மன்னனிடகரமதனிற்கொடுக்கவாங்கி
பண்டுவிதிப்பயனதனையறியாததாலே
பட்சமுடன்ஜலமென்றேபருகினத்தால்
மண்டைமட்டும்வெறியேறிக்கீழேவீழ்ந்து
மயங்கினன்மதுவதனாற்றியங்கினனே

வசனம்.

அகோதெப்படியென்றால் அப்பாசமன்னன் தந்தைதாயிடத்தில் விடைபெற்றுக்கொண்டு நால்வகைச்சேனைகளோடும் காட்டுக்குப்போய் வேட்டையாடி தன்னகரத்துக்குத்திரும்பும் போது தண்ணீர்தாகத்தினால் நாவரண்டுபாதவிக்கிற போது மந்திரிமுதலானசேனைகள் நான்குபுறத்திலுமோடி தண்ணீர் தேடும் போது ஒருதோப்பில் மரத்தினடியில் ஒருபாண்டத்தில் கள்ளிறக்கிவைத்திருந்தது அதைத்தண்ணீரென்பதாய்த் தூக்கிக்கொண்டுவந்து அரசனுக்குக்கொடுக்க அதைவாங்கி முன்வினை தெரியாததாலும் தாகவிடாயினாலும் அவசரமாய் வாங்கிப் புசிக்கவே கள்ளின்வெறி தலைமண்டைக்கேறி கீழேவிழுந்து பிரைந்துக்கொண்டிருக்கையில் நடக்கிற விதங்காண்க.

பொது-விருத்தம்.

அடவியில்வீழ்ந்துசோர்ந்து யல்றியப்பாசிருக்க
சடுதியில்தூதரோடி தந்தையர்தமக்குச்சொல்ல



துடி துடித்துள்ளநொந்து சோர்ந்தகமதுசாவேந்தன்
கடகென்றருண்டெழுந்து கதறியேபுலம்பலுற்றார்

வசனம்.

அகோதெப்படியென்றால் காட்டில்தாகத்தினால் தண்ணீயென்று அப்பாசுராஜன்குடித்து மயங்கித்தயங்கி வெறிதலைமண்டைக்கேறிப்பிதற்றிக்கொண்டிருப்பதைக்கண்டசிலதூதர்கள் அந்தமாநகரத்திற்குப்போய் அகம்மதுசாவுக்குச்சொல்ல அதைக்கேட்டு அவர்புலப்புகிற விதங்காண்க.

அகம்மதுசாபுலம்புகிற-தரு-இ-ம-காம்போதி-ஏகதாளம்.

பல்லவி.

இதுவென்னவிதிவசமோ - மகன்றனக்கு - இறைவன்விதித்தவிதி

அநுபல்லவி.

சதியேதோநானறியேன்-தனயன்படும்விதி
மதிமோசம்போயல்லோவனத்திற்கனுப்பிவைத்தேன் (இது)

சரணங்கள்.

சோதியைமறந்தேனோ-ஷறகினிட
தொழுகையையிகழ்ந்தேனோ
வேதநெறிகள்தப்பிவிஞ்ஞைசயையறிந்தேனோ
நீதநெறிகள்தப்பிநிந்தனைகள்செய்தேனோ (இது)

சாஸ்திரம்பார்த்தேனோ-உறவின்முறை
சனங்களைக்கெடுத்தேனோ
வார்த்தைபாடிகள்சொல்லிவழுவியதைவிட்டேனோ
வல்லவனேகலைத்தொல்லையென்றுவிட்டேனோ (இது)

சொன்னசொல்மறந்தேனோ-வறியோரைத்
தொந்தரைசெய்தேனோ
அன்னைபிதாவின்சொல்லை அகற்றிநானடந்தேனோ
ஆனாயாகிலும்வைது அநியாயஞ்செய்தேனோ (இது)

பொது-கொச்சகம்.

மன்னரகமதுசா மனநொந்துதான்புலம்பி
அன்னகரோர்சூழ்ந்துவர அடவிதனில்தானேகி
தன்னயஞ்சேரப்பாசுராசன்படுந்துயரை
அன்னவனுங்கண்டு அழுதுபுலம்பிச்சொல்வார்

வசனம்.

அகோதெப்படியென்றால் அநுவர்கள்வந்துசொல்ல அகமதுசாகேட்டு துயரத்துடனேபுலம்பி அந்தகரத்திலுள்ளோர்களுகூடிப் பிரயாணப்பட்டு-தன்மகன்மயக்கிக்கிடக்கிற காட்டிற்குப்போய் அப்பாசுமன்னன்புலம்பிக்கொண்டிருக்கிறதைக்கண்டு ரெம்பவு மயங்கித்தியங்கியபின் நடக்கிறவிதங்காண்க.

பொது-விருத்தம்.

அந்தமாநகரையாளும் அகமதுசாகலங்கி
ப்ரதவப்பாசுதன்னைப் பல்லக்கிலெடுத்துக்கொண்டு
வந்தாராளுக்கள்சூழ வாழரண்மனைக்குச்செல்ல
சுந்தரத்தாய்கண்மட்டங்கித் தடித்துமேபுலம்புவாளே.

வசனம்.

இவ்விதமாக அகம்மதுசாமகனைக்கண்டுபுலம்பிப்பிரலாபித்து ஒருபல்லக்கி லெடுப்பித்துக்கொண்டு ரதகஜ துரகபதாதியென்னும் நால்வகைச்சேனைகள் சூழப்பிரயாணப்பட்டு காட்டைவிட்டு நகரம்போய் அரண்மனைக்குட்சேர அப்பாஜியினுடைய தாய்கண்டு புலம்புகிற விதங்காண்க.

தாய்புலம்புகிற-தரு-இ-ம்-நீலாம்புரி-அடதாளம்

(கண்ணிகள்.)

ஆதிமகுமானேயெங்கும்-ஆளும்றப்பிலாலமீனே
சோதியேசுடரொளியே-சொல்லவொண்ணாவல்லவனே

மக்களில்லாதிருக்கி-மைந்தனென்றை யெங்களுக்கு
அக்கனேயுன்னருளாற்றந்த-அப்பாஜேக்காலத்தில்

வந்தவிதியறியாமல்-மகனுக்குவிடைகொடுத்து
அந்தவனந்தன்னில்வேட்டை-அருள்மகனையனுப்பினேனே

என்னபிழைநான்செய்தேனோ-வந்தலெனபிழைசெய்தானோ
முன்னுதலேறகுமானே-மொழியவொண்ணாப்பெரியவனே

எங்களுக்களித்தபிச்சை-எழில்மகனைக்காத்தருள்வாய்
சக்கையுள்ளநாயகனே-தனிமகனைக்காத்தருள்வாய்

புத்திரியாளிவ்விதமாய்-புகர்ந்து துவாரிகளுங்கேட்டு
சித்தமதுதாய் கலங்கித்தியங்கியேயிருந்தனளே.



பொது-விருத்தம்.

காரிகைபுலம்பிச்சோர்ந்து கவலையாயிருக்கும்போது
மாரனேரகம்மதுசா மன்னையின்கவலைநீக்கிச்
சாரமந்திரியையழைத்துத் தன்மகன்கலங்கிக்கப்
பாரில்பேர்பெற்றவோர் பண்டிதர்தமையழையென்றாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் -அப்பாசுராஜனை யரண்மனையிற் கொண்டுபோய்ச்சேர்க்கதாயார் பிள்ளைபடுகிறதுயரத்தைக்கண்டுபிரலாபிக்க அகம்மதுசாதன்மனைவியைத்தேற்றி மந்திரியையழைத்து வயித்தியமாய்த்தீர்ப்பதற்கு பண்டிதர்களிற்கைதேர்ந்த ஓர்வயித்தியனையழைப்பிக்கச்சொல்ல மந்திரியழைப்பிக்கிற விதங்காண்க.

பொது-விருத்தம்.

மன்னவனுரைக்கக்கேட்ட மந்திரியெழுந்துபோற்றி
என்னிலத்தொருபெரிய பொழில்வயித்தியர்க்குச்சொல்ல
அன்னவர்வயித்தியப் பைடக்குளில்வைத்துக்கொண்டு
தன்னிடுஞ்சபைக்கிப்போது சுருக்கினில்வருகின்றார்.

வசனம்.

அகோதெப்படியென்றால் அகம்மதுசாவானவர் பண்டிதனையழைக்கச்சொல்ல அதுபோல மந்திரிவயித்தியருக்குச்சொல்ல வயித்தியர் அப்பாசுக்குண்டாகிய வெறிநோய் திரும்படியாய்கண்டு சொல்வதற்கு அதிசீக்கிரத்தில் வயித்தியர்வருகிற விதங்காண்க.

வயித்தியர் வருகிற-தரு-இ-ப்-சங்கராபரணம்-துருவதாளம்

பல்லவி,

பண்டிதர்வந்தார்-வியாதிதீர்க்கும்-பண்டிதர்வந்தார்

அநுபல்லவி.

பண்டிதர்வந்தாரே-சண்டிசைபெய்ச்சுகவே
பிராணசண்டரோகய-நானேதீர்ப்பேனென்று (பண்)

சரணங்கள்.

தீராதநோய்களெல்லாம்நொடியினிற்
தீர்த்திடுவேனென்று
சாராமாமாத்திரையும் பஸ்பங்களும்
தானேயடக்கஞ்செய்த
தாராளமாகமருந்துப்பையுங்கொண்டு
ஞானயனப்பாசுரோகத்தைத்தினிற்தீர்ப்பேனென்று (ப)

மேகினிதன்னி லுள்ளவயித்தியர்க்கு
மேலானவனொன்றும்
சாதனமந்திரங்களறிந்திட்ட
சாமார்த்தியனானென்றும்
நீதாமாகவேகைநாடியைப்பார்த்து
நிமிஷத்திற்சொல்லவேநிபுணனென்று (பல்லவி)
கத்துக்குட்டியொருவனவருடன்
கைகளைப்பிடித்துக்கொண்டு
நத்தியழைக்கப்போன வேவுக்குக்காரர்
தலமுடன்கூடவர
சித்தங்கலங்கி யிருக்குமகமதுசா
தீரன்சமுகத்தில்விரமதாகவே (பண்டிதர்)

பொதுவிருத்தம்.

வந்தபண்டிதனுமப்போ மன்னனைவணங்கிநிற்க
அந்தமாதங்களையாளும் அகமதுசாயும்பார்த்து
எந்தன்புத்திரனுக்குற்ற வியல்புளநோயைத்தீர்த்து
சிந்தையின்வருத்தந்தன்னைத் தீர்ந்திடச்செய்வாயென்றார்.

இதுவுமது - விருத்தம்.

வாடுமப்பாசுகையை வயித்தியர்தாம்பிடித்து
நாடியைப்பார்த்துமெல்லாம் ராஜருக்கிதனைச்சொல்வார்
சாமப் வியாதியிதுவல்ல சார்ந்தபேய்க்குன்மமல்ல
காடிகட்குடித்ததாலே கனவெறிநோயிதென்றார்.

இதுவுமது-விருத்தம்.

கட்குடிவெறிநோயென்று கனவயித்தியன்சொற்கேட்ட
திட்டமந்திரியைப்பார்த்து நடந்ததைச்சொல்லுமென்ன
பெட்புறுமப்பாஜேந்திரன் பிரலாபிக்கத்தாகத்தாலே
மட்கலநீரென்றெண்ணி மதுவினைக்கொடுத்ததாமே.

இதுவுமது-விருத்தம். (து

அந்தவைத்தியர்சொற்சொல்லும் அமைச்சர்சொற்சொல்லும்பார்த்
தந்தேகங்கீங்கிராசன் தக்கவைத்தியனைநோக்கி
வந்ததேய்வெறியைத்தீர்த்து மனமகிழ்ச்செய்வியென்ன
பந்தமாய்ப்புளிப்புசேர்த்து கொடுத்திடப்பறந்ததன்றே.

வசனம்.

அதெப்படியென்றால் - தூதுவர்களோடிப் பண்டிதனை யழைத்துவர அவர் அகம்மதுசாவின் சமுகத்தில்வந்து வணங்கிநி



ற்க தன்மகனுக்குவந்தநோவைப்பாரென்று அவர்சொல்ல அப்பாசு வைகையைப்பிடித்து நாடிபார்த்து இதுவியாதியல்ல கட்குடித்தவெறி யென்றுசொல்ல இராசனுக்குச்சந்தேகமுண்டாகி வேட்டைக்குக் கூடேபோன மந்திரியைக்கேட்க-அம்மந்திரிசொல்லியது- அப்பாசு மன்னன்வேட்டையாடித்தாகவிடாய்க்கொண்டிருக்க தண்ணியைக்கொண்டுவரப்போனவர்கள் மண்பாத்திரத்திலிருந்த கள்ளைத்தண்ணீரென்றெண்ணி அரசனுக்குக்கொண்டுவந்துகொடுக்க அரசனதை வாங்கிப்புசித்தவுடனே இவ்விதமானபினத்தில் வந்ததென்றுசொல்ல இருவருடையவார்த்தையும் ஒன்றாயிருக்கின்றதென்றெண்ணி அதற்குத்தக்க அவிழ்தங்கொடுக்கும்படிச்சொல்ல அதற்குச்சரியானபுளிப்புமுதலாகிய வஸ்துக்கள்கலந்துகொடுக்க அந்தவெறிநோய்தீர்ந்து எப்போதும்போலே சுபாவமாக அப்பாசுமன்னனிருந்தானென்றறிக.

பொது-கொச்சகம்.

அப்பாசுகட்குடித்து அலருநோய்தீர்ந்ததன்பின்
செப்பும்வயித்தியர்க்குத் தீரன்அகமதுசா
ஒப்பில்வெகுமான முளங்களித்தீய்ந்தேகியபின்
அற்புதஊரார்சிலரும் அத்தாங்கப்பேசினரே.

இதுவுமது-விருத்தம்.

அந்தமாதங்களையாளும் அகமதுசாய்பின்புத்ரன்
பத்தமார்க்கத்துக்காகாப் பழுதுறுங்கள்ளுதன்னை
அத்தமாய்க்குடித்திருக்க அதற்கோரோற்பாடில்லாமல்
விந்தையாயிருப்பதாலே வினவிடப்போனோமென்றார்

வசனம்.

இவ்விதமாக அப்பாசுகட்குடித்த வெறிதீர்வதற்கு வயித்தியர் அவிழ்தங்கொடுக்கப்புசித்து வியாதிநீங்கி வயித்தியருக்குஇனாம் கொடுத்தனுப்பியபின் அவ்வூரிலுள்ள சிலபெரிய மனுஷர்கள் ஒன்றுசேர்ந்து அகம்மதுசாபிள்ளை கள்ளைக்குடித்தசங்கதியைக்குறித்துமார்க்கப்படி அவர்தண்டனைசெய்யாதிருக்கிறபடியால் அதை நாம் அவரிடத்திற்போய்க்கேட்கவேண்டும் போகலாம்வாருங்களென்று அவர்கள்வருகிறவிதங்காண்க.

ஊரிலுள்ளபெரியோர்கள் வருகிற-தரு.

இ-ம்-தோடி- தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தார் பெரியமனிதர்-ஆகம்மதுசாமுன்
வந்தார் பெரியமனிதர்

அநுபல்லவி.

இந்நகரிலுள்ள எவர்களும்பிறைசெய்தாலும்
பந்தமாய்த்தெண்டனைசெய்யும் பார்த்திபர்கள் நாங்க ளென்று
வந்தார்பெரியமனிதர்

சரணங்கள்.

கட்டைசருமந்தனிந்து-இடுப்பதனில்
தட்டைகட்டாயிறுக்கி

அட்டத்தனைக்கண்செய்யும் துடுக்கானவணக்கஞ்செய்யும்
அட்டதிசைபோற்றும் ஆகம்மதுசாமுனையோடு (வந்தா)

தேசந்தாசபோற்றும்-ஆகம்மதுசா
திரண்டுகொலுவைத்தேடி

நேசமுடனேநின்றுகொண்டு நிர்ணயங்கள்பேசிக்கொண்டு
பாசமுடன்கூடிக்கொண்டு-பார்த்திபன்சமூகமதில் (வந்தா)

மார்க்கவழிதெரிந்தோர்-அந்நகருள்ளோர்
மார்க்கமுடனடந்தோர்

ஆர்க்குஞ்சகியதாக அழகாய்நடப்போமென்று
பார்க்குள்புகழுடைத்த-பாதுஷாமதுசாமுன் (வந்தா)

ஆகம்மதுசாவுக்குப் பெரியமனுஷன் சொல்லுகிற-விருத்தம்.

எங்களுக்கரசனேயே பெரியவர்களும்புகழுமிராஜ
சிங்கமேவெற்றியாலெ திணம்புனைந்திடுவோய்கேளீர்
உங்களுக்கெளியோர்நாங்க ளுனக்குமின்னைப்பற்றன்னை
சிந்தித்துடனேகேட்டு விசைத்தருட்செய்குவீரோ.

வசனம்.

ஆ கேளுஞ்ராஜாதிராஜர்கள்போற்றுகின்ற சிம்மமேருவே நாங்கள்சொல்லுகிறதினின்னைப்பற்றைக்கேட்டு அதற்குப்பதில்மொழிசொல்லவேண்டும் சிரோன்மணியானவரே.



இராஜன் சொல்-வசனம்.

ஆகுல்வாருங்கள் ஊரிலுள்ளபெரியோர்களே நம்மிடத்தில்நீங்கள் என்னசொல்லுகிறீர்களோ அதுபோல் நடக்கக்கொள்கின்றேன் சொல்லுங்களேன்.

பெரியோர்களுக்கும் ஆகம்மதுசாவுக்கும்தர்க்க-தரு.

இ-ம்-தோடி-ஆதிதாளம்.

எங்கும்பிரசங்கமாய்ச் செங்கோல்செலுத்தும் துலங்குமன்னர்கோவே-இந்த
இயலந்தமாநகர்தனில்வாழ்ந்திருக்கிறோம்யாங்கள்கோவே
பொங்கமாய்நாங்கள்புகழ்ந்து கேழ்க்குஞ்சகலமன்னர்கோவே-
இப்போ-பொருந்தமாய்க்கேட்பீரேல் இருந்தபடிசொல்லுவோம் - ராஜர்கோ [வே

ஆகம்மதுசாசொல்-தரு.

இந்நகரதனிலெங்களுக்கிருந்திடு மனிதர்களே உங்கட்
கென்னவாகுங்காரியமேதோவதனைச்சொல்லும் மனிதர்களே
சிந்தைமயக்கமற்றேநீயிருக்கின்ற மனிதர்களே இப்போ
தந்தாங்கமேதேனுமுண்டேலதனைச்சொல்லீர் மனிதர்களே

பெரியோர்கள்சொல்-தரு.

மன்னரேயும்மிடம்வந்துகேட்குஞ்செழும்ராஜர்கோவே நம்மது
மார்க்கப்படிநடப்பீரென்றுசொல்லவந்தோம் ராஜர்கோவே
இவ்விலந்தன்னிலெவர்குற்றஞ்செய்தாலும்-ராஜர்கோவே -அந்த
கேற்றதண்டனைசெய்து மியல்பாய்நடத்திடுவீர் ராஜர்கோவே

ஆகம்மதுசா சொல்-தரு.

இப்போதங்களுக்குயென்னகுற்றஞ்செய்தேன்-மனிதர்களே - அதை
என்னுடன் சொன்னால்வழியாய்நடத்துவன் மனிதர்களே
அப்புறமென்சொல்லைப்பரிந்து பார்த்திடுங்கள்-மனிதர்களே - இப்போ
தொப்பியெங்களுக்கெப்படிச்சொல்லுங்கள் மனிதர்களே

பெரியோர்கள்சொல்-தரு.

அந்தமாநகர்தன்னை யாண்டுவருகின்ற-ராசர்கோவே உன்ற
லரும்புதல்வன்மதுவை யருந்திபிறப்பால் ராசர்கோவே
எந்தவிதமாகயிருக்கிறவைத்திருக்கின்றீர்-ராசர்கோவே அவனை
யற்றதண்டனைசெய்து காட்டுக்கனுப்பி விடும் ராசர்கோவே

## அகம்மதுசாசொல்-தரு.

காட்டுக்கனுப்புமென்று கருத்துடன்சொல்லிடு-மனிதர்களே - எந்தன்
கருத்துக்கலங்கிலங்கிமயங்குதே மனிதர்களே
வேட்டைக்கிப்போயிவிடாய்த்துத்தாகமாகி-மனிதர்களே அங்கு
மீறிமதுவையுண்டமகனுலென்னபிழை மனிதர்களே

## பெரியோர்கள்சொல்-தரு.

பிழையென்னவென்றுநீர் பேசுவதுசரியோ-மன்னர்கோவே உமர்
பெற்றஅவுசுநாவை கத்தடித்ததறியீரோ மன்னர்கோவே
மழைமுகிற்காமுள்ளமன்னாகமதுசா-மன்னர்கோவே உமது
மகனையைந்துவருஷம் காடேகிவரச்செய்வீர் மன்னர்கோவே

## அகம்மதுசாசொல்-தரு.

தனித்துமகனைக்காட்டிற்றுனைகச்சொல்வதால்-மனிதர்களே-இப்போ
தந்தைதாயிருவருக்குஞ் சகிக்குமோமன்மது மனிதர்களே
வனதிலைந்துவருடமகன்போகச்சொல்லியமனிதர்களே நாங்க
ளினத்துடன்கூடவேயெல்லோருஞ்செல்கின்ருே மனிதர்களே

## பெரியோர்கள்சொல்கொச்சகம்.

மார்க்கப்படிநாங்கள்சொல்ல மனம்பதைத்துச்சொல்லுகிறீர்
ஆர்க்குஞ்சரியாமோ. அகம்மதுசாவெனும்வேந்தே
பார்க்குளவாவர்விதியைப் பட்டுத்துலைக்கவேணும்
வர்க்கையெவர்க்குஞ்சரியா யேதேனுஞ்செய்வீரோ

## வசனம்.

அகோகேளுங்கள் இராஜமான்னிய ராஜஸ்ரீயாகிய அகம்மதுசா வென்னுமரசே இச்சவையில்நாங்கள்சொல்லிவந்தது தங்களுக்குமனவருத்தமாயிருக்கும்போலிருக்குது நாங்கள் மார்க்கப்படிசொல்லிளுமே தவிர உம்மிடபேரில் கொடுமையாய்ச்சொல்லவில்லை ஆகையால் உம்மிடகுமாரன் அப்பாஜியை ஐந்துவருடம் கானகம்போய் வரச்சொன்னுலும்சரி நீங்கள்கூடப்போனுலுஞ்சரி இனிஎங்களுக்கு அவஸ்யமில்லை சிரோமணியானதவுலத்தே.

## பெரியோர்களுக்கு-அகம்மதுசா சொல்சொல்-விருத்தம்.

நல்லதுயெனக்குச்சொன்ன நகருள்ளபெரியோர்களே
செல்வனுமனைவியாளும் செல்கின்றேம்வனதிற்கிப்போ



அல்லலில்லாமலிந்த அந்தமாநகரில்நீங்கள்
வல்லாமையோடிருந்து வாழ்ந்திருப்பீர்கள்தாமே.

## வசனம்.

ஆனுற்கேளுங்கள் இந்நகரிலுள்ளபெரியோர்களே வரும்விதி வழியிற்றங்காதென்றபழமொழிபோலே நானும் என்மனைவியும் என்பிள்ளை அப்பாஜியும் இந்நகரைவிட்டு கானகத்திற்குப்போகிறேம்நீங்களுங்கள்மக்கள் மனைவிகளோடு யாதொருதுன்பமுமில்லாமல் இந்நகரிலிருந்துகுறைவில்லாமல்வாழ்ந்துண்டிருப்பீர்கள்பெரியோர்களே.

## பெரியோர்கள்சொல்வசனம்.

அப்படியேபோய்வாருங்கள் தவுலத்தாகியசிரோன்மணியே.

## பொதுவிருத்தம்.

ஊருள்ளமனிதரோடு வுண்மையாயகம்மதுசா
சார்வதாய்ப்பயணஞ்சொல்லி தனதரண்மனையிற்செல்ல
கார்குழல்மதியமாது கணிகைதாதியர்கள்சூழ
பேர்பெறுமரசன்முன்னே பெண்மயில்வருகின்றுளே

## வசனம்.

அகோதெப்படியென்றுல் அகம்மதுசாவானவர் ஊரிலுள்ளபெரியமனிதரோடு தன்மகன் அப்பாசு கட்குடித்தவிசனத்தால் தர்க்கஞ்செய்து மார்க்கப்படி ஐந்துவருஷம் ஊரைவிட்டு அப்பாசைப் போகும்படியாயவர்கள்சொல்ல இவர்மனஞ்சகியாமல் தாய்தந்தை பிள்ளை மூவரும் போகிறேமென்கிறதாய் ஆராரிடத்திற் பிரயாணஞ்சொல்லி அரண்மனைக்குள்வா அவர்மனைவியாகிய மதியமாது தாதிகள்சூழ வருகிறவிதங்காண்க.

மதியமாதுவருகிற-ஓரடிதரு-இ-ம-சங்கராபரணம்-அடதாளம்.

## பல்லவி.

மானைநிகர்த்தவிழி தேனைப்பழித்தமொழி
மாதுமதியம்வந்தாள்

## அநுபல்லவி.

ஆனமாதர்களொன்றுய் அருகினிற்சூழ்ந்துவர
கானமயிலினையாள் கணவர்சமூகமதில் (மானை)

## சரணம்.

பூரணசந்திரபிம்பம் எங்கும்
பொலிதரக்கஸ்தூரிகதம்பம

வாரணிந்திடுகல்லமுலைக்கும்பம் - சோதி
வயங்கிடுமேகலையணிச்சம்பம்
தாரணிப்பெண்கள்கண்டு தயங்கிமயங்கிட
தானவர்வானவர் தானுணக்கொண்டிட
காரணிந்திடுங்குழல் கலைக்கண்டுமேற்றிட
ககனவிருளது கலங்கியேகாணிட
கலைகளொடுமிரு-தனங்குலுங்கிட
கனகமணிபணி-பளபளென்றிட
கமழத்தண்மலர் முடிக்குங்குழல்
தமைத்தின்பல-சுருப்புக்களும்
கரியமொய்க்க-பிரிய மிக்க
திரியசித்ர-வரிவிழிக்கட்
கதிர்கொண்மதியின்றனைமயக்க
சதிருடன்காலிற்சிலம்பொலிக்க (மானே)

பொது-விருத்தம்.

அகம்மதுசாய்பின்முன்பில் அரிவையாஞ்மதியார்தா
தகைமையாய்வந்துநிற்க தனயனப்பாசுமன்னன்
சகம்புகழ்சட்டைபூண்டு சிரசிற்சருபந்துகட்டி
வகையதாய்தந்தைதாய்முன் மகிழ்ச்சியாய்வருகின்றானே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாக அகம்மதுசாமுன்பாக அவர்மனைவிமதியமா தானவள்வந்து நிற்க இவர்களுடைய புதல்வனுகிய அப்பாசுமன்னன் வருகிறவிதங்காண்க.

அப்பாசுராஜன்வருகிற-ஓடித்தரு.

இ-ம்-காம்போதி-ஏகதாளம்.

பல்லவி,

வந்தானப்பாசு மன்னன்-மனமது மகிழவே-இளமுனோர்புகழவே
வந்தானப்பாசு மன்னன்

அநுபல்லவி.

தந்தைதாயிருவரும்-அந்தமாயிருக்கையிலே
சிந்தைகளிகூர்ந்து-சிறப்பாய்நடைநடந்து
தச்சேம்சேம் தரிகில்லானுதில்ல ஞ
திச்சேப்சேம் தரிதளங்குசகுமிகிட
தகிங்கணத்தோமென (வந்)



சரணம்.

இடுப்பிற்சட்டையும்பூட்டி-இருகாலுக்கும்
ஏற்றபாப்பூசுமாட்டி
அடுக்குமேலங்கிபூட்டி-சிரசதனில்
அழகாசருபந்துகட்டி
தொடரும்வினைப்பயனின் சூட்சமறிந்திடாத
கடரும்படியமைத்த கர்த்தன்செயலறியாமல்-த- (வந்)

பொதுவிருத்தம்.

வந்தவப்பாசுராசன் வரிசையாய்த்தந்தைதாய்க்கு
சிந்தையிற்களிப்புண்டாக நீராகும்வணங்கிநிற்க
அந்தகமதுசாகண்டு அரிவையுமகனைப்பார்த்து
பந்தமாமனிதர்சேர்ந்து பகர்ந்ததைக்கூறலுற்றார்.

வசனம்.

அகோதெப்படியென்றால் அப்பாசுமன்னர் தனது தந்தைதாயிடத்துக்குவந்து ரொம்பஅதபுடனே வணங்கி நிற்கையில் அகம்மது சாதன் மனைவியையும் தனது குமாரனையும் பார்த்து ஊரிலுள்ளபெரியமனிதர்களுக்கும் தமக்கும் நடந்த சவிஸ்தாரங்களைச் சொல்லுகிறவிதங்காண்க.

அகம்மதுசாசொல்-விருத்தம்.

எந்தனுருயிரோதேனே யெந்திழைமதிபமானே
முந்திடுமெவரத்தினாலே முதலவனளித்தசேயே
அந்தகாலனத்திறக்கன்லை யருநியதாலேயூரார்
மிந்தவூர்விட்டுகாட்டு லேவிடச்சொல்லினாரோ.

வசனம்.

சேனுங்கள் என்னுயிருக்குயிராகிய மனைவியே-என்னதுஆசையுமன்புமுள்ள தவப்புத்திரனுகிய அப்பாஜென்னுங்கண்மணியே முன் நீ வேட்டைக்குப்போனவிடத்தில் தண்ணீரென்று கள்ளைக்குடித்ததினாலே மார்க்கத்தினுள்ளபடி நீ ஐந்துவருஷத்திற்குக் காட்டிற்குப்போய் வரும்படியாய் ஊரிலுள்ளபெரியோர்கள் சொன்னார்கள் ஆகையால் நாமூவரும் இப்போதே பிரயாணப்பட்டுப்போகவேண்டியது இனிய நாழிகைமேனும் இந்தவூரிலிருக்கக்கூடாதுபெண்ணேமதியமாதேஎன் புத்திரசிகாமணியே.

பொது-விருத்தம்.

கணவனுரிதனைச்சொல்ல காரிகைகாதுதன்னில்
கனவினிலீயந்தன்னைத் தான்காய்ச்சிவிட்டாற்போல
மனமதுகலங்கிச்சோர்ந்து மண்ணின்மேல்வீழ்ந்தெழுந்து
கணவனைச்சுதனைப்பார்த்துக் கலங்கியேபுலம்பலுற்றாள்

வசனம்.

அகோதெப்படியென்றால் அகமதுசா மனைவிக்கும்மகன் அப்பாசுக்கும் ஊரார்சொன்னபடி காட்டிற்போகவேண்டுமென்று சொன்னவுடனே சுயதனை ..ய்ச்சி காதினில்விட்டாலெவ்வளவு வருத்தமுண்டோ அதுபோல மனமுருகி மதியமாது புலம்புகிறவிதங்காண்க.

மதியமாது புலம்புகிற-தரு-இ-ம்-ஆகிரி-அடதாளசாப்பு

அந்தநாளில் விதியமைந்தாலே-இந்த
அணிநகரை விட்டுப்போகலாச்சே
சொந்தமுள்ள யெந்தனயகரும்-நானும்
சுதனுடனே கூடபோகலாச்சே

உருளுதையோ யீரற்கருகுதையோ-எண்ணை
யுலையிலிட்டகட்டி மெழுகுபோலே
அரசிருந்து செல்வப்பிறவிழந்து-அந்த
நதியைப்போ லிந்தவூரைவிட்டு

புருஷர்நானுமிப்போ மயங்கிநிற்க-பெற்ற
புத்திரனுங்கூடத் தியங்கிநிற்க
மருவில்லாத காட்டுமலருமானேன்-மேக
மழையில்லாமல் வாடும்பயிருமானேன்

ஆலைவாயிலிட்ட கரும்புமானேன்-மத
யானையுண்ட கனிதானுமானேன்
சாலையற்ற பக்திதானுமானேன்-கன்று
தனையிழந்தபசுபோலுமானேன்

வேறிலாதமரம்போலு மானேன்-இடி
விழுந்தமயில்போலு மாகினேனே
ஊரிலாதகுடிபோலு மானேன்-சிறகு
வொடிந்தபக்ஷி போலுமாகினேனே

தேடும்பாம்பின் வாயிற் றேரையானேன்-நல்ல
தேனில்லாதகனிபோலு மானேன்
ஓடும்குடியில்லா மதியுமானேன்-மலர்
ஒக்கவிட்ட வண்டு போலுமானேன்

தலையெழுத்தோ யிந்தத்துன்பப்பட-இறையோன்
தானெழுதிவிட்ட தன்குறையோ
நிலையதனிற்றுரும்பு மாகினேனே-புவி
ஆளுகின்றயெந்தன் றஜுமானே

நீதமுடனிந்த வூரார்கூடி-இந்த
நிமிஷமதிற்போகச்சொல்லலாமோ
ஆதியேதானுங்க ளென்னசெய்வோம்-எங்களை
யாளுகின்றப்பிலாலமீனே.



பொது-விருத்தம்.

மன்னர்கோன்மனைவியேங்கிமயக்கியேபுலம்பிநிற்க
அன்னலாமகமதுசா அருகினில்வாடிநிற்க
நன்னயவப்பாஜென்னும் நாதிபனுருகிச்சோர்ந்து
கன்னனைநிகருதாரன் கலங்கியேபுலம்பலுற்றான்.

வசனம்.

அகோதெப்படியென்றால்மதியமாது தன்னாயகர்சொல்லியதைக் கேட்டுப்புலம்பிப்பிரலாபித்துநிற்க அகம்மதுசாவாடிச்சோர்ந்து நிற்க இவர்கள்புத்திரனாகிய அப்பாஜென்பவர் இதுகளையெல்லாங்கேட்டு மயங்கிப் புலம்புகிறவிதங்காண்க.

அப்பாசுபுலம்புகிற-தரு-இ-ம்-ஆகிரி-அடதாளம்.

ஆகமேபொருளுண்டான துனியாலமெங்குநிறைந்தோனே
ஏகசமதாநிறைந்த யிறையவனேமறைவில்லானே

பொல்லாதகள்ளுதன்னைப் புசிக்கச்செய்தாய்மறைவதாக
நல்லவர்முன்னின்றுபேச நாணுதேயென்மனதுமிப்போ

ஊர்தனக்காகாதவனாய் உடம்பெடுத்தேனுலகதனில்
மார்க்கத்துக்காகாதபிழை மனமறியாச்செய்துவைத்தாய்

அகம்மதுசாதன்வயிற்றில் அப்பாஜென்று பிறக்கவைத்தாய்
மகன்பிழையாலரசிழக்க வைத்தாயென்றன்தந்தைதாய்க்கு

அந்தமாநகராளுமென்னன்னைமதியம்வயிற்றில்
எந்தனையேனுவமைத்தாய் ஏகனேயிறையவனே

பிள்ளையாலேதேசம்விட்டு பிரதேசம்போகச்செய்தாய்
எள்ளலாகவெல்லவரும் எனைக்கண்டுநகைக்கவைத்தாய்

வாய்பேசாதவூரார்தம்மை மார்க்கப்படிசெய்யவைத்த
தாயார்தந்தையெந்தனையும் தரணிவிட்டுப்போகச்செய்தாய்

ஆகிநானென்னசெய்வேன் அல்லாவேநானென்னசெய்வேன்
சோதியேசுடரொளியே துய்யனேநானென்னசெய்வேன்

பொது-விருத்தம்.

தொல்லையாம்விதிவசத்தாற் சோர்ந்துலப்பாசுராஜன்
கல்பெலாங்கரைந்து நொந்துகருத்தினுட்புலம்பிநிற்க
வல்லகமதுசாவாடி நிற்பதைமதியங்கண்டு
பொல்லாதவிதிவந்துற்றாற் பொறுத்திடவேண்டுமென்றாள்

## இருவுமந்து-கொச்சகம்.

மனைவிசொன்னசொற்கேட்டு மன்னருந்தம்பிள்ளையுமாய்
முனைந்துகானகமேக மூவருஞ்செல்வேளையினில்
மனம்வாடியமீர்மந்திரி மன்னவர்தன்னெதிரில்வர
எனதரசையாளென் றிசைத்தந்தமந்திரிசொல்வார்

வசனம்.

அகோதெப்படியென்றால் அப்பாசுமன்னன்புலம்பு வதையும் அகம்மது சாமயங்குவதையும் மதியமாகக்கண்டு இனிவர்தவிர்க்குச்சமிப்பதினால் வருவ தொன்றுமில்லை என்றுசொல்ல மூவருமொருமனதாகிபிரயாணப்படுகிறவேளை யில் ரெட்டவும் ஒருமையாகிய அமீர்மந்திரி தன்னிடத்திலவந்து பரதவித்துக் கொண்டு நிற்க என்னரசை நாங்கள்போய் வருமளவும் நீயாண்டுக்கொண்டி ரென்று அரசன்சொல்ல அதற்குப் பதில்மொழி மந்திரிசொல்லுகிறவிதங்கா ண்க.

## மந்திரிசொல்-விருத்தம்.

இன்னகரரசையாள்வா யென்றிடுமரசர்கோவே
மன்னரேநீரில்லாதா லென்மனம்பொருந்துமோதான்
சொன்னசொல்லதனைமாற்றித் தொல்லரசாள்வீராகில்
வன்னமாயுமதுகூட மகிழ்ச்சியாயிருப்பதாமே

வசனம்.

கேளுங்கள் ராஜமேருவே தாங்கள் கானகம்போகிற விசனத்தால் இந்த கரையாளுமென்று சொல்லுகிறீர்கள் உங்களைக்காட்டிலனுப்பிவிட்டு நானர சாளுகிறதிற் பெருமையல்ல அந்தச்சொல்லை மாற்றிவிட்டு இராஜரீகஞ்செய் வீர்களானால் உங்களோடுகூட எப்போதும்போலே நீதத்தோடிருந்து காலம் போக்கிக்கொண்டிருப்பேன் கிரோன்மணியாகிய தவுலத்தே.

## இராஜன்மந்திரிக்குச்சொல்-விருத்தம்.

உரைத்ததுசரிதான்மந்திரி யூரினிலுள்ளோர்வந்து
வரைகிடந்திட்டதாலே வனத்தினிற்கேகச்சொன்னார்
முறையதுதப்பாமற்றான் மூவருஞ்சென்றுவாறோம்
அறநெறிபிசகிடாமல் அதுந்தனிலாளுமென்றார்

வசனம்.

அகோவாரும் என்மனதுக்கேற்ற அமீர்மந்திரி என்புதல்வனப்பாசு தெரி யாமல் தண்ணீரென்று கள்ளைக்குடித்ததற்காக மார்க்கப்படி ஐந்துவருஷம் இந்நகரைவிட்டு காட்டுக்குப்போய் வரும்படி ஊரிலுள்ளபெரியோர்கள்செ



ல்ல அதுபோலே நான் மனமொப்பி பிரயாணஞ்சொல்லி வந்தபடியினாலே இ னிநானிருந்தால் மார்க்கத்திற்குஞ் சத்தியத்திற்கும் விரோதமாயிருப்பதால் இ தோ யிப்போதே நாங்கள் போய்வருகிறோம் என்னுடைய செங்கோலு முந் திரைமோதிரமும் வாங்கிக்கொண்டு நாங்கள் தவணைதீர்ந்துவருமளவும் ஆக் ஞா சக்கரநெறிப்படி அரசையாண்டுக்கொண்டு வாரும்மந்திரி

## பொது-விருத்தம்.

மன்னர்சொற்போலேமந்திரி மரகதந்தன்னையாள
அன்னகர்தன்னையாண்ட அகம்மதுசாவெழுந்து
இன்னகர்தன்னைவிட்டு எழில்மூவர்பரியிலேறி
சொன்னமும்பணியுமாடைத் தொகுப்புடனெடுத்துச்சென்றார்

வசனம்.

அகோதெப்படியென்றால் அகம்மதுசாவானவர் தனது செங்கோலையும் முத்திரைமோதிரத்தையும் தனக்கு உரிமையாகிய அமீர் மந்திரியிடத்திற்கொடு த்து அந்தமாநகரத்தைச்சேர்ந்த தேசங்களெல்லா மரசாக்ஷிசெலுத்தும்படி ச் செய்துவிட்டு தன்மனைவியையும் தனதுகுமாரன் அப்பாசியையும் அழைத் துக்கொண்டு தனக்குவேண்டிய பூஷணாதிகளும் பொருள்களையு மெடுத்துக் கொண்டு மூன்றுபேரு மூன்றுகுதிரையிலேறிக்கொண்டு காட்டுக்கு அந்நகரை விட்டுப் பிரயாணப்பட்டு நடக்கிறவிதங்காண்க.

அகம்மதுசா-மனைவி-பிள்ளையப்பாசு

## இம்மூவருங்கானகஞ்செல்கிற-தரு

## சொண்டிச்சிந்து-இ-ம்-புந்நாகவராளி-ஏகதாளம்.

நடந்தார்நகரைவிட்டு-அவர்-மஞ்சிதஞ்சிபு மைந்தருடன்
கடந்தாரரசைவிட்டு-நல்ல-கனகமணியணிபொருளுடனே
தொடர்ந்தவினைசூழ-வெகு-துன்பங்கள்வம்புகள்பட்டடிவே
அடர்ந்ததெருக்கடந்து-வெகு-அங்காடி வீதியுந்தான்கடந்து
கடையுங்கடைத்தெருவும்-நல்ல-கம்மாளர்வீதியுந் தான்கடந்து
கொடிபோன்றிடைவகித்த-நல்ல-குச்சிலியர்வீதியுங்கடந்து
வடிவில்மிகுந்திலங்கும்-ராஜ-மன்னர்கள்வீதியுந்தான்கடந்து
குடைமன்னர்தாம்வாழும்-மிக்கக்-கோட்டையைவிட்டுவருமளவில்
கண்டார் சகுனமதை.

## பொது-விருத்தம்.

சரியொடுதனமில்லாமற் காதலிமைந்தன்றன்னைத்
திரமுடன்கூட்டிக்கொண்டு திலமதனகம்மதுசா

அரியதோர்பரியிலேறி அடர்வனம்செல்லும்போது
வரும்விதிபறியாமற்றான் வழியினிற்சகுனங்கண்டார்.

வசனம்.

அக்கோதெப்படியென்றால் அக்ம்மதுசாவும் அவர்மனைவிமதிகமும் புதல்வனாயப்பாசும் இந்தமூவர்களும் குதிரையிலேறி வேறுகாலாள்முதலிய சேனைகளில்லாமல் நகரைவிட்டுக் கானகம் போவதற்கு வெளியில்வரும்போது இவர்களுக்கெதிரே துக்கத்தைவிளைவிக்கும்படியான சகுனங்கள் காணுகிறவிதங் காண்க.

அகம்மதுசாவும்மனைவியும்பிள்ளையும்

வழியிற்சகுனங்காண்கிற-தரு-இ-ம்-நீதிகௌளி-ரூபகதாளம்.

பொல்லாச்சகுன்மிகவுங்காணுதே-எந்தன்மனைவிகேள்
பொருந்துமனமும் வருந்துகாணுதே
எல்லாம்விதி செயலோவையோ
என்தகமுமே மிகமெலியுது-என்மனநிலையது சோருது (பொல்)

சாரையுஞ்சிறுமுசலுமோடுதே-சீராய்ப்பாருமைந்தனே
சஞ்சலமடைந்தென் னகமும்வாடுதே
காருமுதிர மழைசொரியுதே
கனற்கொள்ளியெதிர்வீழ்ந்துதே-தினசூரிய னொளிதாழ்ந்துதே (பொ)

ஒற்றைப்பார்ப்பா னுகந்துவருகிறான்-நமக்கெதிரிலேதோ
ஒருவனெண்ணெய்க்குடங் கொண்டுதிரிகிறான்
உற்றுப்பாரதோ நக்ஷத்திரமுதிரு
ஓகோகெருடன் கட்டுது-வாகாய்ச்சிரமதில் தட்டுது (பொல்)

ஒண்டியொருத்தியாக வருகிறாள்-ஐயோவிப்போ
தொருகைப்பெண்ணு மெதிரில்வருகிறாள்
கண்டாயெனவலக் கண்ணுந்துடிக்குது
கருதாய்பொல்லாக்காலம்-கர்த்தனுக்கோப்போமுலம் (பொல்)

மதியமாது-தன்னாயகருக்குச்சொல்-விருத்தம்.

நந்தலாஞ்சகுந்தன்னை நாமுமேகண்ணிற்கண்டோம்
சிந்தையிற்கவலையான செயமுளவெனநாதா
அந்தமாய்வனத்திற்செல்ல ஆகாதாமும்பிபோ
வந்ததோர்வழியைக்கூடி மாநகர்ச்செல்லுவோமே



வசனம்.

கேளுங்கள் எனது பிராணநாயகரே இப்போது நாம்செல்லும்வழியில் பொல்லாத சகுனங்கள் எதிரிற்காண்கின்றபடியால் வந்தவழியே திரும்பி நமது நகரத்திற்குப்போயிருந்து நாளைக்குப்பிரயாணப்பட்டு வந்தால் நலமாயிருக்கின்றது சிரோன்மணியாகிய நாயகரே.

அகம்மதுசா-மனைவிக்குச்சொல்-விருத்தம்.

நகரத்திற்செல்வோமென்ற நாயகிசொல்லக்கேளாய்
செகத்திற்சத்தியந்தப்பி சீரிலாதிருக்கலாமோ
உகமதுபுரண்டாலும்நாம் வுரைத்தசொற்பழுதாமாறல்
அகமதிற்கிலேசமின்றி அன்புடன்செல்வோம்பெண்ணே

வசனம்.

கேளும்பெண்ணேஎன்மனதிற்கிசைந்த மதியமாதே-இப்போது அவசகுனங்கண்டதென்று நகர்போய்வரலாமென்றுசொல்லுகிறாய் இந்தலோகங்கீழ்மேலாய்ப்புரண்டாலும் நாம்சொன்னசொல்லுக்குமாறி சத்தியத்திற்குவிரோதமாய் நடக்கலாமா ஆனபடியால்நாம் சொல்லிவந்தசத்தியத்தைப் பெரிதாயெண்ணி சந்தோஷமாய்நடப்போம் வாருங்கள் என்மனைவியே அப்பாஜென்னும் புத்திரசிகாமணியே.

பெண்சாதிபிள்ளைசொல்-வசனம்.

அப்படியேநல்லபாக்கியம் அரசநாயகரே.

பொது-கொச்சகம்.

மூவருமோர்மனதாகி மூணைந்துவழிதான்கடந்து
காவனஞ்செல்லும்படியாய்க் கர்த்தன்விதித்ததென்று
பாவமென்செய்தோமோ பகரும்நகுமானேயென்று
ஆவலுடனேபுலம்பி அகன்றுவழிநடந்தாரே

அகம்மதுசா புலம்பல்-தரு

இராகம்-மாஞ்சி-தாளம்-ஆதி.

பல்லவி.

யான்பாவி-புவி-யாண்டபலனிதுவே-பிள்ளை
பெற்றபலனிதுவோ

அநுபல்லவி.

வையகமாதர்கள்வந்துபணிந்திடும் மாதுமதியமேகேள்-உன்றன்
மனமுருகிட மதிமுகஞ்சோர்ந்திட வாடிநடக்கலாமோ (யான்)

சரணங்கள்,

பஞ்சணைமெத்தையின் மீதடிவைத்திடப் பாதஞ்சிவந்திடுமே
சஞ்சலத்தாலேமதியமெனுமாதே தள்ளாடியேநடக்க (யான்)

கொஞ்சுங்கிளியெனவேவஞ்சலாடிடுங் குலாவுங்குயில்மயிலே நீ
மிஞ்சிநடக்கையிலுன்னிடமேனியில் வேர்த்தூச்சலமொழுக (யான்)

பஞ்சவர்ணக்கிளிபோல்மொழிபேசிடும்பாலனப்பாசுசெல்வன் இப்போ நீ
அஞ்சுதலாகநடந்துவருவதாலங்கம்பதறுதே (யான்)

பொதுவிருத்தம்.

அகம்மதுசாபுலம்பி அடவியில்நடக்கும்போது
பகையுள்ளகரடிசிங்கம் பலமிருகங்கள்யாவும்
நகமுகந்தனிலுங்காண நடுங்கியேமதியமாது
அகமடுக்குற்றுவாடி அயர்ந்துமேபுலம்புவாளே.—

மதியம்புலம்பல்-தரு-இ-ம்-பைரவி-மிசுரதாளம்.

இருள்சூழ்ந்தவனத்தினிலேநடக்கையில் குமாரனே எங்க
ளெதிராயனேகமிருகங்கள்வருகுதே இறையோனே
கரடிபுலிசிங்கங் காட்டானையாளிகள்-குமாரனே இந்தக்
கானகந்தன்னிலே காணுதேயென்செய்வோம் இறையோனே
கல்லாரம்போலும் தொன்னகரொன்றுங்காணோம்-குமாரனே-எங்கும்
தோற்றுதேகாடாக சூழ்வினைக்கென்செய்வோம் இறையோனே
மலைகளுங்கணவாயும் மார்க்கத்திற்றோற்றுதே-குமாரனே எங்கள்
மதிமயங்கிச்சோர்ந்து வாடிமெலிவலாச்சே இறையோனே
மாடப்புறக்குயில் மரங்களிற்கூவுதே-குமாரனே காட்டில்
மனாகளுங்கலைகளும்மறித்துக்கொண்டோடுதே இறையோனே
கூடிப்பலபட்சிகள் கூக்குரலிடுகுதே-குமாரனே பூதக்
கொள்ளிப்பிசாசுகளுங்குதர்க்கங்களசெய்யுதே இறையோனே
கள்ளவாகிலுமிரக்கந்தானில்லையோ-குமாரனே இப்போ
தேழைகள்போலவே யேங்கித்தவிக்கிறோமே இறையோனே
கள்ளர்கள்போலெதிர் காணுதேயென்செய்வோம்-குமாரனே என்ன
காரணமோயிது-ஆரணப்பொருளோனும் இறையோனே

பொதுவிருத்தம்,

தண்டமுமம்புமவில்லும் சக்கரத்துடனேவாளும்
கொண்டுமுன்னூர்ப்பரிந்து கூட்டமாய்வளைந்துகாட்டில்



திண்டிறலரசன்புத்ரன் திருமதிபெருமூவோருங்
கண்டுளங்கலங்கியேங்கக் கள்ளர்கள்தோன்றினாரே

வசனம்.

அகோதெப்படியென்றால் அகம்மதுசாவும் மனைவியும் புதல்வனும் மிருகமுதலானதுகளைகண்டு பயந்துநடக்கையில் அந்தக்கானகத்திலுள்ள கள்ளர்கள் அதட்டிக்கொண்டுவருகிறவிதங்காண்க.

கள்ளர்கள்வருகிற-தரு-ஆனந்தபைரவி-ரூபகதாளம்

பல்லவி.

வந்தனர்திருடர்தாமே-இவர்கள்முன்னே
வந்தனர்திருடர்தாமே

அநுபல்லவி.

வந்தனர்திருடர்கண்ணிற் செந்தணற்பறக்கராஜன்
மைந்தனும்மனைவியுமாய் நொந்திடவதட்டிக்கொண்டு (வந்தனர்)

சரணங்கள்,

கர்ங்குசல்லடம்போட்டு கருங்கச்சிடுப்பிற்கட்டி
பாங்குடனரையதனிற் பட்டுநூல்கயிறுங்கட்டி (வந்தனர்)

கத்தியாலேவெட்டுமென்பார்-எத்திநிந்தலையையென்பார்
சுத்திலும்வளையுமென்பார்-பத்தியேபிடியுமென்று (வந்தனர்)

ஈட்டியொடுசக்கரமும்-தாட்டிகத்துடனெடுத்து
வாட்டிடுங்களென்றுசொல்லி-எட்டிப்போட்டிக்காட்டிக்கொண்டு (வந்)

கள்ளர்கள்சொல்விருத்தம்,

எங்கடாபோறாய்நீங்கள் எவனடாநில்லுநில்லு
பங்கமேபடுத்துமுன்னே பரிவுள்ளமனையாளான
மங்கையாள்பூண்டரத்ந மணியதைக்கழட்டியீந்து
உங்கயிலிருக்கும்ரொக்க மியாவையுந்தந்திடாயே

வசனம்,

அகோவழிப்பிரயாணம்போகிறவர்களே குதிரையேறிக்கொண்டு நீங்களெங்கேபோகிறீர்கள் குதிரையைநிறுத்தி நில்லுங்கள் எங்கள் சொற்கடந்து

போவீர்களானால் உங்கள்மூவரையும் கொல்லுவோம் நீ உங்களிடத்திலிருக்கும் பொருள்கள்யாவுங் கொடுத்துச்செல்லுங்கள் வழிப்போக்கர்களே.

அரசர்சொல்-விருத்தம்.

தக்கிடுமுடைமையென்று சாற்றிடுங்கள்ளரேநீர்
வந்தன்றன்முகத்தைப்பாரும் இராஜரில்ராஜனென்றன்
வந்திடும்வினையாலென்றன் மனைவியுமகனுங்கூட
வந்தனுதுங்களஞ்சம் மகிழ்ந்தென்னை விடுவீரையா.

வசனம்.

அகோகேளுங்கள் கள்ளர்களே எங்கள்பொருள்முதலியதைக் கொடுக்கும்படியாகக்கேட்டீர்கள் நாம்அந்தமானகரையாண்டராஜர் இவர்கள் என்மனைவியும்புதல்வனுமாகையால் என்முகத்தைப்பார்த்து உங்கள்மனமிரங்கி விட்டுவிடுங்களையா.

கள்ளர்சொல்விருத்தம்.

வினைமுகத்துநவுகூறும் வீணனேபுவியாய்ப்பட்ட
இனமிருகமுந்தப்பித்து யேகுமோவரசேகேளாய்
புனையும்வஸ்திரமும்பெண்டீர் பூஷணந்தாராவிட்டால்
உனையுமுன்பெண்டீர்பிள்ளை யுடனிதோகொல்லுவோமே.

வசனம்.

அகோகேளாய்வீண்மனிதனே யுத்தகளத்தில்போர்செய்கையில் ஒன்றுஞ்சொன்றறவாடியதன்மைபோல் நீ சொல்லுகிறாய் அதுசரியல்லஇப்போது நீ கட்டியிருக்கிறவஸ்திரமுதலிய பூஷணாதிகளுங் கொடுத்தீர்களானால் உயிர்தப்பிப்போவீர்கள் இல்லாவிட்டால்உங்கள்மூவரையுங் கொன்றுவிடுவோம் வழிப்பிரயாணம்போகின்றவனே.

அகமதுசாகள்ளர்களுக்குச்சொல்-கொச்சகம்.

கொன்றிடுவோமென்றுசொன்ன கொள்கையுள்ளகள்ளர்களே
இன்றுபிள்ளைமனைவியுமா யேகநகுமாண்மைப்பால்
பண்டுநகர்தம்மைவிட்டுப் பார்வனத்தில்வந்தவனை
ஒன்றுமின்றிக்கேட்கின்றீ ருங்கள்மனதிரங்காதோ

வசனம்.

கேளுங்கள்கள்ளர்களே எங்கள்நாட்டையிழந்து காட்டுக்குவந்த மூவரையும்பொருள்முதலானதைகேட்கிறீர்கள் எங்களுக்குயாதொரு ஆதாரமில்லாமல் லெப்படிக்கொடுக்கிறது ஆயினும் உங்களமனதிரங்கவில்லையோ கள்ளர்களே.



அகம்மதுசாவுக்குங்கள்ளர்களுக்குந்தர்க்கத்தரு-இ-ம்
இ-ம்-முகாரி-சாப்புதாளம்.

அகம்மதுசா சொல்லல்.

காடதனில்நாங்கள்வரக்கள்ளர்களேவழிமறித்து
கனகமணிப்பணிகளெல்லாங்கழட்டித்தாச்சொன்னீர்

கள்ளர்கள்சொல்லல்.

நாடுதனையாண்டிருந்தும்நயமறியாமன்னவனே
நாடும்பொருள்பறிக்காமல் நாங்கள்விடலாமோ

அகம்மதுசாசொல்லல்

கைப்பொருளைப்பறிப்போமென்றகள்ளர்களேகேளீர்
காட்டிலென்னநாங்கள்செய்வோங்கருணைபுரிவீரோ

கள்ளர்சொல்லுதல்.

மெய்ப்புடனேயிதுதொழிலாய்மேவிக்காட்டில் திரிவோர்க்கு
மெலிவைச்சொன்னுலிவ்வனத்தில் விடுவதுண்டோவரசே

அகம்மதுசாசொல்லல்.

அழகாயத்தமாநகரையாண்டிருந்தேன்சிலநாள்
அதையிழந்துவுங்களிடம்வந்தகப்பட்டோமே

கள்ளர்சொல்லுதல்.

பழகுகின்றமனிதனைப்போற்பகாரசேநாங்கள்
பற்றும்பொருள்தாராவிட்டால்பரிந்து கொலைசெய்வோம்

அகம்மதுசா சொல்லல்.

கள்ளர்களேகொலைசெய்வோமெனக்கழறல்வேண்டாம்
கனகப்பொருளியாவுநீவோங்கருதிவாங்கிச்செல்வீர்

கள்ளர்சொல்லுதல்.

உள்ளபடிகொடுத்தீருன்மனைவியோடுநீரும்
வுகந்துபோங்கள்நாங்களெங்களூர்தற்குப்போறோம்

பொது-விருத்தம்.

திருடர்கள்பொருள்கள்யாவுந்திறமுடன்வாங்கிச்செல்ல
மருகமழரசர்தானு மனைவியுமகனப்பாசம்

டரிய்ந்தட்டரியிலேறி வயர்வனஞ்செலுப்போது
கருடுசேர்ந்திரண்டுகண்ணுங் கலங்கியேபுலம்பலுற்றார்

புலம்பல்பொருத்-தரு-இ-ம்-நாட்டை-அடதாளம்

ஆதிபெருமானே ஆண்டவனே துனி
பாலமெங்குநிறைந்தமெய்ப்பொருளே
சோதிவேகடரொளியே துய்யவனேஇந்தத்
துன்பப்படவைத்தாயேஇறையோனே

முன்னேசுகிழக்கச்செய்தாயேபின்பு
மூர்க்கக்கள்ளர்டரிக்கச்செய்தாயே
பன்னருபாவிபருப்புதல்வனுமுன்னுன்
வன்கொலைகள்செய்ததுண்டோஇறையோனே

எத்தீமுடைமையினைவெடுத்தோமோயிப்போ
எல்லைதப்பிநடந்திருந்தோமோ
சத்தியத்தப்பிநடந்தோமோபொல்லாத்
தாறுமாறுகள்செய்துயிருந்தோமோ

அன்னைதந்தையர்கட்கு அருட்பிழைசெய்தோமோ
ஆர்க்குமனநடுங்கவைத்தோமோ
இன்னிலத்திலெளியோரையெதிரிகளாக்கிக்கொண்டு
எதேனுந்துன்பஞ்செய்திருந்தோமோ

காடதைக்கடந்திப்போது கண்ணுக்கெட்டாத் தூரமந்தூரம்
கானகமாயிருப்பதல்லாற்கரை துறைகளொன்றுமில்லை
நாடுமில்லைநகருமில்லைநாமிருக்கோர்தலமுமில்லை
நாங்களிதற்கென்னசெய்வோமிறையோனே

வாழ்முழங்கத்திலுள்ளமன்னர்கள்சஞ்சாரமில்லை
வகையேதெயாடலைந்துநைவோம்மா
ஏழையானேமெத்தியானே மெங்கள்தலைவிதியால்
என்னசெய்வோமிந்தவினைக்கிறையோனே

வலையினிற்பட்டமான்போல்வாடித்தவிக்கிறோமே
வல்லமையுடன்காத்தருள்வாய்குருபானே
தொலைதூரம்நடந்துவந்துந்தொன்னகரங்காணவில்லை
அன்பமூர்த்திரவில்லையிறையோனே



என்னசெய்வோமேதுசெய்வோமிறையோனேயிப்போ
எங்கள்வயிர்பசிக்குதையோயிறையோனே
அன்னைதந்தையில்லாதஅருட்பொருள்ருபமானே
ஆதாரப்பொருளேஅல்லாவே

பொது விருத்தம்.

இப்படிப்புலம்பிமூவ ரிறங்கியோரிடத்திருக்க
ஒப்பிலாத்தந்தைதாயர் குற்றிம்பசியால்வாட
அப்பாஸ்ராசன்கண்டு அவர்கள்தன்பசியைத்தீர்க்க
ஒப்பியேவிடையும்பெற்று உணவுதேடுதற்குச்செல்வான்

இதுவுமது-விருத்தம்.

உணவதுதேடுதற்கு உற்றதோர்புரவியேறி
மனமுடன்கானகத்தில் மான்மறைகிடைக்குமென்றங்
கணைத்திடஅடுதோறுங் கனபரிநடத்திச்செல்ல
இணைக்கமாய்மான்களொன்று யேகமாய்மேயக்கண்டான்

வசனம்.

அகோதெப்படியென்றால் கானகத்தில் மூவரும்புலம்பி நடக்கும்போது பசிசோர்வாயுண்டானபடியால் ஒருமரத்தினிடத்தில் அவரவர்கள் குதிரையை விட்டிறங்கியிருக்க அந்நேரத்தில் அப்பாஸ்மன்னன் தாயுந்தகப்பனும் பசியால்வருந்திப் பாதவிப்பதைப் பார்த்து மனஞ்சகிக்காமல் அவர்களிடத்தில்விடைபெற்றுக்கொண்டு ஆயுதபாணியாய்த்தன்குதிரைமேலேறிக்கொண்டு உணவுக்காகஅவ்வனத்தில் மான்மரைமுதலானதுகளைத்தேடிப் பார்க்கையில் ஓர் வெளியில் அனேகமான்கூட்டங்களாய்ப் புல்மேய்ந்து திரிவதைக் கண்டான் இனிநடக்கிற விதங்காண்க.

அப்பாஸ்வேட்டையாடுகிற-தரு-இ-ம்-கலியாணி-அடதாளம்.

பல்லவி.

இந்தவில்லுக்கெதிரோ-மிருகங்க-ளிந்தவில்லுக் கெதிரோ

அநுபல்லவி.

அந்தமதாகவேயிந்தக்காட்டினில்வாழ
சந்திக்காடுகள் மந்தைமனைகளும் (இந்த)

சரணங்கள்.

குடலைப்பிடுங்கிடுவேன்-எந்தன்வேலாற்
குத்திவதைத்திடுவேன்
அடல்பெறுமானினமதோகூடிநிற்குது
அம்புதொடுக்கவேகும்பலாயோடுது (இந்த)

சிங்கங்கள்சேய்கிறது-அதைக்கண்டு
செந்நாய்கள்பாய்கிறது
பங்கமில்லாமலேபதுங்கியோர்மானது
பரிவாசநிற்குதுசரியப்புசெய்திட (இந்த)

மாட்டிவேபம்பதனை-அப்பாசும்
மானினையெய்திடவே
நாட்டகமானின்விலாவதிற்றைத்திட
தள்ளாடியானினமுன்வள்ளதுஞ்சென்றிட (இந்த)

பொது-விருத்தம்.

மானினையெய்தபின்பு மன்னனுமப்பாஜேந்த்ரான்
தானதைப்பிடிக்கவெண்ணித் தனிவாசிவிட்டிறங்கி
கானமாய்மான்முன்செல்லக் கடுகியேகாட்டிலோட
நாணமாயதைத்தொடர்ந்து நாற்றிசைதிரிந்தானன்றே

இதுவுமது.

நாற்றிசையலைந்துபார்த்தும் நாடுமானகப்படாதால்
பார்த்திபனப்பாஜேந்த்ரன் பரிநின்றவிடத்தில்வந்தான்
கார்த்திடும்பரிகாணுதால் கலங்கியேதேடும்போது
பார்த்திபரகம்மது சாபரியின்வாறுசொல்வாம்

இதுவுமது.

இப்படியப்பாஜேந்த்ர னெழிற்பரிதேடும்போது
அப்பியேகாட்டிற்சென்ற வுயர்மகன்வாராதாலே
செப்பியதந்தைதாயுஞ் செல்வனைநினைத்துவாடி
மெய்ப்புளகமுறைநொந்து மெலிந்துமேபுலம்பலானார்.

வசனம்.

அகோதெப்படியென்றால் அப்பாசுமன்னன் தன்கையிலிரு
க்கும் வில்லில் அம்பைப்பூட்டித் தனித்துநின்றமானின்மேலெய்



ய அதின்விலாவிற் சணைபாய்ந்து சோர்ந்துநிற்கப் பரியைவிட்டுக்
கீழிறங்கிப் பிடிக்கப்போகையில் அதுகானகத்திலோடிப்போகவ
தன்கூடத்தொடர்ந்து நாற்றிசையிலும் அலைந்து திரிகையில் மான்ம
றைந்துபோய்விட்டது பின்புராஜன் தன்குதிரையிருந்தவிடத்தில்
வந்துபார்க்க அதுவுங் காணாமற்போய் விட்டது அதைத் தேடிக்
கொண்டுதிரிகையில் அவர்தந்தைதாயிருவரும் காட்டிற்போனமக
னைக்காணோமென்று புலம்புகிற விதங்காண்க.

தந்தைதாய்புலம்பல்-தரு-இராகம்-ஜம்பை-அடதாளம்.

அம்புவில்லுங்கைப்பிடித்து அரும்புரவியேறிச்சென்ற
அழகுபசுங்கிளியே யெங்களப்பாசுமகனே

இங்கேயிருக்கவென்று யெங்களுக்குயிதவுசொல்லி
எங்கேநீபோனாயோ எழிற்பொருந்துமகனே

ஒண்டியாய்ப்பரியேறி வுயர்வனத்திற்சென்றாயே
உன்பசியாலுளமருண்டு சோர்ந்தாயோமகனே

காட்டிலுளவேடர் கையிலகப்பட்டாயோவென்ன
காரணமோவறியோமோடா கண்மணியேமகனே

குதிரையதின்வேகமதாற் குதித்துவிழுந்தாயோவென்ன
கொடுமையோநாமறியோம் குணமுள்ளவென்மகனே

பால்போன்றமதிமுகத்தைப் பார்ப்பதெப்போநாங்கள்
பருவனம்போய்வாறேனென்று பகர்ந்தாயோமகனே

காலக்கொடுமையோவையோ கலிகாலதீவினையோ
கண்மணியேயிதென்ன காரமோமகனே

சுவர்தனைத்துச்சித்திரங்கள்தானெழுதுவதைப்போல
துரையேவுன்னால்நாங்கள் வாழவேணுமடாமகனே

ஆதியேகுமாரனே அல்லாவேயெங்களிட
அருட்புதல்வனுன்னுடைய அடைக்கலமேகண்டாய்

ஏகபெரியவனே யிறைவனேயிப்போது
எங்கள்மகனிங்குவந்துசேரவுந்தனுதவி

பொது-விருத்தம்.

அரசனுமனைவியாரு மப்பாசைக்காணோமென்று
இறையவனிடத்தில்துவா யிரங்கியேகேட்கும்போது

மறைந்தமான்பின்னைத்தேடி மைந்தனுங்காணுதாலே
பொருந்தவேவாடிச்சோர்ந்து புகழ்தந்தைதாய்முன்வந்தான்.

இதுவுமது.

வந்ததோர்மகனைக்கண்டு மன்னனுமனைவியாரும்
இந்தநன்னேரமாக யேர்பாவியுமில்லாமல்
சந்தேகமாகவந்தாய் சாற்றெனவிவர்கள்கேட்க
சொந்தநற்றாய்தந்தைக்குச் சொல்லினனடந்ததெல்லாம்.

வசனம்.

இவ்விதமாக அகம்மது சாவும் அவர்மனைவியும் மகன்வரக்காணுமென்று புலம்பிப்பரிதவித்து மகன்வரவேண்டுமென்று அல்லாவிடத்திற்று வாக்குக்கட்டிக்கொண்டிருக்கையில் மானையும்பரியையுந்தேடிப்போன அப்பர்சகாணுதால் சொப்பமனவருத்தத்தோடு தந்தைதாய்முன்வர அவர்கள் இவ்வளவு தாமசமென்னவென்றுகேட்க காட்டில்நடந்த சவிஸ்தார முழுமையும் இவர்களுக்குச் சொல்லியபின் நடக்கிறவிதங்காண்க.

பொது-கலித்துறை-தரு-இ-ம்-பந்துவராளிசாப்புதாளம்.

தந்தையுந்தாயுந்தனையன்சொற்கேட்டுத்தயங்கியப்பால்
அந்தவனத்தைவிட்டப்புறஞ்செல்லவேநினைந்து
தந்தம்பரியினைத் தாம்தேடிப்பார்க்கக்காணுமையினுல்
இந்தக்குமாரன் நம்மைவிட்டுப்போனது.

இதுவென்னகாரணமோ-தருமானே
இதுவென்னகாரணமோ
இதுவென்னகாரணமோ-வல்லபெரியவனே
எங்கள்குறைதனை-எபிட்சைசெய்தது (இரு)

இதுவுமது

தொல்லுலகாளும்பெருமை யெல்லாஞ்சமையாச்சமந்து
எல்லையதானநகரைவிட்டுக் காட்டிலேவைச்செய்தாய்
நல்லமனைவியும்புவியி லுள்ளோர்க்குநாடிச்செய்த
வல்லவனேயெங்கள்.

மனநோகச்செய்யலாமோ-தருமானே
மனநோகச்செய்யலாமோ
மனநோகச்செய்யலாமோ-வல்லபெரியவனே
இனமாயிம் மூவரையும்-இந்தத்துயரமதாய் (முன)



இதுவுமது.

விதியோமகன்றன் தெரியாமற்கள்ளையுண்டதற்கு
பதியுமிழந்துகானகத்தில்வரப்பகருங்கள்ளர்
சதிசெய்யகுதிரைத்தானேகச்செய்தாய்தகைமையதோ
மூதிவனைவிட்டுமுறையே

மூவருங்கால்நடையாய்-தருமானே
மூவருங்கால்நடையாய்
மூவருங்கால்நடையாய்-தாவிநடக்கயின்னம்
என்னகுறைவருமோ-இறையேநாங்களறிவோம் (மூவ)

பொது-விருத்தம்.

இருந்ததோரிடத்தைவிட்டு யெழுந்துயேநடக்கும்போது
வருந்தியேமூவர்தாமும் வல்லவன்தனையேகெஞ்சி
பொருந்தியேபாவ்பாவென்று பொறுமையாய்ச்செல்லும்போது
கிரீந்திடுஞ்சுரவனத்தைக் கண்ணிறுற்கண்டாரன்றே.

வசனம்.

அதேதெப்படியென்றால் இவர்களிருந்தவனத்தைவிட்டுக்காட்டினில்நடக்கும்போது அல்லாகுத்தாலாவைக்கெஞ்சிப்புகழ்ந்துகொண்டுபோகும்போது பாலவனத்தைக்கண்டு நடக்கிறவிதங்காண்க.

மூவரும்பாலவனம்போகிற-தரு.

தொண்டிச்சிந்து-இ-ம்-புந்நாகவராளி ஏகதாளம்.

கண்டார்சுரவனத்தை-மனக்
கலங்கிப்பெருங்கவல்புற்க
விண்டாரேயொன்றுக்கொன்று-இந்த
மேதினியிற்சுரவனமிதென்று
பார்த்தார்திசையெங்கும்-புகை
படரும்நெருப்புப்படர்ந்தெரிய
தீர்த்திசையெங்கிலுமே-வேனில்
தண்ணியதண்ணீர்போற்றோன்ற
வாயின்படத்திலுள்ள-எலி

பதுங்கியிருக்கின்ற பான்மைகண்டார்
தேப்பியமானதுதான்-புலி
சென்னியிற்கீழ்த்தலைவைத்துநிற்க
இந்தப்படியுள்ளதைக்-கண்டு
ஏங்கியேசோர்ந்துநடக்கையிலே
வெந்தொடுங்கிநிற்பதினால்-கள்ளி
வேதாளம்போலே யெதிரில்நிற்க
கொடுத்தோர்தனைத்தடுத்தோர்-மனம்
கொடிதிலும்பெரிதானசாமிதுவாம்
அடுத்தாரைக்கெடுப்பவர்போல-அங்கே
அந்தரமாய்வெந்தகிலமரங்கள்
சூலாயுதக்காளி-அருகில்
சூழ்ந்தேவதற்செய்திடும்சிலபேய்கள்
பாலவனமிதென்று-யாரும்
பகரிடவவர்மனங்கருகிடுமாம்
முகிலேமும்பெய்யாத-காத
மூன்றுள்ளதானவாரண்டகாரம்
அகிலத்திலுள்ளவர்கள்-வந்தால்
அவதிகள்பட்டிடுமேந்தச்சுரம்
இந்தக்கொடுமைகண்டு-மூவர்
ஏகிநடக்கையிற்றுகமுண்டாய்
வெந்தகள்ளிக்கட்டையின்கீழ்இவர்கள்
வீற்றிருந்தாரிளைப்பாறுதற்கு-தன

பொது-விருத்தம்.

கள்ளியின்கீழிருக்குங் காவலன்றந்தைதாயும்
உள்ளமேநெர்ந்திருக்க வுண்மையப்பாசம்பார்த்து
விள்ளுவாரவர்களுக்கு வேகமாய்நடந்தோமாகில்
அள்ளுநீரிருக்குஞ்சோலை யம்பதிகாணலாமே.

இறவுமது.

அறிவுள்ளமகன்சொற்கேட்டு அன்புடன்றந்தைதாயார்
முறையுளமகனைப்பார்த்து முதல்வனேமுத்தின்வண்ணம்
குறைபிறுமவுத்தாஞ்சொன்னேன் சுரத்தினி னடக்கோமென்ன
அறைகடலனையவாய்விட் டழுதுஅப்பாசுஞ்சொல்வார்



இதுவுமது-கொச்சகம்.

தந்தையரேதாய்மாரே தன்றோளி லேறுவீரேல்
எந்தவிதமுஞ்சுமப்பே னிறையோனுதவியினால்
அந்தமுடனடப்பேனென் றுரைத்திடுந்தப்பிள்ளை சொற்போல்
சொந்தமகன்றோளேறத் துயரமுடனடந்தனனே

வசனம்.

அந்தெப்படி யென்றால்பாலநிலத்திலுள்ள கொடுமைகளை யெல்லாங் கண்டு பதறி நடக்கையில் வெய்யலின் சூட்டினால் கால்கள்கொப்பளிக்கத் தாகமுமேலிட்டு வெந்தெரிந்தகள்ளிக்கட்டையின்கீழ் நிழலுக்கிருக்க தந்தைதா யிருவரையும் பார்த்து நடந்து போவோமென்று அப்பாசு சொல்ல அவர்கள் இந்த வனத்திலேயே மவுத்தாகிப்போவோம் இனிநடக்க எங்களால் முடியாதென்று சொல்ல அவர்களை அல்லாவுதவியால் நான்சுமக்கிறேன் என்தோளிலேறுங்களென்று அப்பாசுசொல்ல அதுபோலேயிருவரும் சம்மதிக்க அவர்களையேற்றிக்கொண்டு துயரத்துடனே நடக்கிறவிதங் காண்க.

அப்பாசுபுலம்பல்-தரு-இ-ம்-எருகுலகாம்போதி-அடதாளம்.

தோளின்மிசைதாய்தந்தையையேந்தி-நான்
துயரமுடன்நடக்கவெந்தன்விதியோ
ஆழிசூழுலகர்போற்றுகின்ற-என்
னன்னைதந்தைதனைச்சுமந்தேனென்விதியோ

தேசமெல்லாமாண்டிருந்தோம்நாங்கள்-இந்த
தீவெயிலுஞ்சுரத்தில்நடக்கவிதியோ
ராஜாராஜரெனச்சுமந்தாரபதியில்-இப்போ
நான்சுமக்கவெந்தன்தலைவிதியோ

பஞ்சணைமெத்தையினடந்தபாதமே-பொல்லாப்
பாலவனந்தனில்நடக்கவிதியோ
கொஞ்சுபரிமேலேறிச்சென்றநாட்போய்-இந்த
கொடுஞ்சுரத்தில்நான்நடக்கவிதியோ

ஆதியறிவாணம்பிடபொருத்தம்-இப்போ
ஆருடன்சொல்வோம்நமதுவருத்தம்
ஏதுசெய்வோமென்றுசொல்லிநடக்க-ராஜன்
இருகாலுமிடறிவிழுந்தனனே

பொது-விருத்தம்.

புலம்பியப்பாசுமன்னன் போற்றிநிந்த தந்தைதாயைக்
கலக்கமாய்ச்சுமந்துசெல்ல காலிற்கல்லிரடிவிழ
வலப்புறந்தாயுந்தல்லை மன்னர்பற்றேர்பால்வீழ்ந்து
நிலத்துடனெழுந்துபின்னை தனைப்பார்த்துப்புலம்புவாரே

இதுவுமது-கொச்சகம்.

ஐம்பொறியுந்தான்கலங்கி யலறிவிழும்பாலரிட
முன்பில்வந்துதாய்தகப்பன் மோகமுடனேயெடுத்து
தென்புடனேமூர்ச்சையதாய்ச் சேர்மகனைக்கண்டேங்கி
அம்பொன்மயிலாரு மாசர்புலம்பினரே

வசனம்.

அக்கோதெப்படியென்றால் இவ்விதமாய்த் தாய்தகப்பன் என்னால் நடக்க முடியாதென்றுசொல்ல அப்பாசுமன்னன் தாயை யொரு தோளிலும் தகப்பனையோர்தோளிலு மெடுத்துச் சாத்தில் நடக்கையிற் காலிற்கல்லிடித் தவறிவிழ தோளிலிருந்த இருவர்களும் ஆளுக்கொரு பக்கத்தில்விழுந்து எழுந்து மகன்விழுந்ததைப் பார்க்கையில் மூர்ச்சையாயிருப்பதைப்பார்த்துப் புதல்வனைத் தூக்கி இருவரும் புலம்புகிற விதங்காண்க.

தந்தைதாய் புலம்புகிற-தரு-இ-ம்-தோடி-ஆதிதாளம்.

மூர்ச்சையாகியமகனைத்-தாயார்
முகர்ந்துமுகர்ந்துக்கொண்டு
பேச்சொன்றுங்காணோமென்று-கலங்கிப்
புரண்டுவுருண்டழுதாள்

மனைவியழுதவிருல்-அந்த
மாநகரமதுசா
தனதுமகன்தனையே-யெடுத்துந்
தழுவியழுதுசொல்வார்

என்னைச்சுமந்தாயே-மகனே
இடறிவிழுந்தாயே
முன்னில்விழுந்தவிதம்-எனக்கு
மொழியவுங்கூடாதோ

என்னிருகண்மணியே-ராஜ
யிளஞ்சிங்கமேமதியே



பொன்னினவமணியேஇதுவென்ன
புதுமையாய்வந்தவிதம்

வாயைத்திறக்காயோ-ஒருமொழி
வார்த்தைகள்சொல்லாயோ
தாயென்றுந்தந்தையென்றும்-இருகண்ணூற்
றுன்றிறந்துபாராயோ

இப்படிதாய்தகப்பன்-இருவரும்
ஏங்கியேதானழுது
தெப்பனைத்தான்றொழுது-மகனை
நோக்கித்தருணமென்றார்

அநுசொளிபலபலவென-அப்பாசு
அரசனெழுந்திருக்க
தனதென்றன்னைபிராணமும்-ரெண்டு
தாமரைமலர்போன்றத

பொது-விருத்தம்.

தன்மகனெழுந்ததைக்கண் டவர்தந்தைதாயாரும்
ஏங்கியேபுகழ்ந்துபோற்றி தானெழுந்தொன்றாய்க்கூடி
வன்னியின்காத்தைநீங்கி மாமுள்ளவனத்திற்செல்ல
அன்னதாகத்தாற்சோர அப்பாசுயீதுரைப்பான்

வசனம்.

அக்கோ தெப்படியென்றால் மகனையெடுத்துப் புலம்பையில் மூர்ச்சைதெளிந்து அப்பாசு எழுந்திருக்க அதைக்கண்ட தந்தைதாயிருவருமகிழ்ந்து மூவருங்கூடிகாத்தில் நடந்து சென்று மரங்கள் செடிகளுள்ள காட்டிற்போகையில் மதியாறு தண்ணீர்தாகத்தால் சோர்ந்ததை மகனறிந்து சொல்லுகிற விதங்காண்க.

அப்பாசுசொல்-விருத்தம்.

எந்தனைப்பெற்றதாயே யியல்புள்ளதந்தையேகேள்
அந்தமாய்த்தண்ணீர்கொண்டு அன்புடன்வாரமட்டும்
இந்தவன்மரத்தின்கீழே யிருந்திடும்பதனமாக
பந்தமாயிவ்வனத்தில் பயமொன்றுமில்லாமற்றான்

வசனம்.

அக்கோகேளுங்கள் என்னைப்பெற்ற தாய்தந்தையரே உங்கள் தாகத்துக்காகத் தண்ணீர்கொண்டுவருகிறவரையில் இந்தக் காட்டில் பயமில்லாமல் இந்தமரத்தின்கீழிருங்கள் தாய்தந்தையரே.

அவர்கள்சொல்-வசனம்.

அப்படியே யிருக்கிறோம் அல்லாவுதவியால் சீக்கிரம்போய் வருகுவாய் எங்கள் கண்மணியான புதல்வனே.

பொது-கொச்சகக்கலிப்பா.

அந்தமரத்தினிழலி லன்னை தந்தையர்களிருக்க
சுந்தரவப்பாசுமன்னன் சொகுசாய்ச்சலமெடுத்து
வந்துயிருவருக்கும் வழங்கிடவுந்தான்குடித்து
சிந்தைதனைதீர்ந்ததன்பின் செழும்பசியால்தந்தை சொல்வார்.

இதுவுமது-விருத்தம்.

பசியதுதீர்வதற்குப் பார்த்திபனப்பாசேந்திரன்
விசையதாய்வனத்திற்சென்று மேவுகாய்கனிபறித்து
அசைவுளதந்தைக்கீய அதையவர்புசித்துவிட்டுத்
திசைபுகழ்மனைவிமைந்தன் தியங்கியேபுலம்புவாரே

வசனம்.

அதோதெப்படியென்றால் தண்ணீர் தாகத்தால் சோர்ந்த தாய்க்கு அப்பாசு தண்ணீர்கொண்டுவந்து கொடுக்க அதைக் குடித்து தாகந்தீர்ந் திருக்கையில் அகமதுசா பசிக்களையினுற்சோர அதுகண்டுவனத்திலுள்ள காய்கனி இலை கிழங்குகள் பறித்துவந்து தகப்பனுக்குக் கொடுக்க அதைத்தின்றவுடனே அதுகளில் வதோ விஷமுள்ளவஸ்துக்கள் பட்டிருந்ததால் களைத்து விழுந்தார் இதுகண்டு அவர்மனைவியும் புதல்வனும் புலம்புகிறவிதங்காண்க.

மனைவியுமகனும் புலம்பல்-தரு-இ-ம் நாதநாமக்கிரியை-ரூபகதாளம்

சிறுசிறுத்துமதிமயங்கி-ராஜன்-கீழ்விழுந்திருக்கிறதை
அருகிருந்தபனைவிமகன்-கண்டு-அலறிமனநொந்து புலம்பிச்சொல்வார்

இன்றுதின்கனிகாய்களில்-விஷம்-திவினையாயிருந்ததாலே
உண்டவுடனிம்மயக்கம்-ஆகி-உழன்றுவிழுந்தார்பூமியில்

என்றுநினைந்தாதியிடம்-இருவர்-இருகையுமேந்திநின்று
ஒன்றுருவ...மில்லாதோனே-யார்க்கு-முகர்துசெய்பவனே

உருகிநெஞ்சமொருநினைவாய் கெஞ்சும்-உற்ற அடியார்கள்துயர்
பெருகிடாதுதுலைப்பவனே-என்றும்-பெரியவனே காத்தருள்வாய்

எங்களுக்குயித்தவிதி-வாரா-இறையவனேகாத்தருள்வாய்
உலகங்களாய்மூவர்களு...-ஒரு-மானைகட்டோய்ச்சேர்ந்து



இசுப்முட்டுகழித்து-எங்கள்-எழில்நகர்க்குப்போய்ச்சேர
நம்பினோர்க்குதவிசெய்வாய்-எங்கு-நாடுமுப்பிலாலமீனே

இப்படியாய்மதிய மாதும்-நல்ல-எழிலப்பாசுமன்னவனும்
ஒப்புமறுமாலிடத்தில்-இருவர்-உகந்துதுலாகேட்டிடவே

ஆதிதன்கிருபையாலே-அப்போ-அகமதுசாசோர்வு நீங்கி
ஓதுதுயிலொழிந்தவர்போல்-எழுந்-துமிருக்கவிவர்கள் கண்டார்

பொது-விருத்தம்.

எழுந்திடுமரசர்தம்மை எந்திழைமகனுங்கண்டு
விழுந்துசோர்ந்திருந்ததற்கு விபரமென்னென்றுகேட்க
வழங்கிடாதொன்றுமிப்போ வல்லவன்விதிசெய்தால்
தழன்றுமேமண்ணில்வீழ்ந்து தயங்கிடப்பெறுந்தனென்றார்.

இதுவுமது.

வந்ததொன்றறியேனென்று மனைவியுமனையாள் தன்னை
அந்தமாய்க்காட்டிக்கொண்டு அழுதபின்னிதனைச்சொல்வார்
இந்தநல்வனத்தில்நாமு மிருந்திடலாகாதென்று
சிந்தையாய்க்காட்டைவிட்டு வெளியினிற்செல்வாறானார்.

இதுவுமது.

விட்டேழுநாள்நடந்து வெளியினிலேவரும்போது
பட்டிநீர்துயரொலாம்போய்ப் பசிபடச்செழுந்திடும்வோர்
பட்டணமெதிரிற்கண்டு புகுதலாய்நடக்குங்குள்ள
மட்டிடச்சொலக்கூடாதோர் மண்டபந்தனைக்கண்டார்.

இதுவுமது.

எதிரொருமடத்தைநச்கண்டு யிவர்போயாங்கபோய்நிசெய்து
அதிவினைவுடனேசென்று அம்மடந்தனிலிருந்தே
மதியகமதுசாசொந்த மனைவியுமைந்தரோடும்
விதியெனவிருந்தாரிப்பால் விளைந்ததைவிரித்துரைப்பாம்.

வசனம்.

அதோதெப்படியென்றால் காட்டினிடத்தில் மதியத்தாகந்தீர் ந்தவுடனே அகமதுசா பசியாற்சோர்ந்திருப் பதைப் புதல்வன் கண்டு அக்கானகத்திலுள்ள பலபழங்கள் சருகுமுதலானவைகளை க்கொண்டுவந்துகொடுக்க அதைப்புசித்தவுடன் சோர்ந்ததைநகண் டு மனைவியுமகனுங்கேட்க, ஆதியின்விதிதானறியேனென்று அவர் சொல்ல மூவரும்அக்கானகந்தனைவிட்டெழுந்து அந்தமாநகரத்தை

விட்டேழுநாள்நடந்து வெளிகளையுந்தாண்டி வருகையில்இவர்களுக் கெதிரே ஒருவனம்பொருந்தியநகரத்தைக்கண்டு அதினுட்போய் அங்குள்ள ஒருமண்டபத்திற்றங்கியிருந்து அவர்கள்கானகத்திற்ப ட்டவிதிகளை நினைந்து நொந்திருக்கையில்மேல்நடக்கிறவிதங்காண்க.

பொது-கொச்சகம்.

அந்தமடந்தனிலிருந்த அக்கினிபிராமம்பதியாள்
செந்துமலாடிதிற்க நோக்கியப்பாசிதனைப்பார்
இந்நகருட்புகுந்து பிரத்தலத்துவொஜீபனங்கள்
தந்திமேவணுங்கள்பசி தணிப்பேனென்றுரைத்தனளே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிராமம் மடத்திலிருந்து விதியைநினைந்துக்கொண்டிருந்த அப்பாசியினுடைய தந்தைதாயி ருவருக்கும் பசியாயிருக்குதென்று அந்நகரத்துக்குப்போய்வந்தான துஜீபனம்வாங்கிவருகிறேனென்று இவர்களுக்குச்சொல்லிவிட்டு ப்புறப்படுகிறவிதங்காண்க.

அப்பாசு உணவுக்குப்போகிற-தரு

இ-ம்-காபி-ரூபகதாளம்.

எழுந்தேமனந்தெளிந்தே-மடங்கடந்தேமெள்ளநடந்தே
இந்தப்போல்முதந்து சிந்துவிருக்குந்தெருக்கண்டார்

கண்டார்பிரியங்கொண்டே தெருச்சென்றுஅங்கேநின்றார்
கருத்தாய்வெகுவித்தாய்மனுவைக்கண்டேமொழிவிண்டார்

ஐயரோபுகழ்மெய்யரோ வளரன்னையேபுகழ்மன்னரோ
அஞ்சலேதபசியிஞ்சதோகொண்டுவாருமேவருந்தாருமே

அன்னமேமிகவன்னமேவுயர்சொர்ணமேபசிக்கென்னமும்
அட்டியன்றுட்டிவைத்து அள்ளியதாருமுள்ளதே

மங்கையேகுயிலிங்கிதமொழி நங்கையேஎன்தங்கையே
வாடுதேடஇந்நேகொண்டுவாருமேவருந்தாருமே

இந்தந்தப்படிஅந்நகர்த்தெருவெங்கும்வீடெங்கெங்கும்
எட்டியேசதவுதட்டியேகொண்டேனுர்தெருவாகினர்.



பொது-விருத்தம்.

சிந்துவின்தேசமெங்குந் திரிந்தலைந்தப்பாசெனுமேயார்
உத்தியிற்பசிகட்சாலை ஒவ்வொர்களைக்கண்டாமல்
சிந்தைப்பதைத்துசோர்ந்து தெருவிலேயார்விழுந்துமுன்பாய்
வந்துநின்றிரைந்துகேட்க மன்னன்மனைக்கிழவிவந்தாள்.

இருவரும்.

ஆரொடைக்கிழவிகேட்க அதற்கு அப்பாசுசொல்வார்
பாரினிற்பசிக்கிறைஞ்சு பசித்துணைவளிப்பமென்ன
நேர்பெறக்கிழவியன்னம் நிறைந்துதிருக்கொடுக்க
தாரணியாரியன்வாங்கித் தந்தைதாயுழைவந்தாரே.

இருவரும்.

வந்திடுமப்பாசேந்திரன் பசிந்தந்தைதாயிடத்தில்
அந்தநல்லன்னமதை அவர்கள்தன்னிடத்திலீய
மைந்தருந்தாமுமுண்டு பசிந்திருந்திருக்கையில்செய்ப்
அந்தநல்விருந்தேகி வந்துவைநூமுறித்தனரே.

இருவரும்.

சூரியனெழுந்துதோன்றத் தனப்பாசுக்கிருந்தநல்ல
சீர்நடனங்கிடைக்க வேலைகள்செய்தாலும்
நேர்பெறவாங்கினான் நெறியுடனிருவரேற்றார்
தேர்ட்டிகரியுலாவுந் தெருக்கவிக்கோலதுவென்றார்.

வசனம்.

இப்படியாக அப்பாசுமன்னன் சிந்துநாடகிர் உள்ளதெருக்க ளெல்லாம்போய் விதிகள்தோறும்புடனிக்கு அன்னங்கேட்க ஒருவ ருங்கொடுப்பாரில்லாமல் ஒருவீட்டிலுள்ள கிழவி இவனைக்கண்டு ருக்கொடுப்பாரில்லாமல் இவர்தன்னுடையபூர் விகம் மெல்லாங்கேட்க இவனுஞ்சொல்ல அந்தக்கிழவிகேட்டு மனமுருகி கொத்தமல்லாஞ்சொல்ல அந்தக்கிழவிகேட்டு மனமுருகி அன்னமும் ஆடையுங்கொடுக்க அதைவாங்கிக்கொண்டுபோய்த் தந்தைதாயருக்குக்கொடுத்து இருவரும் உண்டிருந்து பத்திலிருக்குந் தாயாரைவிட்டுத்தொழில்செய்து சூரியனுதையமா ன்று ஆடையையுடுத்தி இராவில்நித்திரைசெய்து உத்தியோகம்பெற்றுக்கொ ண்டனே பெழுந்துராய்தகப்பனிடத்தில் உத்தரவுபெற்றுக்கொ ண்டு அந்நகரில் தொழிலுக்குப்போகிறவிதங் காண்க.

அப்பாசு-வேலைக்குப்போகிற-தரு
ஆனந்தபைரவி யேகதாளம்.

சிந்துவின்தேசத்தெருவிலப்பாஜராஜன்-சென்று
செப்புவார்பெயிப்புள் அப்போதுதான்செய்யும்வேலையை

அந்தமாப்பூச்சென்டு தந்திரமாச்செய்வேனுருமே-மெய்க்க
வனையர்கொண்டைரவிக்கைகளைத்தைப்பேன்தந்தபாருமே

ஏந்தூதச்சுக்கட்டுவேலைவிசித்ரவேலைகள்செய்குவேன்-ஆர்க்கு
மோகிக்கும்படியரவவாசச்சந்தனப்பொடிசெய்குவேன்

அன்புடனேவரேனும்தென்பாய்வேலைகளிட்டாற்செய்கிறேன்-மதி
யானைபோலெதிராகிஞ்சினைமன்னவனாயுமடக்குவேன்

அஸ்திரவித்தைகளுஞ்சனார்ரத்னமாலைகள்பலசெய்குவேன்-ராசர்க்க
சாசனமாகியமோகசிம்மாசனம்செய்குவேன்

பாராசாரிமட்டச்சேறி நடனஞ்செய்திருப்பேன்-தேச
மகாராசமைந்தர்க்கு அதிகக்கிரிடிவித்தைகளநத்துவேன்

பூராயமாகப்பட்டலபலவித்தைப்பொருத்துவேன்-மனப்
பிரியமானவெனக்குச்சரியானவேலைகள்தருகுவீர்

பொது-விருத்தம்.

இப்படித்தெருக்கள்தோறு மியலக்மதுசாமைந்தர்
மெய்ப்புகழானவேலை விதம்விதஞ்செய்வேனென்று
தப்பறக்கேட்கவூரார்தாமிவர்தாமைநோக்கார்
அப்பொழுதங்கார்தின்னையதனிற்போய்ப்படுத்திருந்தார்.

இதுவுமது.

படுத்துமேசவலையாலேயலயதவென்னக்கொண்டு
இந்தமென்மேலுமீறி யெழில்நித்திரைசெய்யும்போது
கடுங்காற்றுமின்னலோடு கனமழைப்பெய்வதாலே
அடருஞ்ராஜாளிவந்தப் பாசுமார்பிருந்ததன்றே

இதுவுமது.

இந்த்ராஜாளிகூவ வெழிந்நித்திரைவிழித்தப்பாசு
பரிவுடனதைப்பிடித்துப் பார்த்தியன்தந்தைதாய்முன்
விரைவுடன்கொண்டுசென்று விபரங்கள்சொல்லவப்போ
அருமையப்பாசியைப்பார்த் தவர்கள்விற்பனைசெய்யென்றார்

இதுவுமது-கொச்சகம்.

தந்தைதாய்ச்சொல்லதனைத் தன்சிரசிற்றின்மேற்கொண்ட
மைந்தரப்பாசுமன்னவன் வயிரிதனைக்கையிலேந்தி
சிந்துநகர்வீதியெங்கும் திரிந்துவிலைகூறிச்செல்ல
அந்தநகராளரசன் அருமைகட்டியக்காரன்வந்தான்



வசனம்.

அங்கோசெப்பமயென்றால் அப்பாசுமன்னவன் அந்நகரிலுள்ள தெருக்கள்தோறுந்திரிந்து சகலவேலைகளும் செய்வேனென்று சமர்த்தியஞ்சொல்ல அவ்வூரிலுள்ள வொருவராகிலும் வேலைசெய்யும்படியாய்ச்சொல்லாதகால் மனவியாகூலத்தினால் ஒருவீட்டுத் திண்ணையின்பேரில் படுத்து நித்திரைபோகையில் கடுங்காற்றுமின்னலோடு மழைபெய்கிறசமயத்தில் ஒருராஜாளிப்பறவையானது அங்கமதுசா புதல்வன் அப்பாசியின்மார்பில் வந்துட்காந்தகூவ அப்போது அவர்விழித்துப்பார்த்து அல்லாகுசுபுகானுகுத்தாலா நமக்குக்கொடுத்த பொருளென்று தந்திரமாகக்கையிற்பிடித்துக்கொண்டு தன்தந்தை தாயிடத்திற்கொண்டுபோய் அதுகிடைத்தவரலாற்றையுஞ்சொல்லிக்காண்பிக்கஅவர்கள் புதல்வனைப்பார்த்து இதைவிற்றுவந்தால்நமக்குஜீவனமாகுமென்றுசொல்லஅந்தச்சொல்லைச் சிரமேற்கொண்டு சிந்துநகர்வீதிகள்தோறுஞ்சென்றுவிலைகூறிவிற்க அவ்வூராளும் தாமிதுராசனுடைய வாசற்கட்டியக்காரன் வருகிறவிதங்காண்க.

கட்டியக்காரன்வருகிற-தரு-இ-ம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி.

கட்டியக்காரன் சபைதனில் வந்தானேகொலுமுன்

அநுபல்லவி.

அட்டதிசையிலுள்ள அரசரெவரும்போற்றும்
மட்டில்லாக்கீர்த்திபெற்ற மன்னன்தாமிதுவாசல் (கட்டி)

சரணங்கள்.

செந்திருநிறத்தான்-புஜபல-சுந்தரமுகத்தான்
சந்திரன்போலவே வந்தவிவன்வதனம்
அந்தமாயெவர்க்கும் விந்தைகள்பேசிடும் (கட்டி)

மருமலர்ப்புயத்தான்-பொருந்திய-விரைமலர்கரத்தான்
தரணியையாள்கின்ற தாமிதராசனிதோ
துரையாய்வருகிறார் திரையாயிருக்கவென்று (கட்டி.)

சென்னியிற்றலைப்பாய்-ஒழிவுடன்-சிறப்பாகவைத்து
கன்னல்விளங்கிடும் இன்னகர்சிந்தில்வாழ்
மன்னன்தாமிதுவாசல் முன்னின்றிருந்துகாக்கும் (கட்டி.)

கட்டியன்சொல்-விருத்தம்.

வந்துறுஞ்சபையோர்கேளீர் மாநகர்சிந்துதேசம்
சொந்தமாயாளுகின்ற அந்தராதாமிதேந்திரன்

இதநற்கொலுவில்வாரா-ரெவர்களுமொன்றுக்கொன்று
சந்தடிசெய்யாமற்றான் சகலருமிருந்திடுமே

வசனம்.

அகோவாருங்கள் சபையிலுள்ளோர்களே இந்நகரையாளும் மகாராஜஸ்ரீ தாபீதுமன்னர் ஒருநிமிஷத்தில் கொலுவுக்குவருகிறார் இங்குள்ள சபையோர்கள் ஒன்றுக்கொன்று சந்தடிசெய்யாமலிருக்கக் கடவீர்கள்மனிதர்களே.

இராஜன்கொலுவுக்குவருகிற-பொதுவிருத்தம்

கட்டியக்காரன்வந்து கனசபையுளோர்க்குச்சொல்ல
மட்டலர்மாலைமார்பன் மகிபன்தாபீதுமன்னன்
பட்டவர்த்தனர்கள்சூழப் பரிவுடன்செங்கோலேந்திச்
சட்டமாய்மந்திரியோடு தான்கொலுமேவினானே

வசனம்.

அகோதெப்படியென்றால் கட்டியக்காரன் சபையிலுள்ளோர்களை எச்சரிக்கையாயிருக்கும்படிக்குச்சொல்ல சிந்துதேசத்தையாளும் தீரசூரபராக்கிரமமுள்ள தாபீதரசர் மந்திரிமுதலியபட்டவர்த்தனர்கள் சூழத்தனது செங்கோலைக்கையிலேந்தித் தன்கொலுவிலிருக்க வருகிற விதங்காண்க.

இராசன்வருகிற-தரு-இ-ம்-தன்னியாசி-அடதாளம்.

வேந்தர்வேந்தனொருவரும்போற்ற-வேதவேதியர்கள்வாழ்த்த
சாந்தமுணமுள்ளோரென்ற-தாபீதரசர்கொலுவில்வந்தார்
பூவையர்கள்கவரிவீச-பூச்சக்ரகுடைபிடிக்க
காவலர்மருங்கிற்சூழ-கன்னன்தாபீதரசர்வந்தார்
நவரத்னப்பாகைபோட்டு-நறுமலர்மாலைசூட்டி
தவறிலாமலங்கிப்பூட்டி தாபீதரசர்கொலுவில்வந்தார்
மந்திரிமார்மருங்கிற்சூழ-மன்னர்மன்னர்வணங்கித்தாழ
கந்தருவப்பெண்கள்வாழ்த்த-காவலர்தாபீதுவந்தார்
பலபலவிருதுகூற-பாவாணர்கவிகள்கூற
நிலமதிலுள்ளோர்கள்போற்ற-தாபீதரசர்கொலுவில்வந்தார்
மன்னவர்முடிபணிய-மாதர்களாலாத்தியேந்த
கன்னியர்நடனஞ்செய்ய-கருத்துடன்தாபீதுவந்தார்

பொது-விருத்தம்.

கொலுவில்தாபீதுவந்து குணமுடன்வீற்றிருக்க
வலுமன்னர்மகிழ்ந்திருக்க மங்கையர்நடஞ்செய்போதில்
வலுமைராஜாளிதப்பிப் போனதைமன்னருக்குச்
சொலவெண்ணிக்காவலாளர் தோன்றினார்கொலுவிற்றானே



வசனம்.

அகோதெப்படியென்றால் சிந்துமாநகரையாளும் தாபீது அரசன்மந்திரி பிரதானிகள்சூழ நடனமாதர்கள் நாட்டியஞ்செய்ய நீதிசெலுத்திக்கொண்டிருக்கிறவேளையில் தான்அதிகப்பிரேமையாய் வளர்த்தராஜாளிபட்சி இருந்தவிடத்திலில்லாமற் பறந்துபோய்விட அதைக்காத்திருந்தகாவலாளர்கள் திடுக்கிட்டேங்கி அரசனிடத்தில் சொல்லவருகிறவிதங்காண்க

காவலர்கள்கொலுவுக்குவருகிற-தரு-இ-ம்-கலியாணி-அடதாளம்.

காவல்காரப்பவர்கள்வந்தார்-சிந்துநகரைக்
காவல்காரப்பவர்கள்வந்தார்
காவலர்தாவீதுமன்னர்-மேவியராஜாளிபோக
அவ்லோடுசொல்வதற்குச்-சேவகவிருத்திசெய்யும் (காவலர்)

கையினிற்கத்திதுலங்கவே-இடுப்பதினிற்
கட்டியகச்சையிலங்கவே
வையகப்புகழ்தாபீது-மன்னவனிடத்திற்சொல்ல
ஐயமிகப்பெருகி-யலறிபுளறிக்கொண்டு (காவலர்)

துள்ளியநடையுந்தாழவே-மீசைமுறுக்கும்
சுழன்றுமிகவுஞ்சோரவே
கள்ளர்போலேபயந்து-கடுகடுப்பில்லாதசைந்து
வள்ளல்சமுகம்வர-வாடிப்பாதவித்துக் (காவலர்)

தாபீதரசர்முன்சென்று-காவற்காரர்கள்
தணிந்துபணிந்துநிற்கவே
கூவியரசர்பார்த்து-கூடிவந்தவிதமென்ன
தாபமதைச்சொல்லீரென்று-கோபமதாயரசன்கேட்க (காவலர்)

இராசனுக்குக்காவலாளிகள்-போற்றிவிருத்தம்.

எங்களைப்பாதுகாக்கும் ஏகமன்னவரேபோற்றி
சங்கையாய்நாங்கள்வந்து சாற்றும்விண்ணப்பங்கேளீர்
தங்கள்தன்மனத்திற்கேற்ற தக்கராசாளிப்பட்சி
கங்குலிற்பறந்துபோச்சுக் காணாதால்சொல்லவந்தோம்

வசனம்.

கேளுங்கள் அரசர்களெல்லாம்போற்றிப் பணியாநின்ற அண்ணலே எங்களைப்பாதுகாக்குமன்னரே நாங்களுங்களிடத்தில் வந்துசொல்லும் விண்ணப்பத்தைக்கேட்டு மனம்பொறுத்து எங்களைக்காக்கவேண்டியது அது என்னவென்றால் நாங்கள் மிக சாக்கிரதையாய் பொக்கிஷத்தைக்காவற் காத்துக்கொண்டிருக்கையில் சற்றுநேரத்திற்கு முன்னால் காற்றுமழை பின்னவிடியாயிருக்கின்றவேளையில் உங்களுக்கிசைபொருந்தியராசாளிப்பட்சி இன்னவிதமாய்ப் பறந்துபோனதென்று தெரியவில்லை அதன்சங்கதியைத்தங்களுக்குத் தெரிவிக்கவந்தோம்

ம் இதுதானெங்களுடைய விண்ணப்பம் தாங்களெவ்விதஞ் சொல்லுகி றீர்களோ அதுபோல நடக்கக்காத்திருக்கிறோம் சிரோமணியாகிய தவு லத்தே.

இராசன்-காவலாளிகளுக்குச்சொல்-விருத்தம்.

எதடா காவலோரே யித்தனைய சமந்தங்கள்
நீதமோ நீங்கள் சொல்லும் நேர்மையாம் பக்ஷிதன்னைச்
சாதகமாகத் தேடிச் சடுதியிற் கொணராவிட்டால்
காதையு மறுத்திரண்டு கண்ணையும் பிடுங்கச்செய்வேன்

வசனம்.

அடா வாடா காவலர்களே நீங்கள் சொல்லுகிறதைப் பார்த்தால் ரொம்பவுமென் மனம்பதறுகிறது ஒருநிமிஷத்தில் இந்நகர முழுதிலும் காடு களிலும் மாங்களிலும் தேடிக்கண்டுபிடித்து அதிசாக்கிரதையாய் வர வேண்டியது அப்படிக்கொண்டுவராவிட்டால் உங்கள் காதுகளையும் அறுத்து கண்களிரண்டையும் பிடுங்கிக் காட்டில் துறத்திவிடுவேன் காவல்காப்பவர்களே.

காவலாளிகள்-வசனம்.

அப்படியே தேடி அதிசாக்கிரதையாய்க் கொண்டுவருகிறோம் அண்ணலாகிய ராஜசிரோன்மணியே.

காவலர்கள் பொருதரு,

இ-ட-ஆகிரி-சாப்புதாளம்.

-கண்ணிகள்.

இந்தவிதிக்கென்ன செய்வோம்-வது செய்வோ மன்னர் சொற்கு
அந்தரத்திலிடியிடித்து அருகிதலை யில்வீழ்ந்தாப்போலே
அண்ணல் சொற்படியே காடும் அடர்ந்த காடுநாடுஞ்சென்று
நன்னயபயிரிதன்னை நாமகொணர்ந்துவாராவிட்டால்
ஆக்கினைகள் தான்கிடைக்கும்-இந்த-அவதிக்கென்ன செய்யப்போறோம்
சாக்கிரதையாய்ப் போவோமென்று தனிநகரைச்சுற்றிப்பார்த்தால்
பார்த்துமெங்குங்காணோமென்று-இவர்கள்-பாதவித்துவருகையிலே
ஆத்திரமாயோரிடத்தில்-பட்சியை-அப்பாசும் விலைகூறிநிற்க
கண்டார்கள் காவற்காரர்கள்-அவனைக்-கைப்பிடியாய்ப் பிடித்துக்கட்டி
கொண்டுசென்று சிந்துநகர்க்-கொற்றவர் முன் விட்டுநின்றார்

பொது-விருத்தம்.

அடர்பதிதான் நாடி அவாசர் முன் சென அப்பாசைக் காவலர்கள் விட்டுநிற்க, திடம்பயிரிதனைக்கண்டாரசன்தானும் சிந்தைமகிழ்ந்தோர்வ



சனம்செப்பலுற்றார், இடந்தப்பிப்போனபக்ஷி வந்தவாறும் இச்சிறுவ னைக்கட்டிக்கொணர்ந்தவாறும் படபடெனச்சொல்லுமெனக்காவலோ ர்கள் பார்த்திபனைப்பார்த்திதனைப்பகாலுற்றார்.

வசனம்.

அகோ தெப்படியென்றால் இராஜாளியைக் கொண்டுவராமற்போ னால் ஆக்கினைசெய்வேனென்று அரசன்சொல்ல காவலாளிகள்கேட்டு ரொம்பவும்பிரலாபித்து அந்நகர்முழுதிலும் பக்ஷியைத்தேடி பேசாமல் ஒருதெருவில்வரும்போது அகமது சாகுமாரன் அப்பாசென்பவர் பயிரி யை விலைகூறிநிற்கையில் கண்டு பிடித்து அவனை மடலோடு மடலொ டியும்படியாய் இறுக்கிக்கட்டி இராஜாளியையும் அப்பாசையும் தாபீதா சன் முன்கொண்டுவந்துவிட அவர் குருவீயைக்கண்டு மகிழ்ந்து அ ப்பாசுமன்னனையுங்கண்டு குருவிவந்தவாறும் இவனைக்கட்டிக்கொணர் ந்தவாறும் சொல்லுங்களென்று காவலர்களைக்கேட்க அவர்கள் சொல் லுகிறவிதங்காண்க.

அரசனுக்குக்காவலாளர்கள்சொல்-விருத்தம்.

அண்ணலே உசொலக்கேளுங்களாக்கினைப்படியேசென்று
இன்னகர்முழுதுந்தேடி யெங்கியேவருகும்போது
சின்னவன் பயிரிதன்னை ஸ்திரவிலைகூறக்கண்டு
அன்னவன்றன்னைக்கட்டி அடைவுடன்வந்ததாமே.

வசனம்.

கேளுங்களெங்களைரக்ஷிக்கும்படியான ராஜசிரோன்மணியே-தங் களாக்கினைப்பிரகாரம் நகர்முழுதிலுஞ்சுற்றிப் பட்சியைத்தேடி வரும் போது இந்தச்சிறுவன் இராஜாளியைவிலைகூறக்கண்டு இவனைப் பிடித் துக்கட்டிக்கொண்டுவந்துவிட்டோம் தவுலத்தாகியராஜமேருவே.

பொதுகொச்சகம்.

காவலர்கள்சொன்னதெல்லாம் கருத்திலுன்னவரசரவீ
தாவிப்பப்பாசைப்பார்த்துத் தனியரசர்தாபதினைத்தார்
சோபிதவகமது சாகுதன்போலிருக்குதென்று
ஆவலுடன்காவலனாயவிழுமென்றார்கட்டதனை

இதுவுமது-விருத்தம்.

கட்டதையவிழ்க்கச்சொல்லக் காவலர்விழுந்தபின்பு
பொட்டெனத்தாபீதேந்தான் புகழப்பாசினைப்பார்த்துத்தன்
பட்டணமிருப்புமெங்கே பகர்பட்சியெடுத்ததெங்கே
இட்டெனச்சொல்வாயென்னத் தீரனுஞ்சொல்வதானார்

வசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாகக் காவலர்கள் தாவீதாசனுக்குச்சொல்ல அவரப்பாசைப்பார்த்து இவன் அந்தப்பட்டணத்தையாளும் அகம்மதுசாபுதல்வன்போற்காண்கிறது ஏதோ ஒருவிதியால் இவிடம்வந்திருக்கிறப்போலிருக்குதென்று யோசித்துக்காவலரைப்பார்த்து கட்டியகட்டைச்சலுகியிலவிழ்க்கச்சொல்ல அவர்களக்கட்டையவிழ்க்கஅப்பாசு சுபாவமாய் நிற்கையில் அந்தகரத்தாசன் இவரைப்பார்த்து நீயிருக்கிறபட்டணமெங்கே உன் தாய்தகப்பன்பேரென்ன நீயிவிடம்வந்த வீரலாறென்ன நான் அருமையாய்வளர்த்த இந்தராசாளிப்பட்சிஉன்கையில்வந்தகப்பட்டவிபரமென்னவென்றுகேட்க அப்போது அப்பாசுமன்னன் தன்வரலாறும்பட்சிவந்தவரலாறும் சொல்லுகிற விதங்காண்க.

அகமதுசா-தாவீதுமன்னனுக்குச்சொல்-அகவல்

இ-ம்-காம்பூதி.

தன்மையாலுலகாள்தாவீதுமன்னவன்
வன்மையப்பாசின் வரலாறுகேட்க
அன்னவன் வரலா றனைத்தையுஞ்சொல்லித்
தன்னிடதாயுந் தந்தையாமிருவரும்
துன்னியமடத்திற் சேர்ந்தவரிக்கும்
தன்மையுஞ்சொல்லித் தனியப்பாசேந்திரன்
கொடும்பட்சியதனாற் கூலியாளாகி
நெடும்பதிதன்னில் நின்றலைந்ததுவும்
அன்றுராத்திரியி லல்லாவைநினைந்து
ஒன்றியதிண்ணையி லுறங்கிடும்வேளையில்
கவ்வமில்லாமற் கனமழைசொரிய
எவ்வனப்பட்சிவந்தென்மார்பிலிருந்து
கூவிடமுழித்துக் கொண்டிடான்மெள்ளத்
தாவியேயதனைத் தான்பிடித்தேகி
தந்தைதாயிடத்திற் றான்சொன்னதற்குச்
சிந்தையாய்விற்று வாவெனச்சொல்ல
அதுபோற்பசாரி லவசரமாக
கதுமெனவிற்கக் கண்டகாவலர்கள்
பிடித்தெனைக்கட்டிப் பேசாதும்பேசி
அடித்தெனைக்கொணர்ந்து அருஞ்சபைவிட்டார்
இதுவரலாறென் றிசைக்கத்தாவீது
பதிய[illegible]னைறிற பலரையுமழைப்பி
அகமதுசானை[illegible]வரையனைவரையும்
தங்கைமைவாயழைத்துத் தாம்வாருமென்ன
சென்றனர்சிலபேர் செயமடந்தனிற்போய
கனடுபேயழைத்துக் காவலர்முன்விட



தாவீதுகண்டு தழுவியேயிருவரும்
ஆவலாய்கேட்டி மகமைவிசாரித்து
ஏகமாயெழுந்து யெழிலாண்மனைபோய்
பாகமாயன்னம் பரிவுடன்புசித்து
உண்டுசுகித்து வொருன்மயாயிருக்கையில்
பண்டுளவிதியாற் பகருமப்பாசு
மன்றல்தாவீதை மகிழுடன்பார்த்து
இன்றாயிரம்பொனும் யெழிற்பரிவாளும்
எந்தாய்தகப்பனையீடாகவைத்துத்
தந்தனுப்புவிரேல் தனிநகர்க்கேகிச்
சிந்தையிலெண்ணம்போற் செயமதுபெற்று
வந்துநான்திரும்பியென் மாநகர்ச்செல்கிறேன்
அட்டிநீர்செயாம லனுப்புவிராகில்
இட்டம்போல்நடப்பே னேந்தலேயென்றார்

பொது-விருத்தம்.

அப்பாசின்னெண்ணம்போ லவ்வூராளும்
அரசன்தாவீதுமன்னன் குதொன்றெண்ணி
செப்பரியாயிரம்பொன்னும் வாளுமீந்து
தீரன்விடைகொடுத்திடத்தாய்தந்தையாசில்
நட்புடனேசென்றுவருஞ் சேதியாவும்
நவின்றிடவுமவர் மயங்கிவிடைகொடுக்க
ஒப்பருடன்பரியேறி நகர்கடந்து
வொண்டிபதாயொரு வழியிற்செல்கின்றானே

வசனம்.

அகோதெப்படியென்றால் சிந்துதேசத்தையாளும் தாவீதாசன் ஒருகுதைமன இல்லினைத்துக்கொடுத்த ஆயிரம்பொனும் பரியும் வாளுங்கைக்கொண்டு அவரிடத்தில்விடைபெற்றுவந்து தந்தை தாயிடத்திற் சொல்லவர்அகள் மிகவு மயங்கித்தியங்கித்தேறி விடைகொடுத்தனுப்ப அப்பாசுமன்னனப்பரியிலேறி அந்நகரைக்கடந்து ஒருவழியில் நடக்கிறவிதங்காண்க.

அப்பாசுமன்னன்பரிமேலேறிப்போகிற-தரு-இ-ம்-செருபதி-அடதாளம்

அந்தநாககராளும் அகமதுசாபெற்ற
அழகுமகனப்பாசு[illegible]
சிந்தைகளிகூர்ந்திடவே செயவாளும்பிடித்து
இரவிபழுங்கைக்கொண்டு சென்றுவழிநடந்தார்

வழிநடந்துபாலவன மார்க்கமதாய்ச்சென்று
வண்மையுள்ளமலைகளிடமார்க்கத்தையுங்கடந்து

வெளிகளெல்லாங்கடந்து ஐந்துகாதவழிநடந்து
　வேகமுடனடக்கையிலோர் மேன்மடந்தைக்கண்டார்
அந்தமடந்தனிலிறங்கி யங்கிருக்கும்போது
　அருட்சிந்துநகர்க்கரசன் அகத்தில்மோசம்நினைந்து
முந்தவொருகடிதமதை மூர்க்கமதாயெழுதி
　முனையுளசேவகன் கையில் முறையாகக்கொடுக்க
பார்த்திபனப்பாசுசெல்வழியிற்றுடர்ந்து
　பத்தியவனருகிற்சென்றோர் பக்கமதாயிருந்து
பார்த்துக்கடிதத்திருக்கும் படியாச்செய்யென்று
　பகர்ந்துபரிகொடுத்தனுப்பப் பாதையிற்சென்றனனே

பொது-விருத்தம்.

கடிதத்தைவாங்கிக்கொண்டு கடுமையாய்ச்சேவகன்றன்
விடுபரியதனிலேறி விரைவுடன்பாதைசென்று
அடல்பெறுமப்பாஜேந்த்ர னிருந்திடுமடத்திற்கேகி
திடப்பரிவிட்டிறங்கி தீரன்முன்போயிருந்தான்

இதுமது-விருத்தம்.

வந்திடுஞ்சேவகனைப்பார்த் தப்பாசுந்தான்
　வாலாறுசொல்லெனவே யவனுஞ்சொல்வான்
முந்தவொருநகர நூண்டுவதற்குப்போக
　முனைந்துவருப்போதிரவு ஆனதாலே
இந்தமடந்தனிலிருந்துவிடிந்தபின்பு
　யேகுவெனென்றுசொல்ல யிருவோருந்தான்
சந்தேகமில்லாமற் படுத்துக்கொள்ள
　தனியவன்றனுதவிய துதானுண்டாச்சே

இதுவும்பொது-கொச்சகம்.

அன்றிரவில்மண்படத்திலரசனுஞ்சேவகனுமாய்
ஒன்றுக்கொன்றுபேசி யுகந்திருக்கயிறையருளால்
மண்டலமெல்லாமதிரமழைகாற்றதிர்ச்சிபிறந்
சென்றடித்துத்தள்ளியது சேவகனேடேபரியும்

இது[illegible]க்கம்.

விடிந்தபின்னப்பாசேந்த்ரன் வீற்றிருந்தவக்காறுநால்
அடர்ந்தவன்சோளிப்பை தானவிடத்திலிருக்கக்கண்டு
வடிவபிதாயெடுத்துக்கொண்டு வாம்பரியதனிலேறி
இடமுளவோரிடத்திலிறங்கிச் சோளியினைப்பார்தான்





இதுவுமது-கலித்துறை.

பார்த்திடுஞ்சோளியினுள்ளேயிருந்த பழியோலைதனை
சேத்தியதாசவேவாசித்துமோச நினைவையெல்லாம்
பூர்த்தியதாயறிந்தேயதைப் பாழ்ங்கிணர்ப்போட்டுவிட்டு
ஆத்திரத்தோடும் பரியேறிச்சென்றனனவர்கர்க்கே

வசனம்.

அதோதெப்படியென்றால் சிந்துதேசத்தையாளும் தாமிதரசன் மோசமாயெழுதிக்கொடுத்த கடிதத்தைவாங்கிச் சேவகன்தன்சோளிப்பையில்வைத்துக்கொண்டு ஒருகுதிரையிலேறி விசையாய் நடந்து அப்பாஜிருக்கும்சத்திரத்திற்போய்க்கண்டு ஒன்றுக்கொன்றுதனையாயிரவுதங்கிப்போகலாமென்றுசொல்லி சந்தேகமில்லாமலிருக்க ஓலைக்கச்சேவகன் தனித்துப் பார்த்து அதுபோலே செய்யலா மென்று யோசித்திருக்கிறவேளையில் அல்லாவினிட உதவியால் காற்றுமழைப்பிசைடித்த வேகத்தினால் குதிரையையும் சேவகனையும் ஓரிடத்தி லெடுத்தெறிந்துப்போட்டது அன்றிரவில் அப்பாசுக்கும் குதிரைக்கும் ஒருசங்கடமில்லாமற் படுத்திருந்து விடிந்தவுடனே இவர்தாடிவந்திருக்கு மிடத்திற்குப்போக எழுந்திருக்கையில் சேவகனுடைய சோளிப்பையாத்திரமிருக்கக்கண்டு அதையெடுத்துக் கொண்டு பரியிலேறிச் சிலதூரம்நடந்து ஓரிடத்திலிறங்கி சோளியையவிழ்த்துப்பார்க்கையில் ஒருஓலைச்சுருளிருந்தது அதைப்புரட்டிப்பார்க்கையில் அகம்மதுசாமகன் அப்பாசை ஒரேவெட்டாய் வெட்டிப்போட்டு எனக்குசெத்தக்குறி காண்பிக்கவேண்டுமென்றிருந்தது அதைக்கண்டபத்தி ஆண்டவனைப் புகழ்ந்து அந்தச் சுருளோலையைக்கிழித்து ஒருபாழுங்கிணற்றிற்போட்டு ஒருநகரம்போய்ச்சேர்வோமென்று எண்ணிதினி நடக்கிற விதங்காண்க.

அப்பாசுபாதைநடக்கிற-வண்ணத்-தரு

இ - ம் - நாதநாமக் கிரியை - துருவதாளம்.

பரியேநடத்திச்செல்ல-ராசன்
　பந்தடிச்செந்துகளந்தரமெழும்பிட
　முந்திநடந்திடச் செந்தனலாகிய
பாலைவனங்கடந்து-ராசன்
　வாடியொளிந்திட வாகியுசச்சிட
　நாடியரகனது தேடியேசென்றிட
மலையுங்காணங்கடந்தே-அங்கு
　வண்டறற்பூதங்கள்கண்டுபயந்திட
　திக்கறடி தாழ்ந்திடச்சென்றதோர்யானை

பாவைதனில் நடக்க-ஒரு
பட்டணங் கண்ணெதிர் எட்டியதால்கண்டு
இட்டமதாய்ச்சென்று சட்டமதாய்நின்றார் (தன்னந்)

பொது-விருத்தம்.

நின்றிடும்பாவேந்திரன் நேரினில்வருவோர்தன்னை
இன்றுமிவ்வூர்ப்பேரென்ன சொல்லெனச்சீனதேசம்
என்றவர்சொல்லக்கேட்டு எழிலரசனிந்நேரத்தில்
வண்டெனப்பரிநடத்தி வருகவவ்வூரார்கண்டார்

இதுவுமது.

நகருளானாணும்பெண்ணும் ராசனைப்பார்த்துச்சொல்வார்
செகமதிலிவனைப்போலே நீரனைக்கண்டதில்லை
தருமென்று அவர்கள்சொல்லத் தனயனப்பாசுமுன்பில்
வகையுடனோர்கிழவி வந்தனள்வீதிதன்னில்

வசனம்.

அகோதெப்படியென்றால் ஓலைச்சுருளைக் கிணற்றிற் போட்டவுடனே பரியிலேறிக் காடுமலைகள்வனம்வனாந்திரங்கள்கடந்துவருகையில் பூதப்பிசாசுகளோடெப்படியாயதிவேகத்துடனே நடந்துசேர்ந்து பாலவனமுதலியதுங்கடந்து ஒருநகரம்போய்ச்சேர்ந்து அங்குள்ளவர்களால் சீனதேசமென்றறிந்து அப்பாசுதன்குதிரைமேலேறிஉடசாரிவலசாரிவருகிறதை அந்நகரிலுள்ள ஆண்பெண்கள்கண்டு இவருடையஅழகுக்கு எந்தராசாக்களும் சரியில்லையென்றுசொல்லிப்புகழ்ந்து நிற்கையில் இவருக்கெதிரே ஒருகிழவி வருகிற விதங்காண்க.

கிழவிவருகிறதரு-இ-ம-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

கிழவியும்வந்தாளே - அம்மையாரொனும் - கிழவியும்வந்தாளே

அநுபல்லவி.

கிழவியும் வந்தாள் வள்ளமைகள்பேசியே
பழமையவளாய் ஒரு உளவுகள்சொல்லிடக் (கிழ)

சரணங்கள்.

கோலுங்கன்கையிற் பிடித்து-உடலைக்
குலுக்கியே நடித்து
வாலிபன்பரிதனில் வருகவெதிரதனில்
சாலமிகவுமாக்கும் தாயெனமுதிர்ந்திடும் (கிழ)

எந்தன்மகனே யென்று-நீர்தான்
எங்கேயோரு வென்று



சொந்தமாயெனக்கு வந்தவிபரந்தன்னை
இந்தவேளைதன்னி லியம்பிடுநீயென்று (கிழ)

நரைத்ததலையும் நடுக்க-இருகாலும்
நடக்கையிலே தடுக்க
உரைத்திடுஞ்சொல்லினிலுளறுகொடுக்க
உவ்விதஅரசன்றன் றுயரினைத்துலைக்க (கிழ)

பொது-விருத்தம்.

கிழவியைக்கண்டப்பாசு கிருபையாயழைத்துச்சொல்வார்
தளர்பசிதீர்ப்பாயானாற் றக்கபொன்தாரேனென்றான்
பழமையாயதிவாள்போலப் பட்சமாயிவனைக்கூட்டி
வளர்மனைக்கழைத்துப்போயி மன்னனுக்குணவுயிந்தாள்

இதுவுமது-கொச்சகம்.

மசியாதித்தாம்பூலம் பாராசன்தின்றபின்பு
கொசியதாய்ப்பொன்னீந்து கோதிக்கிழவியைப்பார்த்து
வசிகநகர்தனிலேதும் வளமையுண்டோவெனக்கேட்க
நிசமொழிநளம்மையரும் நிகழ்த்துவாளரசருக்கே

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் அப்பாசுமன்னன் பரியிலேறி சீனமாநகரத் தெருவீதியில் வரும்போது ரொம்பஅழகுமுள்ள ஒருகிழவிஇவருக்கெதிரில்வர அவளைக்கண்டு பசிக்கு ஏதாவது உணவளித்தீரானால் அதற்குத் தக்கபொருள் தருகிறேனென்றுசொல்ல அக்கிழவி முன்பின் பழகினவளைப்போல் பரிவாயவனைக்கூட்டிக்கொண்டு தன்வீட்டிற்குப்போய் போஜனமுதலிய தாம்பூலமுங்கொடுக்க அதுகளைத்தின்று இவர்சந்தோஷிப்பட்டு அவளுக்குத்தகுந்த பொருளுங்கொடுத்துக் கிழவியைப்பார்த்து இந்தநகரில ஏதாவது அதிசயமுண்டோவென்றுகேட்க அதற்கவள்சொல்லுகிற விதங்காண்க.

கிழவி அப்பாசுமன்னனுக்குச்சொல் - கொச்சகம்.

இன்னகரிலதிசயத்தைநயென்மகனேசொல்கிறேன்கேள்
மன்னன்பருவீரசன் மகள்மிகர்டான்பெண்ணொருத்தி
அன்னியதேசத்திலுள்ள அரசர்நூறுபேரைக்கொன்ற
கன்னியவளாருதனைக்கழறவென்றுளவாகாதே

கேளாய்மன்னனே இந்தநகரிலதிசயமென்னவென்று கேட்டாயல்லவா அதென்னவென்றால் இந்தஅமையாளும் பருவீராசன் தபோபலத்தினாலுதித்த மிகர்பானென்றொருபெண்ணிருக்கிறாள் அவளைக்கலியாணம் பண்ணவேண்டுமென்று வந்த அன்னிய

தேசத்தரசர்கள் ஐந்நூறுபேர்கள் அவள்சொல்லிய மசலாவுக்குத் தோற்றுப்போக அவர்களைக்கொன்று அவள் சற்பழியாமல் ரொம்ப அழகு சவுந்தரியத்தோடேயிருக்கிறாள் அவளழகைச்சொல்லிக் கொண்டு வருகிறேன் கேளுமப்பா.

அப்பாசுசொல்-வசனம்.

ஆனால் வாருமம்மாதாயே அவளழகு முதலானவைகளை யெல்லாஞ் சாங்கோபாங்கமாய்ச் சொல்லிக்கொண்டு வாருமம்மா.

கிழவி-அப்பாசுக்குச்சொல்-தரு-இ-ம்-மோகனம்-அடதாள சாப்பு.

பல்லவி.

அவளுக்குநிகராக அவனிதனிலும்பெண்களாருண்டு யென் மகனே

அநுபல்லவி.

புவன ஆகாயத்திற்பாதாளலோகத்திற்
புவ்வபதிபேசவொருபெண்ணைக்காணலாமோ (அவ)

சரணங்கள்.

மேருமலையைப்பார்த்து மிகவேளிதஞ்செயும்
மேன்மைசெறியுங்கொண்டுகுசங்கள்-புசம்
மெல்லியவள் அடையழகைக்கண்டுநாணி
மெலிந்துமறைந்தவிடகஜங்கள்-வானில்
காருமவள் தலைமயிரைக்கண்டுநாண
கனவரம்பையுமிருசழலைத்தினமும்பேண
கூறுமிவ்வுலகிலவட்கிணையோபெண்கள்
கோதையெளிலவக்காணவேணுங்கோடிகண்கள் (அவ)

வேலையும்வென்றதன்-மேலாந்தவஞ்செய்வோரை
விரட்டியுருக்குங்கொண்டு விழிகள்-நல்ல
வேதவாணிமயில்குயில்கிளியமுதையும்
வெட்கச்செய்யுமவள் மொழிகள்-நடையோ
கோலையன்னங்களைப்பழிக்குமேவி ஞேதம்
கோபங்களைதீருளிர்தருமவள் நாதம்
வாலைப்பருவமின்றுட்குவைபத்தான்டேழுதி
வழுத்தவறியேன்பொற்பையவளுக்கவளேசோடு (அவ)

வாயில்நிறைந்தபற்கள்முத்தெனவழுத்தலாம்
வனசமு-சிகுத் கேற்குஞ் சொல்ல,
வாயென் அபோதுமோ அவள் கொந்து வை
வடிவாமம்புலிகள்நாலைரி மேங்கும்-புகழ்
ஆயிரநாவுடையசேடனுஞ் சொல்லப்போமோ
அவளுக்குசொல்மசலாவை யாரும்வெல்லப்போமோ



தூயவனிதையைப்பார்த்தோர்க்குச் லிப்யேறு
துதியிலக்குமியென்னச்சொல்லலா மிப்போது (அவ)

வசனம்.

அதோ கேளாய்மகனே இன்னம் அழகுமுதலானவைகளை ச் சொல்லவேண்டியானால் என்னாலும் ஆயிரநாவைப்படைத்தஆதிசேஷனாலும் சொல்லமுடியாது அப்பாமகனே அப்பாசு

அப்பாசு-கிழவிக்குச்சொல்-விருத்தம்.

கன்னலைப்பழித்தமின்னைக் கண்டுநாமசலாவாலே
பன்னிலேவார்த்தையாடி பாரினிற்செயித்துமேலும்
துன்னியமணம்புரிந்து துரிதமாய்ச்செல்வேனூர்க்கு
அன்னவளிடத்திற்கேக அம்மாநீசிலவுதாராய்

வசனம்.

கேளுமம்மாதாயே அப்பேர்க்கொற்ற அழகுரூபலாவண்யமான பெண்ணானவள்சொல்லுமசலாவைவிவித்து அவளையும்நிகரவென்னுங் கலியாணமுஞ்செய்து என்னகரத்துக்கு அழைத்துக் கொண்டுபோகும்படியாய் விடைதாருமம்மாதாயே.

கிழவி-அப்பாசுக்குச்சொல்-தரு-இ-ம்-புந்நாகவராளி-அடதாளம்

துரைவேஅடாமகனே-நான்
சொல்லிடும்வார்த்தையைக்கேளாமல்
வரைசேர்முலையாளை-திரு
மங்கிலியதாரணஞ்செய்திடவே
நடப்பேனென்றுசொன்னாயே-அந்த
நாரிசொல்மசலாவுக்கிதுசொல்லித்
தடுப்பாரோயின்னமுங்கேள்-அந்தத்
தையலாள்வந்துதானிருக்கும்
பொன்னணிமண்டபத்தில்-கதிர்
போலவிளங்குமரியணையும்
மின்னேரிடையாளும்-கொலு
மேன்மையாகவுந்தானிருப்பாள்
முத்தாரம்பூண்டமங்கை-அவள்
முன்சென்றுகண்டவர்மூச்செறிவார்
தத்தைபேர்கள்மெத்த-இந்த
வானிலத்தில்யாழமதார்
வடிவாயிருப்பாள்-தோற்ற
மன்னவரைச்சின்னபின்னஞ்செய்வாள்
குடிகொண்டிருந்திடுவாள்-வாணி
கோதையவளிடத்தாதாயாய்

அப்பாசெனும்மகனே-அலை
　எண்கடலினிற்போனாலுமாண்டிலவாம்
தப்பெக்கிறன்றுதேயென்சொல்-தீ
　தள்ளிவிட்டவளைப் போகாதே
மறந்துவிடுவலில்-பொல்லா
　மங்கையுமுந்தனைத்தான்செயிப்பாள்
சிறந்தவுலகதனில்-நல்ல
　சேயிழை மார்களில்லையாதோ　　(தனனுந்)

அப்பாசு-கிழவிக்குச்சொல்-விருத்தம்.

அன்னையேகேளாய்நானு மறைதவேறேர்வின்னைப்பும்
தன்னிகரில்லாமாது தான்சொல்லுமசனாத்தன்னை
யின்னிதோ கனத்தில்வென்று மெல்லியைமணமுஞ்செய்து
தன்னையீர்த்திபெற்று நானச்சொல்வேன்கண்டாய்.

வசனம்.

கேளும்மாதாவே நீசொல்லுகிறது நிசமே ஆனுலும் அவள் சொல்லுகிற மசலாவை ஒரு நிமிஷத்திலேவிட்டு ஆறுமுகனே விதவி த்துவென்று அவள்கோரிக்கையையும்நீக்கி அவளையுங் கலியாணஞ் செய்து என்னகரம்போய்ச்சேருகிறேனம்மாதாவே

கிழவி-அப்பாசுக்குச்சொல்-விருத்தம்.

மகனேநீயிப்போதெத்தன்னைத்தலைவைத்தடுத்துப்பேசிச்
செகம்புகழ்மிகர்மாமாதை செய்ந்செய்துவருவேனென்றாய்
தலைகமையாயெவரும்போற்றத்தலை யலையுமணம்புணர்ந்து
அகமதுமகிழ்ச்சியாய்ப்போயி அன்புடன்வருவாயே.

வசனம்.

கேளாயப்பாமகனே நான்சொல்வதைக்கேட்டு மிகப்பாவிடமேபோதேனென் றெச்சரிப்பாய்ச்சொல்லுகிறாய் ஆகையால் இப்போது உன்மனப்போலேபோய் அவளைச்செயித்துமணம்புரிந்து வருவாய் அடாமகனே.

பொது-விருத்தம்.

விடையதுவாங்கிக்கொண்டு வேந்தரப்பாசுதானும்
நடையிடுபரியிலேறி தன்னகர்வீதிசெல்ல
அடைவுடனவ்வூரானு மடல்பகுவீராசன்
கடிமனைவாசல்காக்குங் கட்டியக்காரன்வந்தான்

வசனம்.

அகோதெப்படியென்றால்-கிழவியினிடத்தில் விடைபெற்று த்தன் பரியிலேறிக்கொண்டு பகுவீராசன் மனையிடத்திற்போகுதற் காகத்தெருவீதியில் அப்பாசுவருகையில் அவ்வூராளும் அர சனாமனைவாசற்காக்குங் கட்டியக்காரன் வருகிறவிதங்காண்க.



கட்டியக்காரன்வருகிற-ஓடித்தரு
இ-ம்-தோடி-ஆதிதாளம்.

பல்லவி.

மாசிலாதமின்மாநகரரசன்வாசல்
வாழுங்கட்டியக்காரன்வந்தான்

அநுபல்லவி.

தேசதேசராஜாதிராஜர்துதி
நீரன்பகுவீராசனைலப்புகழும்　　(மாசி

சரணங்கள்.

சிரசிலணிந்தகுல்லாத்துலங்க-வஜ்ரஞ்
　செறிந்தமுத்துமாலைகளிலங்க
தவாமலர்மாலைகள்நலங்க-மிகுபிரகாச
　நவமணித்தாவடங்குலுங்க
வளையாய்ப்புஜகீருதிவழங்கவெள்ளித்தடியும்
　வான்சமுதாயத்திவரிசைப்பட்டயங்களும்
வலிபெறக்கட்டிப்-புலியெனக்கெட்டி
　வலதுகைதட்டி-பொலிவுடன்கிட்டி
வடிவுகொள்கிக்க மெனமீசைமுறுக்கிப்
　படியின்சவைநடுபகைவரகந்தையுறுக்கி　　(மாசி)

கட்டியக்காரன்சொல்-விருத்தம்.

மன்னர்மன்னர்களேகேளீர் மகராசராசபோசன்
தன்னையமந்திரியாயும் நற்பகுவீராசன்
சொல்வாசனத்திருக்கத் தோன்றலுவருவதாலே
தன்னவரொவராலும் சந்தடியிலாதிருங்கள்

வசனம்.

அகோகேளுங்கள் மன்ன மன்னர்களே-மற்றுந் தன்னவர்களே நம்மையெல்லாமாளும் பகுவீராசாவும் மந்திரியுங்கொலுவுக்கு வருகிறபடியால் சந்தடிசெய்யாமல்வெகுஜெச்சரிக்கையாயிருங்கள் சபையோர்களே.

இராஜன்வருகிற-தரு-இ-ம்-புந்நாகவராளி-ஆதிதாளம்

பல்லவி.

பகுவீராசன்வந்தான்-கொலுவிருக்க
பகுவீராசன்வந்தான்

அநுபல்லவி.

குமாரனைப்புரிந்த புகழ்சோமசேகரன்மிக்க　　(பகு)

சரணங்கள்.

நாரத்தப் பாகைசொலிக்கத்-தேவிஸ்மாலை
நாகபுணிபோற்கதிக்க
கவரிக்குடைகள்பிடிக்க-வாணர்கள்மிகக்
களித்துக்கவிகள்படிக்க
புனைத்தாசர்களும் பூம்ந்நுவத்தஜபோற்ற
புண்யபதிகச்செழித்த-விண்ணவர்மகிழ்ந்தேற்ற (பகு)
மந்திரிப்பிரதானிகளும்-சேனைத்தலைவர்
வந்தித்தடியிற்றொழ
சுந்தரமின்னார் நாடகமே-இலமாதர்கள்
சோபனக்கவிபாட்டவே
அந்தரயிந்திரன்போலராசாக்கினைச்செய்ய
ஆலவட்டம்பிடிக்க-அளகைக்கோனென்னத்துய்ய (பகு)
வாத்தியத்தொனிபெருக-வேதம்புகலும்
மறையோர்கள்புகழ்வருக
மாற்றலர்வந்தடிபணிய அவர்கள்மேல்
வைத்தவருள்சகத்தணிய
சாற்றுந்தீர்முறைதனைத் தன்மனதினிலுற்றோன்
சதுர்வித்தத்தினுபாயதந்திரங்களைக்கற்றோன் (பகு)

பொது-விருத்தம்.

மிக்கஜனத்தவராகும் மிருபகுவீராசன்
தக்கதேசத்திலுள்ளோர் தன்மையைக்கேட்கமந்திரி
தொக்கவிவ்வுலகிலுள்ளோர் சுகமுடனிருக்குஞ்சபை
யக்குவ்யாகதன்றுயப் பார்த்திபர்க்குவோசெய்வாரே.

வசனம்.

இவ்வாறதேசத்தையாளும் பகுவீராசன் மந்திரிமார்கள்பிரதா
னிகள் இவர்களுடன் கொலுவிருக்கும்பொழுது மந்திரியைப்பார்த்து
தேசநடவடிக்கையைக்கேட்க அதற்குச்சொல்லுகிறவிதங்காண்க.

பகுவீராசனும் மந்திரியுந்தேசவிசாரணை.

இராசன்-வினா.

சேனாதிபதிசேனைகளெல்லாருஞ்
செழித்திருக்கின்றார்களா

மந்திரி-விடை.

செயமேவுபுவிராசர் கம்பீரசபையாருஞ்
செழிப்புடனிருக்கிறார்கள்



இராசன்-வினா.

தாரணியில்மன்னவர்கள்என்பகுதியைச்சீராய்
தந்துவருகின்றார்களா

மந்திரி-விடை.

தடைசெய்வரோவுமதுசெங்கோன்முறைப்படிந்
தந்துவருகிறார் மன்னனே

இராசன்-வினா.

கார்பொழிந்திடவயல்வாழ்குடிகள்பயிர்செய்து
களமுடனிருக்கிறாரா

மந்திரி-விடை.

கன்னனேநின்கிருபையாலவருமாறிலோர்
கடமைதந்திருக்கிறார்கள்

இராசன்-வினா.

வரணிந்திதிநகரிலெவரேனும்ராசாக்கள்
இங்குவந்திருக்கிறாரா

மந்திரி-விடை.

ஏகசக்கிராதிபதியேபுரியிலோர்ராசர்
ஏறிவந்தார்களரசே

பொது-விருத்தம்.

தேசத்தினியற்கைகேட்ட செயபகுவீரரோடு
தேசமந்திரியுநல்ல நிபுணருஞ்சூழ்ந்திருக்க
மாநிலாவப்பாசேந்திரன் வன்பரியதனிலேறிப்
பாசமாட்த்தெருக்கள்சுற்றிப் பார்த்திபன்கொலுவில்வாரார்.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம்கொலுவில்பகுவீ
ராசாமந்திரியைத்தேசவிசாரணை கேட்டுக்கொண்டிருக்கும்போது
அப்பாசுமன்னன் தன்பரியிலேறி சபைக்குவருகிறவிதங்காண்க.

அப்பாசுமன்னன்பகுவீராசன்கொலுவுக்குவருகிற-தரு.

இ-ம்-நாதநாமக்கிரியை-சாப்புதாளம்.

ஒருங்கிழவிசொற்காதினிற்கேட்டுமே
ஒப்பியேமேவொனும்அப்பாசுராசனும்
சோதிப்பிரகாசமாய்ச்சாதிக்குதிரைமேல்
சுக்கிரமாகியசந்திரன்போலவே
தோன்றலுஞ்சென்றார்-பகுவீரர்-வாசலைக்கண்டார்

கண்டவரசனும்வண்டக்குதிரைமேற்
காரிடிபோலவேசாரியிதேதென்று
ஒன்றுந்தெரியாமல்நின்றிடுந்துதரை
வோடிப்பாரென்றார்-கீடியமன்னவர்
உரைப்படிநடந்தார்-குதிரையை-நடத்தியேவந்தார்.
வந்திடும்அப்பாசுகந்துக்தன்னையே
வாரியேசுற்றியேகுரையின்காற்றென
விந்தையுகந்ததகுந்தகுகுந்தரி
மேட்டிமையின்பரிநாட்டியஞ்செய்திட
விள்ளாதிருந்தார்-கொலுமுன்னே-மெள்ளவேவந்தார்
வந்திடும்வேளையிற்சிந்தைமகிழ்ந்து
மதியாப்பகுவீரதிசயமாமென்று
முந்தியேவந்தவர்சொந்தமகள்மசலா
உரிமையாய்ச்சொல்லுவாரொன்றவரொண்ணிட
ஒப்பமாய்ச்சேர்ந்தார்-பகுவீருமுன்-செப்பமாய்ச்சார்ந்தார்
சார்ந்தக்குதிரையைச் சபையில்நிறுத்தியே
ரதட்டியிரங்கினார்திட்டமதாகவே,
நான்தானுன்மகள்சொல்லுமசலாவைவிடுவிக்க
நன்றாகவந்தவனென்றனர்சொல்லிட
நலமாய்ப்பகுவீரு-அப்பாசுக்கு-நன்றாகச்சொல்வார்
சொல்லுக்குகந்திடும் வல்லவர்நீராகித்
தோகைசொல்மசலாவைத்துரிதமாய்விடுவித்தால்
வல்லமருமகனல்லாயாவாயென்று
மன்னனுணர்த்துபின்னல்லதிருமென
மகிழ்வாயப்பாசு-மன்னனோடு-மார்க்கமாயிருந்தார்.

பொது-கட்டளைக்கலிப்பா.

சந்தாகந்தனிலேறியேவந்திடுங் காளையாகியப்பாசுமன்னனை
அந்தவூரினையாள்பகுவீருவும் ஆர்ந்தசிம்மாசனத்திலிருத்தியே
சுந்தரம்மாமதிமுகத்தாதியைத் தோன்றலும்மழைத்தேமிகர்பானுவை
இந்தநற்சபைமன்னுந்திரையினில் ஏகிவந்தேயிருந்திடச்செய்வையே.

இதுவுமது-விருத்தம்.

அரசன்சொற்கேட்டதாதி அன்னேரமெழுந்துசென்று
மருகமழ்மிகர்பான்பாலில் மங்கையுமதனைச்சொல்ல
பரிவுடன்மனமகிழ்ந்து பார்ப்பவர்மயங்கிச்சோர
அரிவைபொன்பணிகளாடை யலர்மலாணிவதானள்

இதுவுமது-கொச்சகம்.

ஆடைகள்பொன்னாபரணம் அங்கமெல்லாஞ்சூட்டியபின்
சேடியர்கள்சூழ்ந்துசெய சோபனங்கள்பாடிவர
பாடகச்சிலம்புகொஞ்ச பங்கயக்கைவளையல்மிஞ்ச
கூடுஞ்சபையதனுள் கோதைமிகர்பான்வாராள்



வசனம்.

அகோதெப்படியென்றால் அப்பாசுமன்னனைப்பகுவீராசன் தன்னருகிலிருத்தியபின் அங்குள்ளஓர்தாதியை யழைத்து இந்தச்சபையினுள் ஒருதிரை மறைவில் என்மகள் மிகர்பானை அழைத்துவந்திருக்கச்சொல்லென்று அரசன்சொல்ல அந்தத்தாதியானவள் மிகர்பானிடத்திற்போய்ச்சொல்ல அவள் ஆடையாபரணமுதலான சகல பணிகளுமணிந்து களபகஸ்தூரிமுதலிய வாசனைகள்திமிர்ந்து புஷ்பஞ்சூடித் தகப்பனிருக்கிற சபைக்குள் அதிகவுல்லாசமாய்வருகிறவிதங்காண்க.

மிகர்பான்சபைக்குவருகிற-தரு-இ-ம்பராசு-ரூபகதாளம்.

பல்லவி.

திகழுமதிவதனஜொலிதநயவுல்லாச நிகரில்மிகர்பான்வந்தாள்

அநுபல்லவி.

புரிற்பொன்னாபரணம் பூட்டிச்சிங்காரங்காட்ட
புரத்திற்றாதிகள் சொல்லும் புத்தியைக்கேட்டுச்சீராட்ட (திக)

சரணங்கள்.

தக்கச்சிறப்புடைய நூறு-மசலாவின்
தன்கருத்துணையாளைக்கூறு-படத்
திக்குமுக்காட வெட்டிச்சிகைத்துப்புவிசூழ
திக்குமுற்றிலுமெறிந்து-திக்கம்போற்கொர்ச்சிக்கப்பட்ட (திக)
தான்பிடித்ததேபிடியென்று-வருபவனைச்
சாதித்தவர்கள்தம்மைவென்று-வன
மானினம்போற்குதித்து-மதியாதவமதித்து
மாநிலந்தனக்குள்ளே மானிநானென்றேதுதித்து (திக)
ஈன்றராசன்பகுவீர-னுகவிய
செல்வப்புத்திரியானனுந்திர-மிகுத்த
மானத்தலைவரெல்லா மருவிப்பணியுமந்த
மானகர்க்கரசனுமப் பாசுதனைமணந்த (திகழு)

பொது-விருத்தம்.

தொந்தமொடுதாதியர்கள் நான்குதிக்கும் சூழ்ந்துவரமிகர்பானு தோகைமின்னாள், அந்தபகுவீராசன் கொலுமுன்னேகி அலங்கிருந்த திரையினுள்ளேயமர்ந்திருக்க, வந்திடும்அப்பாஜினைப்பார்த்தாசன்சொல்வான் மகள்மசலாச்சொல்வதற்குவிடுவியென்ன, சுந்தாஞ்சேர்மன்னோர் நல்லதென்றிருக்க தோகைநல்லாள்கெருவமதாய்ச்சொல்லுவாளே.

வசனம்.

அகோசெப்படியென்றால் இந்தவிதமாய்ப்பகுவீராசன் மகள் மிகர்பானென்பவள் கூடியசபையினுள் ஓர்திரையின்மறைப்பில் தாதிகள்சூழவந்திருக்கையில் அவள்தகப்பன் அப்பாஜைப்பார்த்து என்மகள்சொல்லுமசலாவுக்குப்பொருள்கடுவியென்ன அவர்நல்லதென்று சம்மதித்திருக்க அவளொம்பகெருவத்துடனே சொல்லப்போகிற விதங்காண்க.

மிகர்பான் அப்பாசைப்பார்த்துச்சொல்லுகிற விருத்தம்.

வல்லவனென்றுவென்று வந்துயிச்சபையின்மேவி
வெல்லுவேனெனவேவந்த வேந்தனேசொல்லக்கேளாய்
மெல்லிநான்சொலும்பொருட்கு மிகுபொருள்சொல்லாவிட்டால்
கொல்லுவேனென்றன்வாளால் கொள்கையாயெவரும்பார்க்க

வசனம்.

அகோகேளாய்ராஜனே இப்போதுஎன் றகப்பன் பகுவீரவாசரும் தேசமன்னர்களுங்கூடியிருக்கிற சபையில் ரொம்ப வல்லவனென்றும் என்னைச்செயிப்பேனென்றும் கொஞ்சமேனும் பயமில்லாமல் வந்திருக்கின்ற மன்னனே நான் உனக்குச்சொல்லுகின்ற மசலாவுக்கு நீர்பொருள்விடுவிக்காமற்போனால் இங்குள்ள யாவர்களுக்குந் தெரியும்படியாய் என்கைவாளினால் உன்னை ஒரேவெட்டாகவெட்டி உயிரைவானலோகத்துக்குப்போகும்படியாய்ச்செய்வேன் என் சாமர்த்தியம் உனக்குத் தெரியாதோ அரசனே.

அப்பாசு மிகர்பானுக்குச்சொல்-விருத்தம்.

எந்தனைக்கொல்வேனென்ற யேந்திழைமயிலேகேளாய்
வந்திடும்விதிவந்தாக்கால் மாந்தர்களென்செய்வார்கள்
உந்தன் தன்மசலாத்தன்னை வுகந்துமேசொல்வாயானால்
அந்தமாய்ப்பொருளைச்சொல்வே னுதிதன்கிருபையாலே

வசனம்.

கேளாய் வெகுமன்னர்களைக்கொன்று ஜெயம்பெற்ற பெண்ணே இப்போது என்னையுங்கொல்வேனென்றாய் ஆகிலும் உன்கைவாளினாற்கொல்லும்படியாய் விதியிருந்தால் அதுபோல்முடியும் இப்போது நீ சொல்லுகிற மசலாவைச்சொன்னால் அல்லாவுதவியினாலே அதற்குப்பயன்சொல்லுகிறேனே பெண்கள்சிரோமணியே.

அப்பாசுக்கும்-மிகர்பானுக்குந்தர்க்கந்-தரு.

இ-ம்-பிலாஹரி-திரிபுடைதாளம்.

மிகர்பான்சொல்லல்.

செப்பலென்றுசொல்கிறாய் வல்லவன்போலவே
தாமிருந்தன்னைநாடியேவந்திடும்
எல்லவன்போல்மிக வுள்ளவலங்கிர்த
வந்தலரோமனந்தேர்ந்துநன்றாய்ச்சொல்லும்
எப்பவந்தீர்காண்-விள்ளாவிட்டால்-இப்பக்கொல்வேனான்

அப்பாசுசொல்லல்.

கொன்றிடுவேனென்ற குங்குமச்சந்தனக்
கொங்கைமின்னாட்பசுந்தங்கமேசொன்னது
என்றுமிறையவன் அன்றுதாய்வயிற்றினில்
இன்று அமைத்ததால் என்றன்தாய்தந்தையர்
சன்றிடவந்தேன்-மசலாவை-மீண்டுமீசொல்வாய்



மிகர்பான்சொல்லல்.

மீண்டென்னைச்சொல்லென்ற வேந்தனேநீகேளாய்
விளம்பிடுவேனின்னம் வேறேமசலாவை
தாண்டுமபரியேறி மீண்டிங்கேவந்திடும்
தாட்டிகனேமனங்கேட்டுநன்றாய்ச்சொல்லும்
தாமிருப்பெங்கே-சொல்லாவிட்டால்-நான்கொல்வேனிங்கே

அப்பாசுசொல்லல்.

நான்வதைப்பேனென்று தானேயுரைக்கின்ற
நங்கையேமங்கையே பொங்கமாய்ப்பொருள்சொல்வி
ஊனமிலாதுனைத் தாலியுங்கட்டுவேன்
வுண்டுபாடாயினை நன்றாயறிந்திடு
உடுக்குந்துகின்மேல்-நானிருப்பது-சடுந்தமேனினிமேல்

மிகர்பான்சொல்லல்.

இன்னமுஞ்சொல்லுவேன் மன்னவனேகேளாய்
இங்கிதமாய்விள்வேன் சங்கையகாகவே
ஆவலாய்மொழிகுவேன் அன்பமில்லாமலே
அட்டிடன்றுமலேகெட்டியதாயிப்போ
ஆர்மகன்சொல்வீர்-சொல்லாவிட்டால்-கோர்மையாய்க்கொல்வேன்

அப்பாசுசொல்லல்.

நெருடனே யென்னைக்கோரல்செய்வேனென்ற
நேரிழையேயிந்தப்பார்தனிலேயுன்னை
பாரறிவார் பகுவீராசன்பெற்ற
அம்பொன்மயிலேநான் தென்புடன்சொல்லக்கேள்
ஆதமமகன் தான்-பெண்ணேயின்னம்-ஓதுவதேன் நான்

மிகர்பான்சொல்லல்.

பெண்ணேயோதுமென்ற மன்னவனேகேளாய்
பேருலகிலந்தாறாசர்வந்து
அன்னோர்முன்னைப்போல்மன்னர்மகிகெட்டு
அவர்களழிந்துவொழிந்ததையறியீரோ
ஆர்வளர்த்தார்காண்-விள்ளா[illegible]யென்கோன்

அப்பாசுசொல்லல்.

கோர்பினப்போவென்று ஆரவாரத்துடன்
நீசொன்னப்போதினிலும ஆர்சொன்னாலுங்கொல்வேன்
ஆரும்புகழ்பகுவீராசன்பெற்ற
அன்னமேசொன்னமே இன்னமுந்தெரியாதோ
அல்லாவளர்த்தான்-நானவனுன்னைச்-சொல்லால்வெல்லத்தான்

பொது-கொச்சகம்.

பகுவீராசன்மகள் பகர்மிகர்பான்சொல்லசலாச
செகம்புகழுமப்பாசு தெரிந்துபொருள்சொன்னதினால்

அகமகிழ்ந்தேயரசரெலா மன்னேரமெச்சிருக்க
மிகமெலிந்துவல்லியரு மெய்சோர்ந்துசொல்வாளே.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் மிகர்பான்சொல் மசாலுக்கு அப்பாசுபொருள்விடுவிக்க அங்குள்ள பகுவீரராஜனும் மற்றராஜாக்களும் இவ்வரசன் நம்மிட அரசினைவெல்லுவானென்று மெச்சியிருக்க அவள் இவனை நாம்வெல்லுகிறது அரிதாயிருக்கிறதென்று ரொம்பவிசாரத்துடனேயிருந்து தேறிச்சொல்லுகிறவிதங்காண்க.

அப்பாசுக்கு-மிகர்பானும்சொல்-விருத்தம்.

சொல்வதைக்கேளுமன்று அரிதமாய்விடுத்துசென்று
நல்மசலாவைச்சொல்ல நாளைநீர்வருகுவீரே

வல்லியேயிப்போதான்றன் வார்த்தையின்படியேசென்று
வெல்லவேவந்துவுன்னை வெல்லுவேன்மானேதேனே

வசனம்.

கேளாய்அரசனே முதலாவது இவ்வளவுமசலாப்போதும் இப்போது உன்னுடையவிடுதிபோய் நாளையதினம் வந்தால் மசலாச்சொல்லுகிறேன் நீர்பொருள்சொல்லலாம் போய்வாருமென்னே. அரசன்வசனம் நீசொல்லுகிறபடியே விடுதிபோய்இங்கேவந்து உன்னைச்செயிக்கிறேன்பார்பெண்ணே

பொது-விருத்தம்.

கன்னியாள்தானிருந்த சபைவிட்டெழுந்
தன்னரண்மனைபோய்ச்சேரச் சபையிலோர்கள்வந்துசெல்ல
அன்னவன்பரியிலேறி யமைமையார்விடுசேர
நன்னயக்கிழவிகண்டு நாயகன்பாற்றுவார்விரைந்தாள்

வசனம்.

அகோதெப்படியென்றால் இவ்விதமாக மிகர்பானென்கிறபெண்ணும் தன்னரண்மனைப்போய்ச்சேர பகுவீரராஜனும் அங்குள்ள அனேகரசரும் கொலுகலைந்து அவரவர்விடுபோய்ச்சேர அப்பாசுகுதிரையிலேறி முன்னிருந்த கிழவிவீடுபோய்ச்சேர அவள் இவனைக்கண்டுநீதப்பிவந்ததுபோதுமென்று அண்டவனிடத்தில் அவாக்கேட்க இனிநடக்கிறவிதங்காண்க.

இதுவுமது-கட்டளைக்கலிப்பா.

இப்படியதாம் பல்லோரிருந்தபின்
னிரவுநீங்கியெழுஞ்சூரியன்வந்ததால்
செப்புமநற பகுவீரராசனொடு
சேர்ந்தமந்திரியுங்கொலுமேவிட
தப்பிலாப்பிரியமப்பாசுமே
தானுமவந்துகூடியிருந்திட
ஒப்புந்தாதிகளுசூழமிகர்பானு
வெள்ளிபரம்பைதான்வந்திருந்தனள்



இதுவுமது-விருத்தம்.

பைங்கிளிமிகர்பானந்தை பகுவீரராசனோடு
சங்கைமந்திரிராசாக்கள் தனிக்கொலுதனில்நக்
மங்களவப்பாஜேந்திர மன்னனைமங்கைநோக்கிச்
அங்கமாமசலாச்சொல்வேன்சுறுக்கினிற்பொருள்சொல்லென்றாள்

வசனம்.

அகோதெப்படியென்றால் அன்றையிரவுபோய்மறுநாட்காலையில் சூரியனுதையமானவுடனே பகுவீரராசனும்மந்திரிப்பிரதானிகளும் சூழ்ந்திருக்க அகம்மதுசாமகன் அப்பாசு கிழவியினிடத்தில் விடைபெற்று தன்குதிரையிலேறி அரசர்கள் முதலானபேர்கள் கூடிக்கொலுவிருக்கும் சமுகத்திற் போயிருக்க மிகர்பானென்பவள் தன்தோழிமார்களுடனே முன்மசலாச்சொன்ன இளமண்டபத்தில் வந்திருந்து அப்பாசைக்கூவி மசலாச்சொல்லுகிறவிதங்காண்க.

அப்பாசுக்கும்-மிகர்பானுக்கும்-தர்க்கம்.

மிகர்பான்சொல்-விருத்தம்.

இன்னமும்பயமில்லாமலென்னெதிர்வந்தாயல்லோ
நன்னயமசலாயிப்போ நானுமேயுனக்குகேளும்
அன்னவன்[illegible]ட்டத்தப்பதிற்சிமிட்டாக்கண்ணிறகுநாலு
தன்[illegible]சாலிலர்விட்டா லிகதண்ந்திளிற்கொல்வேனே

அப்பாசு[illegible]ல்-தரு-இ-ம்-ஆனந்தபைரவி-அடதாளம்.

கொல்லுவேனென்றமாதே-இம்மசலாவை
சொல்லுவேநாளிப்போதே
கொல்லுவேனென்றுசொன்ன கோதையேமாரிகாலத்தில்
கல்லாய்ப்பதக்குந்தும்பி கவிழ்ந்தேனுன்மசலாவைக் (கொல்)

மிகர்பான்சொல்-விருத்தம்.

நம்பித[illegible]னென்றுசொன்ன தோன்றலேசொல்லக்கேளாய
அன்பு[illegible]னன்றாருண்டு அடிப்பர்கொரத்தன்னை
ப[illegible]தாய்ப்பணிரண்டைந்து காழிகையதனிற்சுற்றி
இ[illegible]மாய்வருமென்றோரார் இதன்பொருளெனக்குச்சொல்வாய்

அப்பாசுசொல்-தரு[illegible]தபடிராகம்-தாளம்.

இது[illegible]வுயாரமோ-நீகேட்டதம்
கேர்[illegible]கசசொல்லதுநேரமோ
இது[illegible]வன்னபாரமோ எந்திழையேமயிலே
மதிப்பிரகாசம்போக்க வருஞ்சூரியனல்லவோ (இது)

மிகர்பான்சொல்-விருத்தம்.

சூரியனென்றுநீர்தான் சொல்வதுநிஜமதாகும்
பாரமாமரமொன்றுக்கே பனிரெண்டில்லையாறும்
சார்பூவறுபதாகும் தக்கநற்பழமாந்தாமிக்
கோத்திலமசலாவுக்கு நிகழ்த்தும்பொருளைத்தானே

அப்பாசு சொல்-தரு.

மாமென்பதுவருட மாம்-அதன்பனை
மாசும்பனிரண்டென்பதாம்
மாமென்பதையுஞ்சொன்னேன் வளரிலைமுப்பதுநாள்
கரும்பூவறுபான்காழிநற்பழமைந்தொகுத்து (மா)

மிகர்பான் சொல்-விருத்தம்.

ஒருத்தென்றுதெரிந்துசொன்ன [illegible]மன்னுயின்றுகொல்வேன்
அத்தாலாப்புடைப்பிலொன்றுவருமையாம் வஸ்துவாகும்
சகத்தவரில்லாவிட்டால் சகலர்க்குஞ்சவிப்பதாகும்
ஷகாதுயெங்குமுள்ளோர்-தானதைச்சொல்லுவீரே

அப்பாசு சொல்-தரு.

தானமருளியபெண்ணே நீசொல்மசலாச்
சாற்றுகிறேன்கேள்கண்ணே
தானிதைச்சொல்லென்று சாசமாய்ச்சொல்லும்பெண்ணே
வனவுணவென்பது யாருக்குந்தெரியாதோ (தான)

மிகர்பான் சொல்-விருத்தம்.

ஒசிவனமென்றுசொன்ன வுச்சிதவேந்தே[illegible]ளாய்
நிசமதாய்ப்பூமிதன்னில் நெடியவன்படை[illegible]ள
அசைவுளமுனோநாலுள்ள ததுதனையின்ன[illegible]ன்று
வசையிலாச்சொல்லாவிட்டால்,வாளினூற்று[illegible]பேன்மன்னு

அப்பாசு சொல்-தரு.

அணிப்பேனென்றிடமயிலே-இதுவுனக்குத்
தோதகமோகுயிலே
அணிக்கவும்விடுவேனோ சொல்மசலாக்காற்[illegible]
இனிக்குந்தண்ணீர்நெருப்பு இயல்மண்ணுட[illegible]றலாகும் (அணி)

மிகர்பான் சொல்-விருத்தம்.

நாலும்நாம்சொன்னோமென்று நலங்காமலிருக்கும[illegible]ன்னு
[illegible]ம்பமிகன்னில் நபியுடமக்களானோர்
சாலவேபொய்யைச்சொல்ல[illegible]கருஞ்சொர்க்கஞ்சே[illegible]தாரா[illegible]
வலவேசொல்லாவிட்டால் இன்றுன்[illegible]வதைப்பேனே

அப்பாசு சொல்-தரு.

வதைக்கவுமுன்னாலாகுமோ-நீசொல்வது
மன்னவர்க்கேற்பதாகுமோ
வதைக்கவுங்கூடுமோ மன்னர்யாகூபுநபி
அறிமக்கள்பொய்யைச்சொல்லிச் சொர்க்கம்போய்ச்சே[illegible]தார்கள் (வ

மிகர்பான் சொல்-விருத்தம்.

சொர்க்கத்திற்சேர்ந்தாரென்று சொல்லியவரசரோடே
முக்கியமாம்பூமிதன்னில் முதன்மையாமனுவானோர்கள்



சக்கிலாதுதிக்குநாளிற் றையவுரசையாலே
ஒக்குநிதநோக்கொன்ற வொன்னலெனவனே சொல்வாய்

அப்பாசு சொல்-தரு.

சொல்லெனச்சொன்னமாதே-உந்தன்மசலாச்
சொல்கிறேன்கேளிப்போதே
சொல்லுமாதமக்களில் தோன்றும்ஆமில்காமில்
வல்லிக்கு ஆமிலைக் காமில்கொன்றேபுதைத்தார் (சொல்)

மிகர்பான் சொல்-விருத்தம்.

ஆமிலைக்காமில்கொன்று அருமண்ணிற்புதைத்தானென்றாய்
வாயிதன்னினியில்கூடப்பார் மனிதரைக்கண்டாற்போவார்
நாவிபகாலுமில்லை தாம்போவார்வருவார்பின்னும்
சோபிதக்கையுமில்லைச் சொல்லுவாயிவரார்மன்னு

அப்பாசு சொல்-தரு.

மன்னுசொல்லென்றுசொல்கிறாய்-இன்னம்மசலா
வழுத்தவெனக்குப்பாரமா
மன்னனேயென்றுசொன்ன மாமயிலேகுயிலே
இன்னிலந்தண்ணீரிலிருக்குமச்சமல்லவோ (மன்)

பொதுகொச்சகம்.

[illegible]றவன்[illegible]க்லாவுக்குக் குறிப்பதாய்ப்பொருளைச்சொல்ல
தத்தைதன்[illegible]மாழியாளப்போ தயங்கியேமயங்கிச்சேர்ந்து
மத்திடுக்கிப்போல்வாடி மன்னனைப்பார்த்துச்சொல்வாள்
இத்தினமசலாப்போது மேகிவாநாளையென்றாள்

இதுவுமது-கட்டளைக்கலிப்பா. [ன்றபின்
தோகையுஞ்சொல்லித்தாதிகள்கூடவேகுழுசபைவிட்டாண்மனைசெ
வேகமாய்ப்பரியேறியப்பாசுமே விடுதியிற்போயிறங்கியிருந்திட
லுாகைசேர்பருவீரொடுமந்திரியும் மாந்தருமவரில்சிறப்புகுந்திட
ஏகமாயிரவான அந்நிடைஎழ்பரியோனவந்தேயுதித்தானரோ

இதுவுமது-விருத்தம்.

விடிந்திடவேயப்பாசுபரியிலேறி
வேகமுடனரசனாசனை[illegible]
அடர்ந்தபகுவீராசுவமைச்சரோடு
மதிமனிதர்களோடுங்கொலுவிற்கூட
அடர்ந்திடுதோழிகளுடனேமிகர்பான்மின்னுந்
சொற்சபையில்வந்து தினைகளிலிருந்து
கடந்தமசலாச்சொல்லிக்கொல்வேனென்றாள்
காவலனும்விடுவித்துவெல்வேனென்றான்

வசனம்.

அதோதெப்படியென்றால் மிகர்பான் சொன்னமசலாவையெல்லா
அப்பாசுகள்ளருக்காய்ப்பிளந்தாப்போல் பொருள்விடுவிக்க அதைக்

கண்ட பெண்ணானவள் இவனென்ஞ்செயிப்பது அருமையென்றுஅச ந்துசோர்ந்து தேர்ந்து எந்தலோகத்திலேயும் இந்தமன்னருக்குச் சரியா னபேர்களில்லையென்று தான்மதித்துக்கொண்டு இன்றைக்குச்சொ ன்னமசலாப்போது மற்றமசலா தானெக்குச் சொல்வோமென்று அ வள்போய் அரண்மனைசேர மற்றப்பருவீராசனும் மந்திரிகளும்அ வரவர்களிடம் போய்ச்சேர அகம்மதுசா புதல்வனும் கிழவிவீடு போய்ச்சேர அன்றைப் பொழுதுபோய் மறுநாளுதயத்தில் யா வர்களுங் கொலுவில்வந்து கூடியிருக்கையில் மிகர்பானென்பவள் அப்பாசைப்பார்த்து இன்றைக்குச் சொல் மசலாவுக்குப் பொரு ள்சொல்லவேணும் சொல்லாவிடில் உன்னைக்கொல்லுவேனென்று ஆக்கிரமித்துச்சொல்ல அதற்குப் பொருட் சொல்லி வெல்லுவே னென்ற மன்னன்சொல்ல இனிமேல் நடக்கிறவிதங்காண்க.

மிகர்பானுக்கும் அப்பாசுக்கும் தர்க்கத்தரு

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

மிகர்பான்சொல்-கண்ணிகள்.

நேற்றுமசலாவுக்குப்பொருட்சொன்ன
 நிர்ஷயமன்னனேகேள்-இப்போ
சாற்றுமசலாப்பொருட்சொல்லாவிட்டாற்
 றுஞ்சாவதுநிசம்மே

அப்பாசுசொல்-கண்ணிகள்.

ஆற்றமாட்டாமலிப்போமதிகெட்டலந்தே
 யாற்றுகிறாய்-சும்மா
ஏற்றமசலாவுக்குச்சொல்விடுவித்
 துன்னைமணம்புரிவேன்

மிகர்பான்சொல்-கண்ணிகள்.

மணஞ்செய்வேனென்றுசொல்லிப்பச்சமில்லாமல்
 வார்த்தைகள்சொல்மன்னவனே-எங்குங்
குணமுள்ளமனிதரெல்லாம்புகழ்பவரார்
 குறிப்பாயிதனைச்சொல்வாய்

அப்பாசுசொல்-கண்ணிகள்.

மணமுள்ளபெண்மயிலேகண்மணேநீ
 வழுத்தியதெவருஞ்சொல்வார்
கணத்தினிற்சொல்கிறேன்கேளெல்லாம்வல்லமையுத்
 தர்க்காக்குமிறையல்லவோ

மிகர்பான்சொல்-கண்ணிகள்.

இறையவனென்றுசொன்னீர்அதுநிஜ
 மிப்போதுசொல்கிறேன்கேள்பொழுதைத்



தனைகண்டதொருநாட்டாங்கிறதுகானுந்
 தலைமதுவெதுசொல்லுவாய்

அப்பாசுசொல்-கண்ணிகள்.

தலர்பிரளும்பகையால்மூசாநபி
 தானுற்றிலேகும்போதுமரித்திட
சலத்தாசாவாலடிக்கநீர்விலகத்
 தாங்கண்டதரையதுவே

மிகர்பான்சொல்-கண்ணிகள்.

தரையதிலேபுணலுண்டுஆடுமேய்த்தும்
 தக்கஅசனர்நின்று-பலிநான்
இறையவனருட்போலேபாம்பாகிய
 தெவர்தானதனைச்சொல்லுவாய்

அப்பாசுசொல்-கண்ணிகள்.

தெவர்தானுஞ்சொல்லுமரோமூசா
 நபிலாசாஆடுமேய்த்து-அப்போ
அவருர்புனலுண்டுபாம்பானதின்
 காரணஞ்சொல்லவோ

மிகர்பான்சொல்-கண்ணிகள்

காரணமும்வந்தான்தனியாவிற்
 கழறுமனிதருக்காய்-முதலிற்
பூரணவுரப்பால்லாதுவந்தோராகி
 ரிதல்பொருளைச்சொல்வீர்

அப்பாசுசொல்-கண்ணிகள்.

ஆவிலேகாவில்கொண்றுஅடக்க
 அறியாதால்காகம்கொண்டு-இறங்கிப்
பூவிலொன்றிறந்தடக்கஅறிந்தவன்
 புதைத்ததறிந்திலையோ

மிகர்பான்சொல்-கண்ணிகள்.

காகமதென்றுசொன்னஆரசே
 கழர்வேனின்றுர்மசலா-பூமியினில்
சோகமதாயிறந்துபிழைத்ததார்
 சருக்கினிற்சொல்வாயே

அப்பாசுசொல்-கண்ணிகள்.

சொல்லுமதனைகவ்வஅலிபாட்சா
 தோன்றலிறந்தொதுங்க-அப்போ

வள்ளலிசாரபியானுயிர்பெற்று
வாழ்ந்ததறிகிலையோ

பொது-விருத்தம்.

தோகைசொல்மசலாவுக்குத் தாந்தாலப்பாதேஜந்தான்
பாகமாய்ப்பொருளைச்சொல்ல பைங்கிளியிதுநினைந்தாள்
மோகத்தையூட்டிதால்நாம் பொழிந்திட்ட புள்ளாவென்று
பாருசேர்மொழியினாளும் மகருவாள்மசலாவைத்தான்

இதுவுமது.

நிரையதைதீர்யிர்க்கும் தெரியாதப்பாசைப்பார்த்து
வரையெனுந்தனத்தைக்காட்டி மாதிருவிழிகைக்காட்டி
சிரிப்பினால்மோகமூட்டித் தியக்கிடுநேரமாது
அறுத்திடுந்தசைகலாக்தாமரைகுரெக்குறுப் சொல்லென்றாள்

இதுவமது.

வல்லிசொன்மசலாவுக்கு வகைசொலாதிருப்பதாலே
சொல்பகுவீரரொடு குழ்மந்திரிமற்றுள்ளோரும்
சொல்லுவாளிவளாவென்று கூறவப்பாசுகேட்டு
தல்லதோர்மோகநீங்கி மசலாவைகவிலென்றனே

வசனம்.

அகோ தெப்படி யென்றால் ஒருவர்க்கொருவர் மசலாச்சொல்லி விடுவிக்கவே மிகர்பானென்பவள் இவ்வளவும் சொல்லுமசலாவுக்கெல்லாம்பொருள் விடுவிக்கிறபடியாலினிதாயிவளைவெல்லுகிறதிறு இனிமேல் மோகத்தைமூட்டி மசலாச் சொல்வோமானால்இரண்டு பொருட்சொல்ல முடியாது அந்தவேளையி லிவளைக்கொல்லலாமென்று அங்குள்ளவர்களுக்குந் தெரியாமற் றிகையச்சையினாற்றாக்கி அப்பாசைத் தன்னிரண்டு கண்களாலும் மிரட்டி தனத்தையும் வாயையுங்காட்டிச் சிரித்துப் பேசையில் அரசன் இதனைக்கண்டு மோகங்கொண்டிருக்க அந்தவேளையில் இவள் மசலாச்சொல்ல அதற்குப்பொருட்சொல்லாம லிவர்மயங்கியிருக்கப் பகுவீரசரும் மற்றும்யாவர்களும் இன்றைக்கு இவளைக்கொல்லுவாளென்று சொல்லக்கேட்டு மயக்கந்தீர்ந்து மிகர்பானைப்பார்த்து உன் மசலாவைச் சொல்லென்று அப்பாசுகேட்க அவள்சொல்லுகிறவிதங்காண்க.

மிகர்பான்-அப்பாசுக்குச்சொல்-விருத்தம்.

மன்னனேயிப்போதாந்தான் வழுத்தியமசலாவுக்கு
தன்னயப்பொருட்சொல்லாமல் நடுங்கிநீதிருந்ததென்ன
பின்னேநீசொல்வாயென்று பினத்தியவார்த்தையென்ன
அன்னதையெனக்குநன்று யறிந்திடவுரைசெய்வாயே



வசனம்.

கேளும் அரசனே இப்போதுநானுன்னிடத்தில்மசலாச்சொல்ல அதற்குப் பொருட்சொல்லாமல் மயங்கிப்போயிருந்து இப்போதுசொல்லென்கிற விபரமென்ன அதையெனக்குத் தெரியும்படியாய் விபரமாய்ச் சொல்லுவாய் மன்னவனே

அப்பாசு-மிகர்பானுக்குச்சொல்-கட்டளைக்கலிப்பா. (தேன்கந்தாமுள்ளதந்திரப்பெண்ணே கேள்சோர்ந்திருந்தவிபர முரைக்கின்றேனூரிலிருந்திடுநாளையில்எனக்கிசைந்தவெள்ளாட்டி யொருத்தியுண்டந்தமாதினைப் போல் நீயிருந்ததால் வன்தானே நீயென்றுநினைத்துவென், சிந்தைதன்னில்நானெண்ணியிருந்ததன் தெரிந்துகொள்ளுமசலாவைச்செப்புவாய்.

வசனம்.

ஆனால் கேளும் மிகர்பானுவே இப்போதுன்றன் முகத்தைக்கண்டவுடனே எனக்கோரெண்ணம் வந்தது அதென்னவென்றால் என்னுடைய அந்தமா நகரத்திருக்கையில் என்னிடம் அரமனையில் ஒரு வெள்ளாட்டியிருந்தாள் அவளை நான்ரொம்பவும்பிரியமாக வைத்திருந்தேன் அவளுனக்குச் சரியானவளாயிருப்பாள் அவள் தானென்று நீயென்றிறாயென்னியிருந்தேனே ஒழிய வேறே யொன்றுமில்லை இனிஉன்மசலாவைச்சொல்லு மிகர்பானே.

மிகர்பானுக்கும்-அப்பாசுக்கும்-வசல்-தரு-கண்ணிகள்.

மிகர்பான்சொல்லல்.

உந்தன்புரட்டாலுரைத்த
வொருமொழிக்களிக்கணத்திற்கொல்வேன்-ஆட்டின்
ஒருவஸ்துவையுண்ணக்கலால்
உள்ளிருப்பைத்திக்கஞறுப்பீர்வாய்

அப்பாசுசொல்லல்.

எந்திழையேயிம்மசலா
இயப்புகிறேனுந்தனுக்குத்தானே-ஆட்டின்
ஈரலதின்தாமரைக்காயுள்ளிருக்கும்
ரத்தமதென்றுணர்வாய்

மிகர்பான்சொல்லல்.

முட்டிப்பமிமசலாவை
திட்டெனவேராஜமாத்தாய்மன்னு-தயிபார்
முப்பதினாயிரம்பேரும்
முதிர்கிளையாயிருந்தவைசார்மன்னு

அப்பாசுசொல்லல்.

பேர்பெற்றபகுவீரு
பெற்றபெண்ணேயாகபுதயிதான்-பெற்ற

பிள்ளைகளிராறுபேரிற்
 பிறந்தபிமார்களல்லோபேதாய்
 மிகர்பான்சொல்லல்
செப்பமுடனெருமசலாச்
 செப்புகிறேன்தப்பின்றிச்சொல்வாய்-அது
செகத்தோர்க்குநல்லதுவா
 முடிகிச்சென்றுலோடிவிடேவிள்வாய்
 அப்பாசுசொல்லல்.
நான்முன்னமாமயிலே
 நால்வமுத்தும்பொருளதனைக்கேளாய்-வானில்
நான்றிரியுமேகமென்று
 தையலேயறிந்துகொள்காய்குயிலே
 மிகர்பான்-சொல்லல்
எல்லவருமதிக்குமின்று
 யின்னமொன்றுசொல்லுகிறேன்கேளாய்-படியில்
எழிலுறந்தக்பிரான்றியே
 யேகியதைத்தின்னக்கலாலிசைப்பாய்
 அப்பாசுசொல்லல்.
வண்ணயுள்ளமடமயிலுன்
 வாய்ப்பகட்டைப்பட்டுகிருப்றிவேன்-சொன்ன
மசலாவின்பொருளதுதான்
 வனத்துலாவும்வெட்டுக்கிளியலவோ
 மிகர்பான்சொல்லல்.
எட்டதிக்கும்போற்றுகின்ற
 எந்தலேயின்னமொன்றுகேளாய்-புவியில்
எல்லவர்க்குமடுத்திருக்கும்
 பிதுவேபகையாயிருக்குமிசைப்பாய்
 அப்பாசுசொல்லல்.
அன்னமேதானருளுவன்கேள்
 ஆலத்துள்ளஜீவாகிக்கெல்லாம்-உயி
ரடுத்திருக்குமதுபோல
 கரும்பகையாமவுத்தலவோமானே
 மிகர்பான்சொல்லல்.
மருத்தெனவோனமகிழ்ந்து
 உமுத்துகின்றமன்னவரோகேளாய்-உலகில்



மனிதரினிற்கேள்வியில்லா
 வாழ்சுவர்க்கம்புகுபவரார்சொல்வாய்
 அப்பாசுசொல்லல்.
அபத்தமில்லாமாதாசேயறியச்சொல்வே
 னவர்களைத்தானிப்போ-இறை
யருளியபோற்பிசகின்றி
 யஞ்சொகுத்துந்தொழுபவர்தான்மாதே
 மிகர்பான்சொல்லல்.
அஞ்சொகுத்துந்தொழுதிடுவோ
 ராமெனவேசொல்லியதோர்மன்னு-தினம்
அஞ்சொகுத்துந்தொழுதவர்க
 ளருமைகில்விழ்வதெவாருள்ளாய்
 அப்பாசுசொல்லல்.
வல்லியேகேட்கின்ற
 மார்க்கமதைச்சொல்கிறேன்கேளாந்து-ஒருத்தும்
வளமாகத்தொழுதுமற்ற
 மார்க்கத்தையும்அனுசரிப்போன்மாதே
 மிகர்பான்சொல்லல்.
பார்த்திபனேயின்னமொரு
 பகர்மசலாச்சொல்லுகின்றேன்பண்பாய்-புவியில்
பாவங்களைச்செய்தவர்கள்
 பகர்சுவர்க்கப்புகுவதென்னசொல்வாய்
 அப்பாசுசொல்லல்.
காளையகூர்தலியே
 கன்னியாகமுறியதோர்மசலாய்-பாரில்
கர்த்தனிடஞ்செஞ்சிராருங்
 கருத்தகுபாச்செய்தவரென்றறிவாய்
 பொது-சொச்சகம்.
செப்புமசலாவுக்கெல்லாஞ் சிரசன்பொருளுரைக்க
ஒப்புமிகர்பானுவென்பாள் உருகிமனஞ்சோர்ந்தயர்ந்து
இப்பமசலாச்சொல்லயேதும்வகையில்லாதால்
தப்புவந்துநேர்ந்ததெனத்தான்மயங்கியிருந்தனள்தான்
 இதுவுமது.
உள்ளுருத்தமாமாறன் னொளிபிழந்தகண்ணுள்
என்னைச்செக்கிலிட்டாட்டியிட்டதுபோல்வகைமறந்தாள்
தன்னிலிழக்சோர்ந்தனள்போற்றத்தளிந்துத்தனைமறந்தாள்
தென்னியகற்றுதியர்கள் தேற்றிநிற்பாராற்றிநிற்பார்

இதுவுமது-கட்டளைக்கலிப்பா.

தேற்றிநீச்செயப்பருவிமருஞ்
சேர்ந்தமந்திரிசூழ்சபையோர்கள்காம்
பார்த்திபன்பொருட்பன்பாயுரைத்திட
பகருவார்களிப்பார்தலிதுள.
நாற்றிசையையுமாண்டிடுமன்னரின்
நாயிடர்க்கிணையாகாடனென
போற்றிடக்கண்டவப்பாசுமன்னனும்
பொற்புறுஞ்சபையோர்க்குப்புகலுவான்

வசனம்.

அப்போதெப்படியென்றால் மிகர்பான்சொல்லு மசலாவுக்கெல்லாம் அப்பாசுராசன் பொருட்சொல்லக்கேட்டவள் இனிச்சொல்வதற்கு அவளிடத்தில் நாற்பதசலாவுக்கு மேலில்லாததால் இனிநா மென்னசெய்வோமென்று பெட்டவுங்கலங்கிச்சோர்ந்து துயாமுற்றிருக்கையில் நாங்கள்தேற்றிப்போற்றி யுபசாரனைசெய்கையில் வந்தக்கொலுமண்டபத்திலுள்ள அவள்தந்தை பருவிமராசனும்மந்திரி பண்டர்மன்னர்கள் முதலான சபையிலுள்ள அனைவரும் அப்பாசு மசலாவுக்குப்பொருளைவிடுவிக்கிற விபாங்களைப்பார்த்து இந்தமன்னனுக்குச்சரியான மன்னர்கள்-நான்குதிக்கிலும் எட்டுத்திசையிலும் பதினறுகோணத்திலு மிருக்கமாட்டார்களென்று வாழ்த்திப் போற்றிக்கொண்டிருக்கையில் அவர்களை அப்பாசுபார்த்துச்சொல்லுகிறவிதங்காண்க.

அப்பாசுசபையோர்க்குச்சொல்விருத்தம்.

சாந்தனிமிகர்பானுக்குந் தந்தையேசபையோர்களே
ஏந்திழைமூன்றுநாளா யிசைத்திட்டமசலாக்கெல்லாம்
பாந்தமாய்ப்பொருளதன்னைப் பகர்ந்தனன்கண்டீர்ப்போ
தீர்ந்திடுமசலாச்சொல்லே னதன்பொருளவள்சொல்வாளோ

வசனம்.

அதோகேளுங்கள் மிகர்பானுவுக்குந் தந்தையாகியமன்னரே மற்றுஞ் சபையிலுள்ளபேர்களே இந்தப்பெண்ணானவள் மூன்று நாளாய்ச்சொன்ன மசலாவுக்கெல்லாம் சோர்வில்லாமற்பொருட் சொல்லிவந்தேனல்லவா இனி நானொருமசலாச்சொல்லுகிறேன் அதற்குப்பொருட்சொல்வாளோ சொல்லுங்கள் மன்னர்முதலிய சபையோர்களே.

பொது-வெண்பா.

சொல்லாளோவென்றரசன் சூழ்சபையோர்காக்கேட்க
வல்லிதனக்கப்பர் வழுத்திட்டவ-நல்ல
தாகட்டுமென்று ளப்பாசுதன்மசலா
புகட்டுமென்றன் விளர்ந்து.



அப்பாசு மிகர்பானுக்குச்சொல்-கட்டுமசலாத்-தரு.]
இ-ம்-புந்நாகவராளி அடதாளம்
கண்ணிகள்.

வல்லமையாயென்னுடனேமசலாச்சொல்லுமாதே-இப்போ
வழுத்துகிறேனதன்பொருளின்வகையைச்சொல்லுவாயே
தொல்லுலகிலோராசன் சூழ்வினையினலே-யாந்தர]
சூழுநகர்தனையிழந்து துயராய்வரும்போது
போதுமன்னனிருவரோடு பெருவனத்தில்வருக-அங்கு
புகலுமவுத்தடுத்தநன்று புகல்வேனதல்லாமல்
ஆதாவாயிருவர்களை யகற்றிவிட்டேயரசன்-அப்போ
ஆரணியம்வாமவுத்து அங்கேயும்வந்தடுக்க
அடுத்திடுமவுத்ததனை அாசன்கண்டுபயந்து-தேடி
அம்மவுத்தைக்கிழித்துப்பாழின் அருங்கிணற்றிற்போட்டு
கடுமைப்பரியேறியவன் காட்டையெல்லாந்தாண்டி-பின்பு
கன்னியரோயிந்நகரில் கஷ்டநீங்கிவந்து
இன்னகரிலொருமவுத்து யேந்தலுக்குவந்து-நல்ல
எத்திசையேயிவுத்தப்பி யிருக்கின்றானிங்கே
அன்னமேமூன்றுமவுத்துமலனிவன்தானென்று-பொருள்
அறியச்சொல்வாய் சொல்லாவிடிலுனக்கேமணஞ்செய்வேன்

அப்பாசு மிகர்பானுக்குச்சொல்-விருத்தம்.

கோதையேகுயிலேமானே கொஞ்சியகிளியேதேனே
வாதையாலெந்தனேடு வழுத்தியமசலாவெல்லாம்
நீதமாய்ப்பொருட்சொன்னேன் நிகழ்த்திடுமசலாவுக்குந்
தானதும்பல்குமெய்க்கச் சாற்றுவாய்ப்பொருளைத்தானே

வசனம்.

அகோவாரு மிகர்பானென்னும்பெண்ணே - மூன்றுநாளாய் என்னோடு வாதுகூறி நூறுமசலாசொன்னாய் அதுகளுக்கெல்லாம் நான்பொருட்சொன்னேன் இப்போது நான்சொன்னமசலாவுக்கு உன்தந்தைமுதலியமந்திரிப்பிரதானி மற்றுஞ்சபையோர்களுக்குந் தெரியும்படியாய் அதனுடைய விபரங்களைச்சொல்லுவாயானால் நீயே வென்றவள் நான்தோற்றவன் - உன்மனப்போலென்னை என்னசெய்யவேணுமோ செய்துக்கொள்ளலாம் அப்படிப்பொருட் சொல்லாமற்போனால் இன்றைக்கே உன்னைக்கலியாணஞ்செய்வேன் ஆனபடியாலதன்பொருளைச்சொல்லுவாய்பெண்ணே சிரோமணியே.

பொது-கலித்துறை.

மாதுமுருகிமனமோருகி மசலாத்தனக்கு
நீதப்பொருளினைச் சொல்லுவதற்குநினைவுகெட்டு
எதுப்பொருள்சொலக் கூடாததாலின்றிராக்ஷித்து
விதப்பொருளை விடுத்துசொல்வேனென்றும்பினளே

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் மிகர்பானுக்கு அப்பாசமசலாச்சொல்ல அவள்பொருட்சொல்லத்தெரியாமல்மயங்கி அந்நேரமே சமாளித்துக்கொண்டு இதற்குப்பொருள் நாளைக்குச் சொல்லுவேன் அவரவர்கள்விடுதிக்குப்போய்வரலாமென்று நாதினன்குழயெழுந்து தன்னாண்மனைபோய்ச்சேர்ந்தாள் பின்பு நடக்கிறவிதங்காண்க.

பொது-விருத்தம்.

மங்கைதான்சென்றபின்பு மன்னவனப்பாசேத்திரன்
துங்கநற்பரியிலேறித் துரைமன்னரோங்கிச்சோர
மங்களக்கிழவிவீட்டில் மகிழ்வுடன்போயிருக்க
சிங்கனும்பகுவீரேந்திரன் சிரனுமிதனைச்செல்வான்

இதுவுமது.

மந்திரிதனையழைத்து மகிழ்வுடனப்பாசுக்குத்
தெந்தமாயமுதயானும் சொலுங்கனிவர்க்கமெல்லாம்
அந்தமாயளிப்பாயென்ன அதும்பாலேதாமெடுத்து
விந்தையாய்ப்பலருஞ்சூழ விரைவுடன்போயளித்தார்

இதுவுமது

அளித்திடுமன்னந்தன்னை யப்பாசுதின்றயிச்சம்
களிப்புடன்கிழவிக்கீய்ந்து கனமன்னவிருக்கும்போது
பழிக்கஞ்சாமிகருபானும் பகர்பொருள்தெரியாத்தாலே
செழித்திடுமோசன்பாவிற் சென்றுகேட்டறியவாராள்

வசனம்.

அகோதெப்படியென்றால் மிகர்பான் தன்னாண்மனைக்குப்போக பகுவீராசனும் மற்றயாவர்களும் அவரவர்மனைகளிற்போயிருக்க அப்பாசுபரியிலேறிக் கிழவிவீடுபோய்ச்சேர அவளைக்கண்டு துதிக்க அந்நேரம் பகுவீராஜன்மந்திரியையழைத்து அந்தப்புரத்திலிருந்து ஒஜீவனமுதலியகனிவர்க்கங்கள் தாம்பூலமுதலியகளபகஸ்தூரிகள்முதலியதுங்கொண்டுபோய் அப்பாசுக்குக் கொடுத்துவரச்சொல்ல அதுபோலேகொடுக்க அதைவாங்கிப்புசித்துக்கிழவிக்கும் கொடுக்க அவளுந்தின்றபின் கொலுவில்நடந்தசேதிகளைச்சொல்லிக் கொண்டிருக்கும்போது மிகிர்பானென்பவள் இவன்சொன்னமசலாவுக்குப் பொருள்தெரியாமல்மயங்கிஇதன்பொருள்அவனிடத்திற்போய்க்கேட்போமென்று அவள்மாறுவேடமாய் வருகிறவிதங்காண்க.



அப்பாஜியினிடத்தில்மிகர்பான்வருகிற-தரு.

இ-ம்-கரியாணி-தாளம்-ஆதி.

பல்லவி,

மாதுமிகர்பானும்வந்தாள்-மந்திரிமகள்போல் (மாது)

அநுபல்லவி

சோதிமுகமிலங்க-சொர்ணப்பணிதுலங்க
தோகைமயிலெனவே வேகமுடனடந்து (மாது)

சரணங்கள்.

சுரதாஞ்சிதபூஷணி-புகழும்பெற்ற
சுகமொழிமிர்துபாஷணி
விரதாம்பையைப்போலே வேடிக்கையாகவே
விந்தைத்தோழியொருத்தி-சந்திரவுதயம்போலே (மாது)
தாளப்பதக்கமாட-இருளதனில்
தான்வழிகண்டுவோட
இருவிழிகளும்வடிவேலைப்போலவேதுன்ன
வியப்புறுங்காமுக ரிருதயங்களும்பன்ன (மாது)
கொங்கைகுடங்குலுங்க-ஆடவர்களின்
குணமும்வேறாய்விலங்க
செங்கைவளையசையத் திகழன்னம்போலாடி
தேர்வேந்தனிருந்திடும் திருமனைதனைத்தேடி (மாது)

பொது-விருத்தம.

மந்திரிமகள்போல்வந்த மயிலெனுமிகர்பான் மின்னும்
சுந்தரமிகுந்ததாதித் துணையதாயொருத்திசெல்ல
வந்துமேகிழவிவீட்டு வாசலின்கதவைத்தட்ட
அந்தநற்கிழவியந்தக் கதவினைத்திறந்துகேட்பாள்

இதுவுமது,

பெண்களேநடுச்சாமத்திற் பிரியமாயெந்தன்வீட்டில்
கண்கள்போல்வந்தகாரியம் கருதிச்சொல்லென்றுகேட்க
வண்கணராஜனுன்றன் வளவினிலிருப்பதாலே
பண்பொடும்பார்க்கவந்தோம் பாவையேசொல்லுமென்றார்.

இதுவுமது,

அம்மையுமுடுகிச்சென்று அப்பாசுவரசைப்பார்த்து
பொம்மைகள்போலிரண்டு பொற்கொடிவந்தாரென்று
தன்மையாய்ச்சொல்லராஜன் தையலையழைக்கச்சொன்னான்
வம்மெனக்கிழவிசொல்ல வந்தனரிராஜன்முன்பில்

வசனம்.

அகோசெப்படியென்றால் மிகர்பானென்பவள் மந்திரிமகள் நடையாய் ஒருதாதியைக்கூட்டிக்கொண்டு கிழவிவீட்டில்வர கிழவிகண்டு அப்பாசுக்குச்சொல்ல அவரும் அவர்களை அழைத்து வரச்சொல்ல கிழவிகூட்டிவந்து முன்னேவிட அப்போது அரசன் பெண்களைப் பார்த்துக்கேட்கிறவிதங்காண்க.

அப்பாசும்மிகர்பானும்சொல் விருத்தம்.

அன்னமேநீங்களாரு! அர்த்தராத்திரியிற் றேடி
நன்னயமாகவந்தீர் நவிலுவீரென் றனக்கே
மன்னனேயில்லூராளு மகராஜன் மந்திரிபெற்ற
நன்னயமாதுவும்மை நாடியேவந்தேன்கோவே

வசனம்.

அகோவாரும்பெண்களே இந்தராத்திரியில் என்னைத்தேடிவந்த வேலையென்ன நீங்களார் இதுகளைவிபரமாய்ச்சொல்லும் பெண்களே,

மிகர்பான்-சொல்-வசனம்.

ஆனாற்கேளும் அரசரே-நான் இந்நகரத்தையாளும் பகுவீராசனுடைய மந்திரியின்மகள்-இவள் என்னுடையதாதி-நானுன்னிடத்தில் வந்ததுநாமிருவருந்தனித்து சிலவார்த்தைகளாடவேண்டியிருக்கிறது அதனாலே யாருக்குந்தெரியாமலிந்த இரவில்வந்தோம் ராஜராஜர் துதிக்கும்படியானமன்னவரே.

பொது-இசை.

இருவருமாகத்தனித்து மியல்வார்த்தைதப்பேசவென்ன
அருங்கிழவிதாதியரும் அந்தப்புறம்போயிருக்க
கருங்குழலாள்மிகர்பானைக் காவலனுமங்கோம்
ஒருமையதாயருகிருந்து மொருவசனஞ்சொல்வானே

வசனம்.

அகோதெப்படியென்றால் இராஜனும் மிகர்பானுவும் ஒன்றுக்கொன்று இரகசியம்பேசவேண்டுமென்றுசொல்கையில் அம்மையார்கிழவியுந் தாதியும் இவர்களிருக்கும் அறையைவிட்டு பிரத்தியேகமா யோராயிற்போயிருக்க பகுவீராசன்மகளைப்பார்த்து அப்பாசு சொல்லுகிறவிதங்காண்க.

அப்பாசுக்கும் மிகர்பானுக்கும் தர்க்ககண்ணிகள்.

இ-ப்-ஏ துகுலகாமபோதி-ஆதிதாளம்.

அப்பாசுசொல்லல்.

பருவாதியேமானே பச்சைக்கிளியேதேனே
அருகினில்வந்ததென்ன அறியச்சொல்லுவாய்முன்னே

மிகர்பான்சொல்லல்.

பகல்மிகர்பானுக்குப் பகர்ந்தமசலாப்பொருள்
பகர்ந்தாலுன்மனம்போலே பணிந்துகேட்பேன்பின்றாலே

அப்பாசுசொல்லல்.

கருவிழிமாதரசே காதலானேனிப்போது
மருவியென்னையணைந்தால் மசலாப்பொருளைச்சொல்வேன்

மிகர்பான்சொல்லல்.

காதலாய்நீருரைத்த கனமசலாவின்பொருள்
நீதமாய்ச்சொன்னபின்பின் நேசமாய்ச்சேரலாமே

அப்பாசுசொல்லல்.

ஐயமேனென்னைச்சேர அரிவையேபருவமாதே
கையாலணைந்துசேர்ந்தால் கழறுவேன்பொருளதனை



மிகர்பான்சொல்லல்.

உரைத்தசொல்லினில்வண்டார் குழம்போபோம்போவென்றவு
துரைத்தனமன்றுப்பயன் சொல்லுவீரென்றனுக்கு

அப்பாசுசொல்லல்.

வீரர்தன்னையும்விழியால்மிரட்டியேவெல்லுமாதே
ஆரம்பூண்டதனதநிலணைத்திடுவாய்மானே

மிகர்பான்சொல்லல்.

அடியாள்வந்தகாரியமனுகூலமாயிற்றென்றால்
விடியுமட்டுநீர்சொன்னவேலையைக்கேட்பேன்மன்னா

அப்பாசுசொல்லல்.

வேலைப்பழித்தவிழி மெல்லியேயிடையழகி
சோலைக்கிளியேசேர்ந்தாற் சொல்வேன்பொருட்பின்னாலே

மிகர்பான்-சொல்லல்.

மையல்கொண்டுநீர்தமசலாப்பொருட்சொல்லாமல்
கையாலணைந்துசேரக் கருதுகிறீர்சரியோ

அப்பாசுசொல்லல்.

காமியுனைநான்வேண்டிக் கலந்தணையவழைத்தேன்
தாமசமில்லாமற்சேர்ந்தாற் சாற்றுவேன்பொருளதனை

மிகர்பான்சொல்லல்.

நிகரில்லாவரசனே நிகழ்த்துமசலாப்பொருள்
வகையென்னவென்றுகேட்டால் மயங்குகிறீர்போம்போம்போம்

அப்பாசுமிகர்பானுக்குச்சொல்விருத்தம்.

பொருள்தனைக்கேட்டாயென்றன் புத்திபுத்திசபலமாக
இருக்கிறதாலேயிப்போ திப்படியும் வாய்வராது
உருகுதேமனதும்பொல்லா வுருவிலியெய்யும்பால்
கருணையோடென்னைச்சேர்ந்தாற் கழறுவேன்பொருளைத்தானே.

வசனம்.

கேளாய்மந்திரிமகளாகியபெண்ணே என்னை நீ பொருட்கேட்பது சரியே இப்போது உன்மேற்கொண்ட மோகத்தினாலேன்புத்திசரியாயிருக்கவில்லை சொல்லுகிறதற்கும்வாய்வராது இப்போதுமன் மதனெய்யும் அம்பால்மெலிந்து வாடுமென்னைக்கூடிக் குலாவினால் அதற்குப்பின்னால் நான்பொருளைச்சொல்லுகிறேன்மாதரசே.

அப்பாசுக்கு - மிகர்பான்சொல்-கொச்சகம்.

புத்திசபலமென்றே புகலுகின்றமன்னவரே
பத்திவந்தேனும்மிடத்திற் பண்பாயிருக்கவெந்தன்
சித்தமகிழ்ந்திட நீர் செப்புமசலாப்பொருளை
நத்துமென்றனைநினைத்தால் நானுன்மனம்போல்நடப்பேன்

வசனம்,

அகோகேளும்அரசர்சிகாமணியே இந்தயிரவில் நானும்மைத்தேடிவந்து உமதருகிலிருக்க நானெப்படித்தங்களை வஞ்சித்துப்போய்விடுவேன் நான் நாடிவந்தபிரகாரம் நீர்மிகர்பானிடத்திற் சொன்னமசலாவு

க்கு முன்னிட்டுப்பொருட்சொல்வீராகில் பின்னாலுன்மனம்போலே நடந்துக்கொள்ளக்காத்திருக்கிறேன் மன்னர்கோவே.

அப்பாசுக்கும்-மிகர்பானுக்கும்-தர்க்கத்தரு-கண்ணிகள்.

இ-ம்-ஆரபி-ஆதிதாளம்.

என்னடிமந்திரிமகளினும்பெண்ணே நீ
என்னருகிற்சற்றேவாடி-வந்து
இசைந்துகனிவாயிதழ்த்தாடி.

மிகர்பான்சொல்லல்.

மன்னனேநின்மசலாப்பொருளுரைத்தபின்
மருவிமுத்தாடுவோம்நாமும்-என்னைச்
சருவியணைந்திடுவீர்நாமும்

அப்பாசுசொல்லல்.

மருவிமுத்தாடிய பிறகுமசலாப்பொருள்
வகையுடன் சொல்லுவேன்பெண்ணே-கூடி
மனமகிழச்செய்வாய்கண்ணே

மிகர்பான்சொல்லல்.

அனையேயுந்தன்மசலாப்பொருளையுரைத்தபின்
சுகித்துவிளையாடுவோமன்றோ-நான்
சொல்வதைக்கேளுமினிப்பன்றோ.

அப்பாசுசொல்லல்.

சுகமொழியேநானுஞ்சொன்னமசலாப்பொருள்
சொல்லக்கூடாதடிதேனே-ஆர்க்குந்
தெரியக்கூடாதமானே

மிகர்பான்சொல்லல்.

பகருமசலாப்பொருள் பண்பாயுரைத்தன்பின்
பாகமருவுவோம்சம்பன்றோ-கூடிப்
பாடியேசேருவோமன்றோ

அப்பாசுசொல்லல்.

பண்புள்ளகொவ்வையிதழ முதத்தைமுன்றந்தால
ட்கருவன்பொருளதைநானே-அடி
பருவமிலகுஞ்செந்தேனே

மிகர்பான்சொல்லல்,

இன்பமசலாப்பொருளிசைத்தபின்னென்னிட
இதழமுதத்தைத்தருவேனே-மகிழ்ந்து
இருவருஞ்சேரலாந்தானே

பொது-விருத்தம்.

பூவையாளரசன்றன்னை புகற்பொருள்தனையுரைத்தால்
ஆவலாய்ப்பின்புசேர்வே னென்றவளறைந்ததாலே
மேவியேயவனைநாமும் விருப்பமாயணைவோமென்று
தாவியமசலாத்தன்னைத் தைலர்க்குரைப்பதானான்



வசனம்.

அகோதெப்படியென்றால் அப்பாசுமன்னனும்மிகர்பானும் ஒன்றுக்கொன்று தர்க்கஞ்செய்து கடைசியில் மசலாவுக்குப்பொருட் சொன்னாற்றான் சேருவேனென்றவள்சொல்ல அதற்கிராஜன் நாம்பொருளைவிடுவித்தால் தான் நம்துமனம்போலே நடப்பாளென்று இவர்சொன்ன மசலாவுக்குப் பொருட்சொல்லுகிறவிதங்காண்க.

அப்பாசுமசலாவுக்குப்பொருள்சொல்கிற-கண்ணிகள்

இ-ம்-பைரவி-ஆதிதாளம்.

சொல்லுமசலாப்பொருள் சொல்கிறேன்கேள்பெண்ணே
நல்லவென்றாய்தகப்பன் நானும்வென்னானைவிட்டு
பல்லும்வாயுமுலர்ந்து பாலவனம்வருகும்போது
கல்விசெல்னகாவிவிடாகிக் கனமூர்ச்சைசாயாய்விழுந்து
உள்ளமறுகலங்கி வுணவொன்றுமில்லாதாலே
விளனுமவுத்தெனவே மெல்லியர்க்குத்தானுரைத்தேன்
அதன்பின்றெளிவுவந்து அடுத்தநகாஞ்சேர்ந்து
முதிர்தந்தைதாயைவைத்து முடுகியொருவனத்தின்
பாதையினில்வரும்போது பகர்மண்டபத்திருக்க
காதகனொருசேவகன் கடுகவேவந்திருக்க
காத்துமழையவஸ்தையால் கவுட்டினைக்காணுகால்
பார்த்ததிலொருபையினில் பாழ்கடிதமிருக்கக்கண்டு
எடுத்துஅதைப்பிரித்து வெழிலாயதைவாசிக்கையில்
கடுங்கொலைசெய்யவென்று-கடிதமொருமவுத்து
அந்தக்கடிதந்தன்னை யருங்கிணற்றிற்கிழித்துப்போட்டு
இந்நகரில்வந்து யிருந்துவிடிந்தபின்பு
மாதுமிகர்பாளிடம் மயலாகநான்செல்ல
பேதைசொல்மசலாவுக்கு பேணும்பொருள்சொல்லாவிட்டால்
அன்னோரமேகொல்வாளல்லோ அதுவேயொருமவுத்து
என்னியிதனையெல்லா மெடுத்துமசலாச்சொன்னேன்
ஆகமூன்றுமவுத்து மடுத்ததெனக்கானதால்
பாகுசேர்மொழியாளுக்குப் பகர்ந்தேன்மசலாவாக
எந்தன்மனமுருக என்னிடத்தில்வந்தமாதே
உந்தன்மனதில்வைத்து வுகப்பாகயென்னைச்சேர்வாய்

மிகர்பான்சொல்-கட்டளைக்கலிப்பா.

மன்னமன்னவர்போற்றிடுமன்னனே
வழுத்திடும்நீமசலாவுக்குப்பொருள்
கன்னியாமிகர்பானெனுமாதுமே
கருதியேபொருள்தானைத்தச்சொல்வளோ
இன்னிலத்திலெவர்களுஞ்சொல்விரோ
யேத்தலேநீருங்கற்றவுபாயம்போல்

பின்னேவாலுமக்கொன் றிருந்தாலிப்போ
பேசியேனரியோமிங்கிப்சேர்வீரோ

வசனம்.

கேளும் இராஜகோவே இப்போது நீ பொருட்சொன்ன மசலாவுக்கு இன்னகர் புகுவீரராஜனுமையமகள் பொருட்சொல்மாட்டாளெனக்கேட்கவிருள்ளவர்களும் இதற்குப்பொருட்சொல்லவுமாட்டார்கள் இப்பேர்க்கொத்த உபாயதந்திரமும் தெரியமாட்டாது ஆகையால் நீரொம்பவுபாயமாறவா ஆனாலுமக்கு ஒருகுறைவிருக்கிறது அதுவென்னவென்றால் உமக்கு வாயுமுமைத்திருந்தால் நரியோடேசேர்ந்துக் கொள்வீர் இதுதான்குறைவுமக்குராஜனே.

பொது-விருத்தம்.

இப்படியவளுஞ்சொல்ல வேந்தனுமிதுகேட்டான்
செப்பமாயவளுஞ்சென்று சேயிழைதனக்குச்சொன்னால்
ஒப்பிடப்பொருள்விடுத்து வுடனேமனைக்கொள்வாளென்று
சர்ப்பம்போலொடுக்கிதகத்தையலாளிதுகேட்டாள்

இதுவுமது-கொச்சகம்.

மன்னன்சலித்து மயங்கியிருக்கிறதைக்
கன்னிமிகர்பான்கண்டு காவலனைப்பார்த்துச்சொல்வான்
சின்னசலபாதைக்கிப்போய் சீக்கிரம்போய்வாரேனென்றான்
அன்னதைக்கேட்டப்பாசும் அரிவையைப்பார்த்திதுரைப்பான்

வசனம்.

அகோதிப்படியென்றால் அப்பாசுராம்சொன்ன மசலாவுக்குப் பொருள்சொன்னேனே அந்த இவள்போய்மிகர்பானுக்குச் சொல்வாளானால் அவள் அதைவிடுவித்து நமைமக்கொல்வாளேயென்று விசாரமாயிருக்கும்போது மிகர்பானென்பவள் நாம் இவனைவிட்டு நீங்கிப்போக இதுதான் தருணமென்றெண்ணி அரசனைப்பார்த்து நான் சின்னஜலவாதைக்குப்போய் வருகிறேனென்றுசொல்ல இவருக்குச்சந்தேகமுண்டாகிச் சொல்லுகிறவிதங்காண்க.

அப்பாசுக்கும்-மிகர்பானுக்கும்-தர்க்கரூ.

இ-ம்-எ துருகாம்போதி-ரூபகதாளம்.

அப்பாசுசொல்லல்.

அன்னமேபெண்ணரசே அரிவையரோயிப்போ
அவசரமாய்ச்சிறுநீர்க்குப்போய் அழகாய்வாரமென்றாய்
என்னமொழியென்றனுடன் யெடுத்துரைத்தாய்மாதே
இதுவெனக்குச்சமுசயமா யிருக்குதேயிப்போதே

மிகர்பான்சொல்லல்.

சமுசயமாயிருக்குதென் றீர் தரணியாளுமரசே
தங்கப்பணியாவற்றையுந்தான் கழட்டித்தாரேன்
அமிசையதாய்வாங்கிக்கொண்டு அழகாகயிருந்தால்
அரைநிமிஷநேரமதில் அடியாளும்போய்வாரேன்



அப்பாசுசொல்லல்.

வாரேனென்றுசொல்பெண்ணேயுன் வார்த்தையைநம்பலாமோ
வுரித்துகட்டும்சேலையின் முந்தாணியிலோர்தலப்பை
நேராகவென்றன்கையில் நீகொடுத்துச்சென்று
நிமிஷத்திலக்கிருந்து நேரிழையேவருவாய்

மிகர்பான்சொல்லல்.

கொற்றவனேவரச்சொன்னீர் சேராதேனை...
கொள்கையுடன்போய்வாரேன் குறைகளென்னவேண்டாம்
சித்தமது அறிந்திடும்பின் தெரிந்திடுமென்சேதி
திறமுள்ளமன்னவனே சிரயிருப்பீரோ

பொது-விருத்தம்.

பொற்பணிகொலுசதன்னுடை புடவையோர்தலப்புதன்னை
அப்பாசுகையிலீந்து அரிவையோர்பக்கஞ்சென்று
ஒப்புசீலையினிறபா இஉசிதமாய்க்கிழித்துப்பின்பு
தப்பவோர்துணிற்கட்டித் தையலாள்வெளியில்வந்தாள்

இதுவுமது-கலித்துறை.

வெளியினிற்போய்விட மெல்லியிற்றுநிவிதமறிந்து
ஓ…ஏழுங்கண்டத்து வந்திடக்கூட்டிநன்மனைபுகுந்தார்
வழிபார்த்திருக்குமன் மன்னனப்பாசுவரக்காணேமென்று
பழிகாரியுந்தப்பிப் போயினளோவென்றுபதறுவனே

வசனம்.

அகோதப்படியாக... மிகர்பானென்பவள் அணிந்திருந்த தண்டைகொலுசு ஆபரணமுதலியதுகளை யெல்லாங்கழட்டிக்கொடுத்து தானுடுத்தியிருந்தபுடவையி லொருமுந்தாணியையுமுத்திமேல் முந்தாணியை அரசன்கையிற்கொடுத்துவிட்டு சின்னசலவாதைக்குக் கொல்லைக்குவருகிற பாவனையாய் மறைவில்வந்து பாதிப்புடவையைக்கிழித்து துணிற்கட்டிவிட்டு கிழவிவீட்டைவிட்டு வெளியில்வர அதையறிந்தகாதியும் வெளியில்வர இருவருஞ்மொன்றுய அரண்மனைபோய்ச்சேர்ந்து மகிழ்ச்சியாயிருக்க இங்கே அகம்மதுசாமகன் கொல்லைக்குப்போனவள் வரக்காணேமென்று பிரலாபித்துப் புலம்புகிறவிதங்காண்க.

அப்பாசுபுலம்பல்-தரு-இ-ம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்.

பல்லவி.

எங்கேபோனளோ-மந்திரிமகள்-எங்கேபோனளோ

அநுபல்லவி.

தொங்கர்மிகர்பானென்று மங்கைக்குநான்சொன்ன
சங்கமசலாப்பொருள் தன்னைக்கேட்டமாத்தி
ரம் (எங்)

சரணங்கள்.

மதிமுகவதிகாத்தாள்-என் முன்வந்து
  மயக்கியசுகிகாத்தாள்
சதிசெய்துயேமாற்றியே-வாரோனென்று
  சற்பனைசெய்துப்போற்றியே
பொறுவாயிருந்தவேந்தன் புலம்மையாயேப்போ
சதிகாரிபோனவழி-எதுவுந்தெரிந்திலேயே (எங்)

வாசமற்பெண்ணுளே-மந்திரிமகள்
  வளர்கன்னமொழியாளே
பாசமுள்ளவன்தானே-போனதைக்கண்டு
  பதைக்கிறேனுன்தானே
ஆசைகொண்டவனுக்கு-ரோஷமில்லையென்று
மோசஞ்செய்தென்னையிந்தவேஷஞ்செய்தபாதகி (எங்)

நிராதமோகமூட்டி-வந்துயென்னைச்
  சேர்வேனென்றதீமாட்டி
வாரோனென்றேயுரைத்தே-போனவள்
  வாராமலந்தாத்தே
ஆராதிதையைவைத்து நீருகீருக்கியென்னை
பாராமலோர்வசனம் கூறுமலென்னைவிட்டு (எங்)

பொது-விருத்தம்.

புலம்பியபரிசு ............ சொல்வான்
தலமதிலெவருமிந்த ............ போற்சதிசெய்வாரோ
கொலையதுசெயவாளிந்த வனிதையைமுகம்பேசி
விலைமையுமனதிலென்னி நேசமாயுருகுவானே

வசனம்.

அகோ தெய்படியெஞ்ஞல் மிகர்பான் போனவுடன் அப்பாசு மன்னன்ரொம்பவும்புலம்பிசொல்லுவான் இப்பேர்ப்பட்டவள் தானே நம்மைக்கொலைசெய்வாள் ஆனாலவளுடைய அழகுசவுந்தரிய மும்பேசுஞ்சாதுரியவார்த்தைகளையுமெண்ணியுருகிக்கொண்டிருக் கிறவிதங்காண்க.

அப்பாசுசொல்-தரு-இ-ம-புந்நாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

சொருகுகொண்டையழகி-போனதா
இருக்குதுருகுதிளகி

அநுபல்லவி.

சருவிமனையை மெல்சரசவார்த்தைகள்பேசி
மருவவாரோனென்றுமா தாமுடிந்தமலர்ச் (சொ)



சரணங்கள்.

சரிகைச்சேலை யுடையும்-மயிலின்
  சாயுதன்ன நடையும்
உருவினரம்பைத் துடையும்-வசயில்
  ஒருபிடிக்கு இடையும்
மருவவேனென்றென்னை மயக்கிப்பொருளைக்கேட்டு
வஞ்சித்துப்போனதென்ன வஞ்சமோசொல்லடி (சொ)

நேத்திரான பெண்ணே-நீசொன்ன
  வார்த்தைதப்பிருயி கண்ணே
பார்த்துவந்து தன்னே-எனக்கு
  பரித்தாந்திரவை பண்ணே
புத்தமாமலர்மேற் சேர்த்துக்கைபாகவைத்து
பார்த்துப்பார்த்துநிற்கும் கோர்த்துமுடித்தமலர்ச் (சொ)

வஞ்சியான பாவி-உன்மேல்
  வைத்தேனேமனமோகி
கொஞ்சிக்கொஞ்சிக் கூவி-மோகஞ்
  செய்த்தமனதை நீவி
நெஞ்சில்விரகதாபம் பஞ்சின்தீப்போற்பிடிக்கு
தெஞ்செய்வேனடி பஞ்சமாபாதகி (சொ)

மந்திரிமக ளென்று-எனக்குநீ
  வஞ்சகஞ்செய் நின்று
விந்தைப்பருவி மன்று-பெற்ற
  மிகர்பானமா கென்று
எந்தனுடல்சொல்லாயல் சித்தைசோரமோத்தி
தந்திரமாய்ப்போன தையலேயுனையறிவேன் (சொ)

பொது-கட்டளைக்கலிப்பா.

அந்தகம்மதாசாய்புவருளிய அப்பாசென்னுமரசனியம்புவான், இந்த மாதரைக்கொலைசெய்குவாளென்றுயென்னியேயேங்கியிருக்கையில் தந்திரமதாய்ப்போனமிகருபானுக்குதன்மனையினிற்றுளே இப்போய்நின்று, எந்தன்கையிலகப்பட்டாளென் றிருக்கையி லெழுந்தனன்பாருவும்.

இதுவுமது-விருத்தம்

விடிந்ததின்பருவிகோர்ந்தவெகுசனமந்திரிபோமேம்
அடர்ந்ததோர்கொலுவிற்சேர்ந்து அவர்களுமிருக்கும்போது
சரிதையிற்புரவியேறிச் சையாபிகப்பாசசெல்ல
படையில்வாராதாக்சையபேர் மன்னவருஞ்சொல்வார்

இதுவுமது-விருத்தம்.

தேற்றதான்மன்னன்சொன்ன நேர்மசலாவையுமங்கை
சாற்றிடத்தெரியாதாலே தயங்கியேபோனமாது
தோற்றிவாளென்றெண்ணித் தோகைக்குச்சொலி யனுப்ப
நாற்றிசையோருமெய்க்கும் நளிர்மிகர்பானும்வந்தாள்.

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் அப்பாசு சொல்லுவார் வந்து எமாற்றிப்போனவன் மந்திரிமாவல்ல பருவீர ராஜன்மகளாகிய மிகர்பானுகத்தானிருக்கவேண்டும் ஆனபடியால் மசலாவுக்குப்பொருளைக் கேட்டுக்கொண்டுபோய்விட்டான் விடிந்த பின் எப்படியும் நம்மைக்கொலை செய்வான்போலிருக்குதென்று மயங்கியிருக்கையில் அவள்தம்பிடகையில் அரசன்வசமாய்கப்பட்டான் நாமெந்தவிதத்திலு மவனைவெல்லவேண்டு மென்று சொல்லித்திருக்கையில் சூரியனுமுதயமானான்பருவீராசனும் மந்திரிகளுங்கொலுக்கூடியிருக்கையில் அகம்மதுசாவுகனும் பரிசேறிச்சபையில்வந்துசேர மிகர்பான் வரதகினாலே சபையிலுள்ள யாவர்களுக்கும் மன்னன்சொன்னமசலாவுக்கு மங்கை பொருள்சொல்லத் தெரியாதனால் அவள்தோற்பாள்போலிருக்குதென்று ஒருதாதியையனுப்பி அழைத்துவரச்சொல்ல அவள்வருகிற விதங்காண்க.

மிகர்பான்வருகிறதரு-இ-ய-நசாவந்தி-அடதாளம்.

பல்லவி.

மாதுமிகர்பானும்வந்தாள் இச்சபைக்கேவென்று (மாது)

அநுபல்லவி.

பாதச்சிலம்புகொஞ்ச பணிகள்துலங்கிமிஞ்ச
ஆதவன்மயங்கித்துஞ்ச அச்சபையுள்ளோருமஞ்ச
திணுதஜெந்தரிதாம் -தணுகஜெந்தரிகிம் - ததிங்கத்தகததிங்கத்திக தாம்தணுஜணுத - கிடிதகிடதக - திம்தணுதஜெணு ஜெரிகிலாஞ்வென்று (மா)

சரணங்கள்.

சிவிகையிற்தக் கொண்டையும்-கயத்திலகளர்
செறிந்திடுஞ்சேரும் கெண்டையும்
தாவியாம்பைத் தண்டையும்-கதிர்த்தவுடைத்
தனிமிர்துவான தொண்டையும்
கூவுங்குயில்போல் நல்ல
குறித்தபொருளைச் சொல்ல
தாவுத்திவாயுட் செல்ல
தனிவேந்தனையும் வெல்ல

---



திருதக்குதகு-தொருகதொருக்குக்கி துணுகுண ஜெதுகிடம்மாகிடகி தாய்யரிபததாக்குதரிகிடக்கிதகிடதிமிதக (மா)

பொது-வசனம்.

மன்னன்பருவீரசர் மந்திரிமாருடனிருக்க
தன்னையனுப்பாஜெகிரில் நாட்டுமதிவார்மிகுவாளே
கன்னியருங்கலந்திருக்க காவலனப்பாசவைப்பான்
என்மசலாப்பொருள்சொல்ல வேந்திரமுயுஞ்சொல்லாளே

அப்பாசும்-மிகர்பானுஞ்சொல்-தர்க்கத்தரு

இ-ம-தோடி-சாப்புதாளம்.

அப்பாசு.

மன்னர்மன்னனாலெல்லாமகைநற்தமயிதுவோ
முன்னேநான்சொன்னவைத்து மூன்றுக்கும்பொருளென்னாயாய்

மிகர்பான்.

உனக்கவேனிந்தவேலை யுறுதியாய்க்கேளாதே
வரிசையுடன்சொல்லுவேனீர் வந்ததைச்சொல்லீரே

அப்பாசு.

வந்ததைக்கேளொருருவி வமயிருட்டிலென்முன்
எந்தன்மீதிலாசைவைத்து யினைத்துவாப்பிடித்தேன்

மிகர்பான்.

பிடித்தவனென்பேசுகிறீர் போரசேயிப்போ
அடித்தவாயைத்துடைத்தாப்போலருள்வதென்னசொல்வீர்.

அப்பாசு.

சொல்வதென்ன அதனுடைய தோசன்றுங்காதும்வாலும்
நல்லாயென்றன்காத்திருக்க நழுவித்தப்பிப்போச்சே

மிகர்பான்.

போச்சதென்றுசொல்லுகிறீர் புதுமையாச்சரியந்தான்
காட்சிதாயிமவத்தின்பொருள் கழறுகிறேன்கேளீர்

அப்பாசு.

கழறுகிறேனென்றுசொன்ன காரிகையேயிப்போ
வள்ளையப்பணியாவத்தையும் வைத்திடுவேன் சபையில்

மிகர்பான்.

வைத்திடுவேனென்றுசொன்ன மன்னவரோருரும்
சித்தமகிலென்றும் சிறிச்சொல்லவாமே

பொது-வசனம்.

பொன்னையுந்துகில்தனைப்போர்வேந்தனிடம் கொடுத்ததினும்
இன்னமதாயிவ்வார்த்தைச் செப்புகிறுவினிதமை

தல் ஞாசபையினிற்சொன்னுந்தகைப்பாரெல்லோருமென
வல்லமயிலினையான் வாயிழந்துகலையிழந்தான்

வசனம்.

அகோதெப்படியென்றால் மிகர்பானவன் இராத்திரி அப்பாசியினிடத்திற்குப்போய் சபைமுதலிய துகிலையுங் கொடுத்து வந்ததை அரசன் அதையே ஒருமதியாய்ப் பிடித்து உவதுகபடமாக்கத்தைச் சபையிற்சொல்லிப் பொருளையும் வெளிப்படுத்துகிறதாய்ச்சொல்ல இவன்கேட்டு இனிநமது பவிஷைக் கெடுத்துவிடுவாரென்று பயந்துச் சோர்ந்து இராசனைப்பார்த்துச் சொல்லுகிறவிதங்காண்க.

மிகர்பான்-அப்பாசுக்குச்சொல்-விருத்தம்.

தனித்திருமுலகையாண்ட தராபதியேகம்பேனாத்
துணித்துநான்மேசல [illegible] சொல்லித்துலங்கிவயிருந்தேனிரும்
கனமசலாவால்வென்றீர் [illegible] கோற்றேன்
மனத்தினினைத்தவண்ண மன்னனேமுழு [illegible] கொள்வீர்

வசனம்.

கேளும் ராஜாஜர்களெல்லாந்துதிக்கும்படியான மன்னர்கோவே நான் இந்தரன்வரைக்கும் என்சாமர்த்தியத்தினாலே மசலாக்களைச்சொல்ல வளவிறந்தராஜாக்களைச் சிரச்சேதஞ்செய்து கர்ப்பக்குழிவுவாயிருந்தேன் இப்போதுநீர் வந்து எனது மசலாவுக்கெல்லாம் பொருட்சொல்லிப் பின்பொருமசலா நீர்சொல்ல அதைவிடுவிக்க எனக்குத் தெரியாததால் நீரே வெலித்தீர் நானேதோற்றேன் இனிஉமதுடனர்போலே என்பிரதிக்கினைப்பிரகாரம் மணமுடித்துக்கொள்ளலாம் ராஜசிரோமணியே.

அப்பாசும்-மிகர்பானுஞ்சொல்-விருத்தம்.

நல்லநுதல்பெண்ணேநானுன் னாட்டம்போல்நடப்பேனிதான்
சொல்லிமிம்வார்த்தைபோல் தோகையேமணஞ்செய்வேனே
வல்லபநானுமென்றன் வளரரண்மனைக்குப்போறேன்
மெல்லவென்றந்தையோடு மேன்மையாய்ப்பேசுவீரே

வசனம்.

ஆனாற்கேளாய் மிகர்பானென்னும்பெண்ணே-இனிநான் உன்மனம்போலே நடந்துக்கொள்ளுகிறேன்-நீசொல்லுகிற பிரகாரஞ்செய்பக்காத்துக்கொண்டிருக்கிறேன்பெண்ணே.

மிகர்பான்வசனம்.

ஆனாற்கேளும் அரசசிகாமணியே இனிநான் அந்தப்புரத்திற்குப்போய்ச்சேருகிறேன் என்தந்தையிடத்திலிருந்து ஒன்றுக்கொன்றுகலந்தும்பின் அவர்மனம்போலே முடித்துக்கொள்ளும் சிரோமணியாகியமன்னவரே.



பொது-கட்டளைக்கலிப்பா.

அதிவுசேர்ந்திடுமப்பாசுமன்னனும்
அந்தநற்பருவிசிடஞ்சென்றிட
பிரியமாகத்தழுவிப்பின்போற்றியே
பெட்புறுஞ்சபையோர்களும்வாழ்த்திடவ
வரிசையாகமணக்கோலஞ்செய்திட
மன்னவன்சொற்படிமுரசறைபவன்
செறியுஞ்சனநகர்ப்பறைசாற்றிட
சேர்ந்தரண்மனைமேவினன்மிகருபான்

வசனம்.

அகோதெப்படியென்றால் அகம்மதுசாகுமாரன் அப்பாசுமன்னன் பருவீராசன் அருகிற்போக அவன் [illegible] தழுவி மெய்புவும்போற்றி சிம்மாதனத்திலிருத்தி [illegible] அங்குள்ள மந்திரிபிரதானி மற்றுந்தேசதேச [illegible] முதலியயாவரும்வாழ்த்தித்துதித் [illegible] வேர்கள் ஒப்பாக்கள் அப்பாசுக்கும்மிகர்பானுக்கும் நிகாவென்று மணமுடிக்க நாட்குறித்து அரண்மனைமுதலிய சிங்காரமுழுமையும் சிக்காரஞ்செய்யும்படியாயும்மற்றவர்களுக்குந்தெரியும்படியாயும் முரசடிப்போனுக்குப் பருவீராசன்சொல்ல அதுபோலே அவன் பறைசாற்றுகிறவிதங்காண்க.

மணமுரசடிக்கிற-தரு-துஜாவந்தி-சாப்புதாளம்.

மணமுரசடியென்னுண்பறைசாற்றுவோர்
வந்தனர்-சிலர்-முந்தவே-வந்து
இணரத்னத்தாலேநிம்பலதொத்தக்கால்கொய்பு
இருந்தத[illegible]-ரணி-பொருத்தினர்
வச்சிரத்தாலேநிம்பச்சைசாக்கத்தை
மருவினர்-சொருவினர்-நல்ல
அச்சிலேவார்த்தாப்போலிச்சையாகியேசெல்ல
அமர்த்தினர்-பந்த-லுயர்த்தினர்
மன்னவர்கள்வந்து உன்னதத்தைக்கண்டு
மகிழ்ந்தன-ரவர்கள்-புகழ்ந்தனர்-இந்த
மன்னவர்களிருக்கதன்மாடகூடங்கள்
அமைத்தனர்-மேடை-சமைத்தனர்
வர்ணமட்டோங்கிடஆனைமேல்மணமுர
சேற்றினர்-அணி-சாற்றினர்-இப்போ
மானமுடனேவந்தாற்நீனிதுபார்த்தவரோ
வருகுவீர்-மொழி-தருகுவீர்
வங்காளதேசத்தாசிங்களநாட்டோடே
வருகுவீ-ருவா-தருகுவீர்.௨..

மங்களமங்களம்மங்களமுடிக்கிறார்
வாருங்கள்-வந்து-பாருங்கள்
வகைவகைவிபரமாய்செகமெங்குமறியவே
மாட்டினார்-மொழி-கேட்டினார்
தெய்தாதிமெனவெகுவகைவேசமாமலர்
தாவினார்-வந்து-மேவினார்
மாடத்திலும் புகுகூடங்களெங்கனும்
வந்தனர்-பந்த-லெங்கெங்கும்-அப்போ
கோடாப்புசீனமாள்-நாடாப்புகொற்றவர்க்
கோதினார்-பல-சேதியும்

பொது-விருத்தம்.

பறைசாற்றக்கேட்டகருள்ளோர்கேட்டு
பரிந்துமகிழ்ந்தே...க்கள்மாட்கூடம்
சரியனவேபந்தல்தோர...
தனிமலைரத்துக்கிசித்ரந்தானமைத்து
அரண்மனையில்மணவறையுமழகாச்செய்து
அதற்குரியகுலோப்புலவர்களுந்...
திரைநிறைவாய்ச்செய்திருக்கும்வையகத்தை
கோப்புவிரமைச்சருக்குறிசழ்த்துவாரே

வசனம்.

அகோதெப்படியென்றால் இந்தப்பிரகாரம் சீனநகரத்திலுள்ள தெருவீதிகள்முதலானமேல் மாடகூடங்களிலும் அரண்மனை அந்தப்புரத்திலும் மணவறைப்பந்தலைப் பூவினலலங்கிரதஞ்செய்து சித்திரங்கள் முதலிய அனேகவிபவங்களுடன் அலங்கரித்துப் பதை ப் பருவீராசன்கண்டுமேகிழ்ந்து மந்திரிக்குச்சொல்லுகிறவிதங்காணீர்.

இராசன்மந்திரிக்குச்சொல்ல

அவர்பறைசாற்றுபவர்க்குச்சொல்-விருத்தம்.

வகையுள்ளமந்திரிகேளாய் மகள்மணஞ்செய்வதாகித்
நகருள்ளோரெல்லையாவும் நாடிவேவருமச்செய்வாய்
அகப்புகழரசரோரே அப்படிச்செய்மேனென்று
சகுப்வீரர்பறைசாற்ற மன்னத்தமதாக்கேபோமலசெய்வேன்

வசனம்.

கேளாயென்மனதுக்கேற்றசூரே- என துதலப்புத்திரியாகிய மிகர்பானுக்கு இப்போது நிகாவென்னும் கலிய ணம்செய்யவே ண்டியிருப்பதால் இந்நகரத்துள்ளோர்களும் அன்னியதேசத்தார் முதலானபேர்களும்-காஜி-கத்திபு-லெப்பைஆலிம் இவர்களெல்லாம் மணவறைப்பந்தலுக்கு வரும்படியாய்ச்செய்வீர்மந்திரியே



மந்திரி-வசனம்.

அப்படியே செய்விக்கிறேன்சிரோமணியானதவுலத்தே (மட-பறை-சி-சொ-வ ம்) அகோகேளாய் பறைசாற்றும்வீரனே பருவீர ராசாவுடையமகள் மிகர்பானுக்கும் அவருடனேதர்க்கஞ்செய்து ம லாவுக்குப் பொருள்சொன்ன அப்பாசுமன்னவருக்கும் நிக்காமு டிப்பிக்கப்போறதால் யாவத்திராளுமமணவறையில் வரும்படியாய் பறைசாற்றிவாரும்பிள்ளாய் (ப-சி-சொ-வ-ம்) அப்படியேதெரியப் படுத்தி வருகிறேன்சிரோமணியாகிய மந்திரியே.

பறைசாற்றுகிற-தரு-ஆனந்தக்களிப்பு இ-ம்-புந்நாகவராளி.

அந்நகர்பறையடிப்பவன்-நன்று
மதித்திடவேயார்க்குஞ்சொலிப்படிப்பவன்
மந்திரிசொல்லினைப்போற்றி-நல்ல
மணிமுரசானதையானைமேலேற்றி
தந்திரமாய்ப்பறைசாற்றி-சிறந்த
தனிநகர்தெருவெல்லாந்தான்மலர்தூற்றி (அந்த)
அன்னகரிலுள்ளோரறிந்திட்டார்-வந்த
அரசர்களெல்லோருமனதத்தெரிந்திட்டார்
தன்னமகுணமுள்ளோர்புகழ்ந்திட்டார்-கற்று
நாட்டிலுள்ளோர்களுநாடிமகிழ்ந்திட்டார் (அந்த)
சாற்றிடவேகூடிவந்தனர்-மணந்
தன்னையேநாடியேதானுகந்தனர்
மாற்றுவிநோதங்கள்மகிழ்ந்தனர்-அந்த
மணப்பந்தல்தனிலேமகிழ்வாய்நிறைந்தனர் (அந்த)

பொது-விருத்தம்.

நகரெங்கும்ப...ள்சாற்றும் நன்மொழிகேட்டோரெல்லாம்
மகிமைசேர்மிகர்பானுக்கு மணத்தனைமுடிப்பதற்கு
அகப்புகழ்பருவீரேந்த்ர லவரோமந்திரிகுழ
தகுமணப்பந்தல்தன்னில் காஜிஆலியும்வந்தாரோ

இதுவுமது-கொச்சகம்.

அந்தமுளப்பந்தல்தனிலல்லவருஞ்சேர்ந்திடவே
இந்தபருவீருமெல்லோருக்குமரியாதைசெய்து
பந்தலாசர்களிருக்கும் பாவனையோலிருக்கச்சொல்ல
சிந்தைமகிழ்ந்திருக்கஜெய அப்பாசும் வந்திருந்தார்.

வசனம்.

அகோதெப்படியென்றால் முரசடிப்போன் நகர்முழுவதும்ம ணத்தைக்குறித்துச்சொல்லி முரசடிக்கவே அந்நகரத்திலும் நாட்டி லுமுள்ளயாவத்திராளும் பிரதேசத்திலுள்ள ராசாக்களும்-ஆ

வீர்-லெப்பை-காஜி-சத்திபு-பணவளாப்பந்தலில்வந்துசேரப்குவீரராசனும் அவர்மந்திரிமுதலியபேர்கள்சூழ இந்தப்பந்தலில்வந்து இராசன் யாவத்திரர்களுக்குமரியாதைசெய்து அவரவர்களிருக்கும்படியாகிய கிரமட்பிரகாரம் இருக்கச்சொல்ல அவர்களப்படியிருக்கையில் அந்தமான்ஷேசத்தையாண்ட அகம்மதுசாபுதல்வன் அப்பாசென்பவர் மிகர்பானைமணஞ்செய்வதற்காக மணவளாப்பந்தலின்மத்தியிலிருக்கும் தகத்தில்வந்திருக்க இனிமேல்நடக்கப்போகிறவிதங்காண்க.

கலியாணத்-தரு-இ-ம்-நாட்டை-அடதாளம்.

மன்னவனுர்பகுவீரராசன்மனம்துதான்மகிழ
தன்னயமதாசலெல்லோருநாடியனமகிழ்வாய்
எண்டிசையோர்போற்றும்-அப்பாசுவென்னுமாசருக்கும்
வண்டுறைமலர்சூடு-மிகர்பான் மாதுமின்னுள்தமக்கும்
வந்தகாஜி அத்திபுஆலிமகிழ்வுளலெப்பைகளும்
சிந்தைமகிழ்வாசயார்கப்படி சிறப்பாய்மணமுடித்தார்
நிக்காமுடிந்தபின்பு-நல்ல-நெறியாப்பாத்திகைவோதி
அக்கனிடந்தனிலெயெல்லவரு-மன்பாய்த்துவாக்கேட்டு
மன்னனப்பாஜாசை-பகுவீர்-மகளிருக்குமறையில்
அன்னேரமேயழைத்து மிகர்பா-னவளருகிலிருத்தி
கையதனைப்பிடித்து-இருவரும்-கனமுடன்வாழ்வியொன்று
தையலர்கள்வாழ்த்த-மற்றுந்-தாதியர்கள்போற்ற
ஒண்டொடிதாதியர்கள்-ஆலாத்தி- உசப்புடனேற்ற
அன்று அப்பாசுமன்னன்-மிகர்பான்-அகமகிழ்ந்தேயிருக்க
வந்த அரசருக்குப்-சீன-மடநகருள்ளவர்க்கும்
சிந்தைகளிகூர்ந்து-காஜிலெப்பை-ஜயஆலிமத்திபுக்கும்
சிங்கன்பகுவீரும்-ஒசிவனம்-சிறப்பாகவேகொடுத்து
துங்கத்தாம்பூலமுடன்வெகுமதி-தரிதமாய்த்தான்கொடுக்க
வந்தவொல்லோரும்அவரவர்-வாழ்மனைபோய்ச்சேர்ந்தார்
அந்தப்பகுவீரும்-மனைவியும்-அகமகிழ்ந்தேயிருந்தார்.

பொது-கட்டளைக்கலித்துறை.

மன்னனப்பாசுமாதுமிகர்பானும்
மனமகிழ்ந்துருவிச்சுகிக்கையில்
அன்னைதந்தையிருவரையுஞ்சிந்து
அரசன்தன்னிடம்விட்டாறுமாதமாய்



இன்னங்கண்ணினிற்காணுதிருப்பது
யேர்க்குமோயிறையோனுக்கென்றெண்ணியே
தன்னுடன்வாலாறுமுழுமையுந்
தையலர்க்குணாத்தபின்னுஞ்சொல்லுவார்

வசனம்.

இந்தப்பிரகாரம் அப்பாசுக்கும்மிகர்பானுக்கும் நிக்காமுடிந்தபின் பகுவீரராசன் சகலமானபேர்களுக்கும் உணவுமுதலியதாம்பூலங்கொடுத்துகாஜி முதலியபேர்களுக்கும்வெகுமானமுதலியதுமளிக்க அவரவர்களிடத்திற்குப்போய்மகிழ்ச்சியோடிருக்க யெல்லோனுமாப்பிளையும் ஆறுமாதம்வரையில் ஒன்றுக்கொன்றுபிரியாவிடையாயிருக்கையில் அப்பாசென்பவர் தந்தைதாயைவிட்டு நாளாகிப்போச்சுதே நமதுநகரம்போய்ச்சேரவேணுமேயென்று தன்னிடவரலாறனைத்தும் மனைவிமிகர்பானுக்குச்சொல்லித் தன்னூருக்குப்போகப் பிரயாணப்படுகிறதற்காக மனைவிக்குச் சொல்லுகிறவிதங்காண்க.

அப்பாசு-மிகர்பானுக்குச்சொல்லுகிறந்த-தரு.

என்னிடமனதுக்கேற்ற யெழிலிழைமிகர்பானேகேள்
அன்னை தந்தையரைவிட்டு ஆறுமாதமானதாலே
உன்னிடதந்தைதாய்க்கு வகப்பனுடன்சொல்லிக்கொண்டு
பொன்னமையாய்விடைகொடுக்கப்
போவோம்வாராய்-பெண்மயிலேநாம்
போவோம்வாராய்
போவோம்வாவென்றன் பூமியதனைப்பாள
புண்யமனிதர்வாழ்ந்த-புகழரசர்கள்போற்ற (போவோம்)
அன்னமேயென்மனதாகியசொர்ணமே
அதிசீக்கிரமதாயிவ்வனிக்கர்தனைவிட்டுப் (போவோம்)
தந்தைதாயிருக்கும் தனிநகர்தனிற்சேர்ந்து
தானவர்களைக்கூடித் தனியாசாளவே. (போவோம்)

பொதுவிருத்தம்.

இந்தவிதமப்பாசுசொல்லும்போது எழில்மிகருபானுமனமிசைந்தேயொத்து தந்தைபகுவீர்தனக்குமகளுஞ்சொல்லத்தாய்கேட்டு மயங்கிப்பின்னிருவர்தேர்ந்து; அந்தமாய்ப்பணிபொருள்கள் வரிசையாக அனேகாதபரிகரிகளியாவுமீந்து; விந்தையொடுவிடைகொடுக்கப் பெற்றுக்கொண்டு மேவுநகர்தனைவிட்டுச்செல்கின்றாரே.

வசனம்.

அகோதெப்படியென்றால் அப்பாசு மனைவியைப் பார்த்து நாமிருவரும் என்தந்தைதாயைக்கூட்டி என்னகரம்போய் அரசாளவேண்டியதானபடியால் உன் தாய்தந்தையிடத்தில் சொல்லிவாவென்ன அப்படி

யே தந்தைதாயிடத்திற்சொல்ல அவர்கள்கேட்டு வருத்தமுற்றுப் பின்புமனந்தேர்ந்து இரதகஜதுரகபதாதிகளென்னும் நால்வகைச்சேனையையும் அனேகம்பொருள் முதலியபணிகளையும்-தாதிகளையும் வரிசையாக இனங்கொடுத்து விடையுங்கொடுக்க இதுகளையெல்லாம் பெற்றுக்கொண்ட அப்பாசுமன்னனும் மிகர்பானும் மற்ற யாவதிராளும் அந்நகரைவிட்டு தன்னகருக்குச்செல்லுகிறவிதங்காண்க.

அப்பாசு-வழிநடக்கிற-தரு-இ-ப-ஆனந்தபைரவி-ரூபகதாளம்.

வெற்றிப்புரவிமேலப்பாசுமன்னனுமேறினர்-அப்போ
சித்தமகிழ்வாய்மிகர்பான்முத்தப்பல்லக்கேறினன்
நால்வகைச்சேனையும் ரதகஜதுரகமுஞ்சூழவே-வழி
எல்பாய்நடக்கக்கண்டோன்றாடியில்வந்துதாழும்வ
னநகரின்தெருவுங்கடந்து நடந்தனர்-அன்று
கானகந்தாண்டிக்கரியமலையையுங்கடந்தனர்
கடந்திடும்போதிலோர்கனகமயகனைக்கண்டார்-இரவு
அடர்ந்ததாலிங்கிருந்தெல்லோருநாளைச்செல்வோமென்றுரை
வந்திடுஞ்சேனையுமன்னனுமங்கேயிருந்திட-அப்போ
பந்தயிருள்நீங்கிப்பானுவும்வந்தேபொருந்திட
விடிந்தேயெழுந்துவிரைவாய்ச்செல்வோமெனவொப்பினர்-அங்கு
கடிதம்போட்டகினைக்கண்டுமிகர்பானுக்குச்செப்பினர்
சொல்லிடக்கேட்டுமனைவியும் ராஜனும்புல்கையில்-முன்
அல்லற்பட்டுவந்தஅரும்பாதையுங்கடந்துசெல்கையில்
சிந்துநகர்தனைமுந்தித்தெரிந்திடப்பார்த்தனர்-அப்போ
அந்நகராளுமரசனிப்படைகண்டுவேர்த்தனர்

பொது-விருத்தம்.

அப்பாசுசேனையோடு அந்நகர்க்கேகும்போது
செப்புந்தாபீதுராஜன் சேர்ந்திடுந்தளத்தைக்கண்டு
ஒப்பிலொன்றோவென்று ஒருதூதையனுப்பிக்கேட்க
தப்பிலாவகம்மதின்றன் றனயனென்றறிவித்தானே,

இதுவுமது,

தூதனுமுரைக்கக்கேட்ட தோன்றல்தாபீதுராஜன்
பேதகமிலாமகிழ்ந்து பெருக்கமாயெதிரேசென்று
நீதமாயழைத்துத்தந்தை தாயின்றனிடத்திற்சேர்க்க
வீதமாய்ச்சென்றுவந்த விபரஞ்சொன்னாதிருந்தார்.

வசனம்.

அகோதெப்படியென்றால் அப்பாசுமன்னனும் மிகர்பானும் நால்வகைச்சேனைகளுஞ் சூழ [illegible] பிரயாணப்பட்டு - காடு - செடி - மலை - வனம் - யாவுங்கடந்து தங்கவேண்டிய இடங்களிலேயுந் தங்கி முன்னவதிப்பட்டுப்போன பாதைகளையெல்லாங்கடந்து சிந்துதேசம்வந்துசேர அந்நகரையாளுந் தாபீதாசன்கண்டு பகைவரோவெ



ன்று தூதனையனுப்பிக்கேட்க அவர்கள்வந்தவர் அகம்மதுசா மகனென்று சொல்ல அரசனதைகேட்டு நால்வகைச்சேனைகளுடனே எதிர்சென்றுபோய் அழைத்துக்கொண்டு அகம்மதுசாவும் அவர்மனைவியு மிருக்கிற அந்தப்புரத்திற்குப்போய்ச்சேர அவர்கள் புதல்வனைக்கண்டு சமூகவிப் பின்புதாபீதாசனும் அப்பாசும் அவர்தந்தைதாயும ஒன்றுகூடி நடந்தசெய்கின்ற இவர்களைவிட்டுப்போனநாள்முதல் வந்தவரையிலும் நடந்தசெய்திகைகளைச்சாங்கோபாங்கமாய்ச்சொல்லிக்கொண்டிருக்கையில் இனிநடக்கிறவிதங்காண்க.

அப்பாசும்-தாபீதும்ன்னனும்சொல்-விருத்தம்.

தடம்புயதாபீதேகேள் தாய்தந்தையுமதிடத்தில்
அடமானம்வைத்தபொன்னை யளிப்பேனுன்வாங்கிக்கொள்வீர்
நடம்பரிநடத்தும்ராசே நவில்வதுமழகதாமோ
இடமபொருளேவலெல்லா மும்மிடசொந்தத்தானே.

வசனம்.

கேளும் என்தந்தைதாயைவைத்து ஆதரித்து எனக்கும் உதவிசெய்ததாபீதராசரே முன் உம்மிடத்தில் அன்னைபிதாவை அடவுவைத்து வாங்கிப்போன பொன்னைத் தருகிறேன் வாங்கிக்கொள்ளுமன்னரே.

தாபீது-சொல்வசனம்.

சேரும்இராஜராஜர்களும் நாளுந்துதிக்கும்படியான சிம்ம மேருவே இந்நகரமும் சகலபொருள்களும் படைமுதலிய நானும் உம்முடையசொந்தமேயொழிய வேறல்ல ஆனால்நான்தெரியாமற்செய்த அபசாரத்தைப்பொறுத்துக் காப்பாற்றவேணும் ராசசிகாமணிகளே.

பொது-விருத்தம்.

அன்றுதாபீதாசன்வந்தபேர்க்கும் அந்நகரிலுள்ள மனுவானபேர்க்கும், இன்றுகளிகூர்ந்திடவேவிருந்தளித்து செயவப்பாசுக்குமவர் தந்தைதாய்க்கும்; நன்றுவிடைகொடுத்தனுப் பவதனைப்பெற்று நான்குவகைச்சேனையொடும் நகருக்கேக,வென்றியதாய்ச்செல்கையில்முன் வீழுந்துசேர்ந்த விடமதனிற்போயிறங்கி விடுதிசெய்தார்.

இதுவுமது,

விடுதிசெய்துவுணவருந்திவிடிந்தபின்புவெய்யசுரமதனிலோர்பள்ளிகட்டிப்படியிலுளநகரமெல்லாந்தோர்க்கச்செய்யும்படியாகவோர்நகரந்தனையுண்டாக்கி, அடைவுபெறமனிதர்களைக்குடியுமேற்றி அந்நகர்க்குவொருவர்தனையரசனாக்கி,விடியுமுன்னேநகரைவிட்டுப்பதாதிசூழவேநாந்தமாநகர்க்குமேவினரோ.

வசனம்.

அகோதெப்படியென்றால் சிந்துதேசத்தையாளும் தாபீதரசன் அகம்மதுசாபுதல்வன் அப்பாசுக்கும் அவரோடு கூடவந்த நால்வகைச்சேனைகளுக்கும் அந்நகரத்திலுள்ள அனைவர்களுக்கும் அறுசுவை [illegible] யோடு விருந்தளித்து அவர்களுக்கு விடைகொடுக்க,அவர்கள் [illegible]ரமாய் முன்வந்தவழியே நடக்கையில் முன்வருகையில் அப்பாசுதவறி

விழுந்தயிடமாகிய பாலைநிலத்திலிறங்கிக் கூடாரமடித்து விஸ்தீர்ணமாகிய ஓர்பள்ளியுங்கட்டி எந்தவூர்களும் நிகரோவென் றெண்ணும்படியான ஒருபுதுநகருமுண்டுபண்ணி அதில் மனிதர்களைக்குடியேற்றி அந்த நகரிலொருவரை அரசனுக்கிவைத்து அதைவிட்டுப்பிரயாணமாகி தமது அந்தமாநகரத்துக்கடுத்த மைதானத்திற் கூடார மடித்திருக்கையில் இவிநடக்கிறவிதங்காண்க.

பொது-விருத்தம்.

மேவியநகரடுத்து வெளியிலிவிருக்கும்போது
தாவியேயரசையாளுந் தன்மந்திரிகருளோர்க்கும்
வேவுதூதனையனுப்ப விரைவுடனவர்க்குச்சொல்ல
தாவுமந்திரியூராருஞ் சனுதியில்வந்துகண்டார்.

இதுவுமது.

கண்டுமேமந்திரியூரார் கனதுதிசெய்துபோற்றிப்
பண்டகமதுசாமைந்தன் பார்த்திபனப்பாசேயும்
நன்றதாயழைத்துக்கொண்டு நகர்வலஞ்சுற்றிவந்து
அன்றரண்மனையிற்சேர்ந்து அகமகிழ்ந்திருக்கவப்போ

இதுவுமது.

அந்தமாநகரைச்சார்ந்த அரசர்க்குத்தூதனுப்ப
பந்தமாயரசர்கேட்டுப் பதாதிகள்குழுமழுந்து
வந்ததோரரசரெல்லாம் மகம்மதுசாவுக்குச்
சொந்தமாய்ப்பட்டங்கட்டுஞ் சுபமதைச்சொல்லுவோமே.

வசனம்.

அதேதெப்படியென்றால் அகம்மதுசாவும் அவர்புதல்வன் அப்பாசும் அந்தமாநகருக்கடுத்த வெளியிலிருந்து மந்திரிக்கும் அவ்வூராருக்கும் ஒருதூதனையனுப்ப அதன்போய்ச்சொல்ல அவ்வூராரும் மந்திரியு மெதிர்வந்தழைத்து நகரைவலம்வந்து அந்தப்புரத்திற்போயிருந்து தமது நகரைச்சேர்ந்த ராசாக்களுக்கெல்லாம் தூதனுப்ப அவர்கள் கேட்டு அரவரவர்கள் தன்சேனைகளுடனே அந்தமாநகரம்வந்து சேர்ந்து அகமது சாவையும் அப்பாசையுங்கண்டு அடிபணிந்து காழ்ச்சியுடனிருந்து அகம்மதுசாவுக்குப்பட்டங்கட்டுகிறவிதங்காண்க.

பொது-விருத்தம்.

உகப்புடனுடைதரித்து வுற்றதோரக்கிபூட்டி
முகப்பிலிவிலங்கச்செய்யு முத்தாரப்பணிகள்பூட்டி
மகப்பெறும்அகமதுசா மதிசேர்மகுடந்தன்னை
செகப்பிரகாசமாகச் சிரசிலணிந்திட்டாரே



பட்டாபிஷேகஞ்செய்கிற-தரு-இ-ம்-உசேனி-ஆதிதாளம்

பல்லவி.

பட்டாபிஷேகஞ்சூட்டினார் அகம்மதுசாய்புக்குப் (பட்டாபி)

அநுபல்லவி.

அட்ட திசையும்போற்றும் அரசரெவரும்போற்ற
பட்டவர்த்தனர்வேதப் பண்டிதருலகோரேற்றப் (பட்டா)

சரணங்கள்.

அடரும்படையிலங்க-இடறுமன்னர்கலங்க
படருஞ்சபைதுலங்க-துடருமன்னவர்மார்பில்

அனந்தநவமணி-புனைந்தமதனென
வனைந்தராஜர்கள்-நினைந்துசபைவந்து

அண்ணல்தனைத்துதித்து அரசர்திறைகுவித்து
அரியசிம்மாதனந்தில் வரிசையாய்த்தாமமர்த்திப் (பட்டா)

சந்த்ரனுதையமென்ன இந்த்ரனுமீடோவென்ன
வந்தோரெவருந்துன்ன அந்நகர்முழுதும்

அந்தர்பேரிகை திந்திந்திம்மென
முந்தியவாத்தியந்-தொந்தொந்தோம்மென

வந்த அரசர்மிக சிந்தையிற்களிகூற
வல்லவர்களுமேற்ற அல்லவர்களும்போற்ற (பட்டா)

மங்கையர்கவிரிபோட துங்கவாணர்கவிபாட
நங்கையர்நடனமாட பொங்குங்கடலெனவே

வங்கர்மராடர்கலிங்கர்கர்னடர்
சிங்களர்கொங்கண ரெங்குளபேர்களும்

வந்தகமதுசாவைவாழ்த்த சிந்தையிற்களித்துப்போற்ற
வல்லசெங்கோலையேந்தி எல்லோர்களையுங்காக்கப் (பட்டா)

பொது-விருத்தம்.

நயம்வரமகுட முடிபுனைந்ததற்பின்
நற்கொடையிரவலர்க்கீந்து
வியனுளதேச விசாரணைசெய்து
மேதினிபதனிற்செங்கோலைச்
செயமுடனாண்டு தேசமுள்ளோர்கள்
செழிப்புடன்வாழ்ந்துகொண்டிருக்க
தயவகமதுசாதனையனப்பாசும்
தையலரோடும்வாழ்ந்திருந்தார்

வசனம்.

அகோதெப்படியென்றால் அகம்மதுசாவுக்கு அந்தமாககனா இ. ண்டார்வது பட்டமாள்வதற்குச் சகலதேசமன்ன மன்னவர்களெல்லெ ஞ் சூழச்செங்கோல் கையிலேந்தி ஏகசக்கிராதிபதியாயிருந்து தனது ணேவியும் புதல்வனுகிய அப்பாசுமன்னனும் அவர்மனேயாள் மிகர்ப னென் னும்பெண்ணும் நீதியோடரசாண்டுநீனெறிசெலுத்தி யாதொரு குறைவுமில்லாமல் மங்களகரமாய் வாழ்ந்திருந்தார்களென் றறிவீர்கள௱ கவும்.

வாழி-விருத்தம்.

ஆதியிறசூல்நாயியார்சஹுடன்வாழி
அசுகாபிமார்களும்அசனுசைனும்வாழி
வேதவர்கள்மாதவர்கள்மெய்யோர்கள்வாழி
வேந்தரகமதுசாவுமனேவியரும்வாழி
நீதிசேரப்பாசுமன்னனும்வாழி
நிகரிலாமிகர்பானும்நீதியுடன்வாழி
ஆதியருளால்நாறுமசலாவின்தன்னே
யாவருமகிழ்ந்திடவேநாடகமாய்ச்சொன்ன
கோதிலாராமநாதப்புரத்தில்வாழுங்
குணமுள-ப-வெ-முகம்மதுபுருகீம்வாழி
நீதிலாநெல்வேலிநகரந்தில்வாழுஞ்
செயமேவுவக்காள்முகம்மதுராவுத்தர்
காதலன்மகுதன்னராவுத்தர்வாழி
கற்றவர்கள்மற்றவர்கள்கருதியச்சிட்ட
ஜோதிதவழொற்றியூர்தனில்வாழ்வேளாளச்
சுமுகஞம்பாசுராமப்பிரபுவாழியதே

ஆமீன் ஆமீன் யாறப்பில் ஆலமீன்,

# அப்பாசு நாடகம்.

---*---

முற்றிற்று.